வி. பி. ஃபிலாத்தவ்

# வி. இ. லெனின் எழுதிய “என்ன செய்ய வேண்டும்?”

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

15/-

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன், எம். ஏ.

**Филатов В. П.**
О РАБОТЕ В. И. ЛЕНИНА
«ЧТО ДЕЛАТЬ?»
*на тамильском языке*

**Filatov V. P.**
LENIN'S "WHAT IS TO BE DONE?"
*in Tamil*

© Progress Publishers, 1987

© தமிழ் மொழிபெயர்ப்பு

முன்னேற்றப் பதிப்பகம், 1988

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Ф $\frac{0102020000-053}{014(01)-88}$ 349—88

ISBN 5-01-000867-x

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . 5

1. ''என்ன செய்ய வேண்டும்?'' என்னும் நூல் எழுதப்பட்ட காலத்திலிருந்த வரலாற்று நிலைமைகள் . . . . . 9

ருஷ்யா ஏகாதிபத்திய சகாப்தத்துக்குள் நுழைகிறது . . . . 9
தொழிலாளர் இயக்கம், மார்க்சியம் மற்றும் புரட்சிகரமான அமைப்புகள் . . . . . . . . . . 23
மார்க்சிய வளர்ச்சியில் லெனினியக் கட்டத்தின் தொடக்கம் . . . 31
கடந்த காலப் புரட்சிகர அனுபவத்தைப் பற்றிய அணுகுமுறை 49
திருத்தல்வாதத்தை எதிர்த்து லெனின் நடத்திய போராட்டம். 60

2. விஞ்ஞான சோஷலிசமும் தொழிலாளர் இயக்கமும் . . 77

தொழிலாளர் இயக்கத்தில் புறவய மற்றும் அகவயக் காரணிகளுக்கு

இடையிலுள்ள உறவைப் பற்றி 80
புரட்சிகர இயக்கத்தில் மார்க்சியத் தத்துவத்தின் பாத்திரம் . . . 82
தொழிலாளர் இயக்கத்துக்குள் விஞ்ஞான சோஷலிசத்தைக் கொண்டு செல்வதில் கட்சியின் பாத்திரம். 97
3. புரட்சிகர மற்றும் சீர்திருத்த வாதக் கொள்கைகள் . . . 110
புரட்சிகரக் கொள்கையின் சாராம் சம் . . . . . . . . . . 111
ஜனநாயகத்தின் முன்னணிப் போரா ளியான தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கல்வி . . . . . . 123
4. புதிய ரகத்தைச் சேர்ந்தகட்சி.
ஸ்தாபனக் கோட்பாடு கள் . . . . . . . . . . . 134
ஸ்தாபனத்தின் திறனை உயர்த்து தல் . . . . . . . . . . 135
மத்தியத்துவமும் ஜனநாயகவாத மும் . . . . . . . . . . 149
கட்சியை அமைக்கின்ற திட்டம். அரசியல் பத்திரிகையின் பாத் திரம். . . . . . . . . . 152
5. லெனின் எழுதிய ''என்ன செய்ய வேண்டும்?'' என்ற புத்த கத்தின் வரலாற்று முக்கியத்து வம் . . . . . . . . . . 156
சொற்றொடர் விளக்கம் . . 174

## முன்னுரை

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் லெனின் எழுதிய **என்ன செய்ய வேண்டும்?** என்னும் நூல் சிறப்பான புரட்சிகர மார்க்சிய ஆராய்ச்சியாகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ருஷ்யா ஏன் உலகப் புரட்சிகர இயக்கத்தின் மையமாக மாறியது, அது ஏன் சோஷலிச சமுதாயத்தைப் படைத்தது, அங்கே தொழிலாளி வர்க்கத்தின் உண்மையிலேயே புரட்சிகரமான மார்க்சியக் கட்சி, ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தை மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியில் வெற்றிக்கு இட்டுச் சென்ற புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சி, சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கு ருஷ்யாவில் எல்லா மக்களினங்களின் முயற்சியையும் ஒன்றுபடுத்தி வழிகாட்டிய கட்சி ஏன் அமைக்கப்பட்டது என்பதை அப்புத்தகம் தெளிவாக விளக்குகிறது. லெனின் எழுதிய **என்ன செய்ய வேண்டும்?** என்னும் புத்தகம் 1902 மார்ச்சில் வெளியிடப்பட்டது. ருஷ்யா அதன் முதல் புரட்சியின் விளிம்பில் நின்று கொண்டிருந்தது; அதை லெனின் வார்த்தைகளில் கூறுவதென்றால் “ ‘புரட்சிக்காரர்களைக்

கொண்ட அமைப்பைத் தாருங்கள், ருஷ்யாவைக் குப்புறக் கவிழ்ப்போம்!' (ஒரு பிரசித்தி பெற்ற கூற்றை மாற்றிச் சொல்கிறேன்) என்று சொல்லியிருக்கத்தக்க வரலாற்றுத் தருணத்தில்''* இருந்தது. ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கம் தீவிரமான நெருக்கடியில் சிக்கியிருந்தது. லெனின் ருஷ்யாவில் சமூக-ஜனநாயக இயக்கத்தின் ''சூடேறிய பிரச்சினைகளைப்'' பற்றி இப்புத்தகத்தில் எழுதினார். லெனின் இப்பிரச்சினைகளை விரிவாக ஆராய்ந்து எழுதினார்; தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த அக்காலகட்டத்தில் ருஷ்யாவின் புரட்சிகர மார்க்சியவாதிகள் என்ன செய்ய வேண்டும் என்று லெனின் ஆலோசனை கூறினார். லெனின் புதிய வரலாற்று நிலைமையை முழு அளவில் கணக்கிலெடுத்துக் கொண்டு தொழிலாளி வர்க்கத்துக்குப் போர்க்குணமிக்க, புரட்சிகர மார்க்சியக் கட்சி அவசியம் என்பதை நிரூபித்தார்; புரட்சிகரமான நடவடிக்கையில் ஈடுபடுகின்ற, தொழிலாளி வர்க்கத்தையும் உழைக்கின்ற பெருந்திரளான மக்களையும் சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற பொழுது, சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நோக்கிச் செல்கின்ற சமூக

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1979, பக்கம் 392.

முன்னேற்றத்தின் பொழுது எதிரிடுகின்ற இடையூறுகளைச் சமாளிக்கின்ற தகுதியுடைய, புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியைப் பற்றிய விஞ்ஞான ரீதியான தத்துவத்தை முன்வைத்தார்.

புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியைப் பற்றிய தத்துவம் சிறப்பான வாதமுறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது; கட்சியின் சித்தாந்த, அரசியல் மற்றும் ஸ்தாபனக் கோட்பாடுகளை விளக்கியது. அத்தத்துவம் ருஷ்யாவின் புரட்சிகரமான மார்க்சியவாதிகள் மீது தீர்மானகரமான தாக்கத்தைச் செலுத்தியது; கட்சியின் பிற்கால வளர்ச்சியை, அதன் வேலை முறைகளை, அதன் உறுப்பினர்களுடைய தன்மையை நிர்ணயித்தது. அது கட்சியின் குறிக்கோள்களையும் அவற்றை நிறைவேற்றுவதற்குரிய வழிகளையும் நிர்ணயித்தது. 20ஆம் நூற்றாண்டில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் மீது இத்தத்துவம் தீர்மானகரமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

லெனினும் அவரைப் பின்பற்றியவர்களும் இத்தத்துவத்தின் அடிப்படையில் 1903ஆம் ஆண்டில் போல்ஷிவிக் கட்சியை நிறுவினார்கள். அக்கட்சி எடுத்துக் கொண்ட வரலாற்றுக் கடமையை — தொழிலாளி வர்க்கம் மற்றும் நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கம் அல்லாத பெருந்திரளான உழைக்கும் மக்களை, எவ்வளவு சோதனைகள் ஏற்பட்

டாலும், சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்கு இட்டுச் செல்கின்ற, அதன் பிறகு சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிக்கின்ற கடமையை —நிறைவேற்றுகின்ற தகுதியைக் கொண்டிருந்தது.

இன்றும் இக்கட்சி—சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி—அது நிறுவப்பட்ட காலத்தில் வகுத்தளிக்கப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளையும் அம்சங்களையும் தக்க வைத்துக் கொண்டு வளர்த்துக் கொண்டிருக்கிறது; ஆகவே இக்கட்சி சோவியத் மக்களுக்கு அரசியல் ரீதியில் தலைமை தாங்குவதற்கு, அவர்களுடைய எல்லாச் சாதனைகளையும் அமைப்பதற்குத் தகுதியுள்ளதாக இருக்கிறது.

லெனின் எழுதிய என்ன செய்ய வேண்டும்? என்னும் நூல் சோவியத் யூனியனில் ஆட்சி புரிகின்ற அரசியல் கட்சியின் தன்மை மற்றும் குறிக்கோள்களை சிறப்பாக விளக்குகிறது; அது கடைப்பிடிக்கின்ற சமாதான பூர்வமான வெளிநாட்டுக் கொள்கைக்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதந்திரம், விடுதலை, சமாதானம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்குப் போராடுகின்ற அனைத்து மக்களுடனும் அதன் ஒருமைப்பாட்டுக்கும் உரிய ஆழமான காரணங்களை முற்றாக விளக்குகிறது.

# 1. "என்ன செய்ய வேண்டும்?" என்னும் நூல் எழுதப்பட்ட காலத்திலிருந்த வரலாற்று நிலைமைகள்

என்ன செய்ய வேண்டும்? என்னும் நூலில் லெனினுடைய கருத்துகளின் ஆழத்தை, கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் புரட்சிகரச் செயல்முறையில், முன்னணியிலுள்ள மார்க்சிய-லெனினிய மற்றும் புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளின் நடவடிக்கைகளில் அவற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு இப்புத்தகம் எழுதப்பட்ட வரலாற்று நிலைமைகளைப் பற்றி ஒருவர் சிறிதளவேனும் அறிந்திருக்க வேண்டும்.

## ருஷ்யா ஏகாதிபத்திய சகாப்தத்துக்குள் நுழைகிறது

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மனிதகுலம் ஒரு புதிய சகாப்தத்திற்குள் நுழைந்தது. பழைய முதலாளித்துவம், சுதந்திரமான போட்டிக் கொள்கையைப் பின்பற்றிய முதலாளித்துவம் புதிய, ஏகபோக முதலாளித்துவத்துக்கு—ஏகாதிபத்தியத்துக்கு—வழிவிட்டது.

முதலாளித்துவம் ஓங்கி வளர்ந்த முந்திய காலகட்டத்தில் கூட முதலாளித்துவ

சமுதாயம் தொழிலாளர்களின் வர்க்க நடவடிக்கைகளால் பன்முறை ஆட்டப்பட்டிருந்தது. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் நடைபெற்ற வர்க்கப் போராட்டம் வரலாற்று நிகழ்வுப் போக்குக்கு அடிப்படையாக இருந்தது.

புதிய சகாப்தத்தில் முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் அனைத்தும் மிகவும் அதிகமான அளவுக்குத் தீவிரமடைந்தன. புதிய முரண்பாடுகள்—ஏகாதிபத்திய முரண்பாடுகள்—தோன்றின; இவை காலனிகளுக்கும் ஏகபோகங்களுக்கும் இடையில், ஏற்கெனவே கூறுபோடப்பட்டிருந்த உலகத்தை மறுபடியும் பிரித்துக் கொள்வதற்காக ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையில் தோன்றின. இந்த முரண்பாடுகள் உலக நெருக்கடிகளையும் கொள்ளையடித்தலை நோக்கமாகக் கொண்ட ஏகாதிபத்திய யுத்தங்களையும் தோற்றுவித்தன.

பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நடைபெற்றன. காலனிகள் மற்றும் சார்பு நாடுகளின் மக்களினங்கள் காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டுவதற்காகக் கிளர்ந்தெழுந்தன. இனி முதலாளித்துவம் வீழ்ச்சியடைகின்ற, சோஷலிசப் புரட்சிகள் வெற்றியடைகின்ற, சோஷலிசத்துக்கு மாறுகின்ற புதிய சகாப்தம் தொடங்கப் போவதை இவை அனைத்தும் எடுத்துக் காட்டின.

அந்தக் காலகட்டத்தில் ருஷ்யா எப்படி இருந்தது? தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் நிலை எப்படி இருந்தது? எந்த முரண்பாடுகள் சமூக வளர்ச்சியை நிர்ணயித்தன? ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் வகித்த பாத்திரம் என்ன?

19ஆம் நூற்றாண்டின் கடைசியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ருஷ்யாவின் பொருளாதார, சமூக, அரசியல் வளர்ச்சியை லெனின் அகல் விரிவான முறையிலும் அதிக ஆழமாகவும் பகுப்பாய்வு செய்தார்.

ருஷ்யாவில் ஒரு பக்கத்தில், பெரிய அளவுத் தொழில்துறை வேகமாக வளர்ச்சியடைந்திருப்பதும், மறு பக்கத்தில் விவசாயம் பின்தங்கியிருப்பதுடன் மெதுவான வளர்ச்சியைக் கொண்டிருப்பதும் உற்பத்திச் சக்திகளின் குணாம்சம் என்பதை அவர் விளக்கினார். தொழில்துறை மிகவும் அதிகமான அளவுக்குக் குவிந்திருப்பதும் ஏராளமான புதிய தொழில் நிறுவனங்கள் ஏற்பட்டிருப்பதும் தொழில்துறையின் வளர்ச்சியின் பிரத்யேகமான கூறுகளாக இருந்தன.

ருஷ்யாவிலிருந்த தொழிற்சாலைகளில் சுமார் அரைப் பங்கு 19ஆம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகளின் போது நிறுவப்பட்டிருந்தன. அவை நவீன இயந்திரங்களைக் கொண்டிருந்தன; தொழில்நுட்பத் திறமையைக் கொண்ட தொழிலாளர்கள் அங்கே வேலை செய்தனர். 20ஆம் நூற்றாண்

டின் தொடக்கத்தில் பெரிய தொழிற்சாலைகளில் அரைப் பங்குத் தொழிலாளர்கள் பாட்டாளி வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இதைச் சுட்டிக் காட்டிய லெனின் பெரிய அளவான இயந்திரத் தொழில்துறையின் வளர்ச்சிக்கும் தொழிலாளர் இயக்கம் பரவி வளர்ச்சியடைதலுக்கும் இடையிலுள்ள தொடர்பை வலியுறுத்தினார்.

தொழில்துறை உற்பத்தி மிகவும் அதிகமான அளவுக்குக் குவிந்திருந்தபடியால் பெரிய தொழிற்சாலைகளே தொழில்துறையின் பெரும் பகுதியை உற்பத்தி செய்தன. 1890க்களின் நடுப்பகுதியிலேயே ருஷ்யாவின் மிகப் பெரிய தொழிற்சாலைகள் ''ஜெர்மனியின் மிகப் பெரிய தொழிற்சாலைகளைக் காட்டிலும் பிரம்மாண்டமாக'' இருந்தன என்பதை லெனின் சுட்டிக் காட்டினார்.* 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 5,000க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கின்ற மாபெரும் தொழிற்சாலைகள் ஜெர்மனியைக் காட்டிலும் ருஷ்யாவில் அதிகமாக இருந்தன.

ருஷ்யாவில் கனரகத் தொழில் எவ்வளவு வேகமாக வளர்ச்சி அடைந்தது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு லெனின் ஒரு உதாரணத்தைத் தருகிறார். 1886க்கும்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 3, Moscow, Progress Publishers, 1977, p. 516.

1896க்கும் இடையில் ருஷ்யாவில் தேனிரும்பின் உற்பத்தி மும்மடங்காக அதிகரித்தது. ஆனால் இதே சாதனைக்கு பிரான்சில் 28 ஆண்டுகளும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 23 ஆண்டுகளும் பிரிட்டனில் 22 ஆண்டுகளும் ஜெர்மனியில் 12 ஆண்டுகளும் அவசியமாக இருந்தன.*

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழில்துறை உற்பத்திக் குறியீட்டெண்களின்படி ருஷ்யாவில் எண்ணெய், இரும்புத் தாது, தேனிரும்பு மற்றும் எஃகு உற்பத்தி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் உற்பத்தியை அநேகமாக ஒட்டியிருந்தது.

ருஷ்யா தொழில்துறை வளர்ச்சியின் விளைவாக சராசரி முதலாளித்துவ வளர்ச்சியடைந்த நாடாக மாறியது; எனினும் ருஷ்யப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளும் இந்த நிலையை எட்டியதாகக் கூற முடியாது.

ருஷ்யாவில் தொழில்துறை வளர்ச்சி மற்றும் முதலாளித்துவ உற்பத்தி முறை நிறுவப்பட்டதைத் தொடர்ந்து ஆகப் புரட்சிகர வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கமும் வளர்ச்சியடைந்தது.

ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் உருவாக்கம் பிரத்யேகமான சில அம்சங்களைக் கொண்டிருந்தது. ருஷ்யாவில் பாட்

---

* *Ibid.*, p. 490.

டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் தன்மையை, ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு இவை உதவுகின்றன. தொழிலாளி வர்க்கம் வேகமாக வளர்ச்சியடைந்தது, (குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் கடைசியில்), அந்த மாபெரும் நாட்டின் பரந்த பிரதேசத்தில் தொழிலாளி வர்க்கம் சமமின்றி சிதறியிருந்தது, தொழிலாளி வர்க்கத்தின் அதிகமான குவிப்பு, நிலப்பிரபுத்துவ எச்சங்கள் அதன் மீது கொண்டிருந்த தாக்கம் ஆகியவை இந்த அம்சங்களில் அடங்கும்.

1865க்கும் 1890க்கும் இடைப்பட்ட கால்நூற்றாண்டில் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்தது என்றால் கடைசிப் பத்தாண்டுகளில் (1890—1900) அது மறுபடியும் இரண்டு மடங்காக அதிகரித்தது.

1897ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி தொழில்துறை, ரயில் போக்குவரத்து, வனத்துறை இதரவற்றில் வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 10 மில்லியன் ஆகும்.

இக்காலகட்டத்தில் ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கையைப் பற்றிக் கூறுகின்ற பொழுது, அது ருஷ்யாவின் நகர மக்கள் தொகையைக் காட்டிலும் கணிசமான அளவுக்கு அதிகமாக இருந்தது, ஏனென்றால் தொழிற்சாலைகளில் 60% புறநகர்ப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளி

லும் அமைக்கப்பட்டிருந்தன என்று லெனின் சுட்டிக் காட்டினார்.*

நாட்டில் உற்பத்திச் சக்திகள் சமமற்ற முறையில் வினியோகிக்கப்பட்டிருந்தது தொழில்துறைத் தொழிலாளர்களின் சமமற்ற வினியோகத்தில் பிரதிபலிக்கப் பட்டது. தொழிலாளி வர்க்கத்தின் அதிகப் பெரும்பான்மையினர் (சுமார் 90%) ருஷ்யாவின் ஐரோப்பியப் பகுதியில் வசித்தனர். வர்க்கப் போராட்டத்தில் ருஷ்ய மொழி பேசிய பாட்டாளி வர்க்கம் தலைமையான பாத்திரத்தை வகித்ததற்கு இதுவே காரணம்.

தொழிற்சாலைகள் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் நிறுவப்பட்டதன் விளைவாக (விவசாயிகள் வெளியூர்களுக்குக் குடிபெயர்ந்து செல்வதைக் கட்டுப்படுத்துவதைப் போன்ற நிலப்பிரபுத்துவ எச்சங்கள் இதற்குக் காரணம்) விவசாயிகளில் ஒரு பகுதியினர் முதலாளித்துவ உறவுகளின் அமைப்புக்குள் இழுக்கப்பட்டனர். இத் தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களில் கணிசமான பகுதியினர் கிராமக் கூட்டுச் சமூகங்களின் உறுப்பினர்களாக இன்னும் நீடித்தபடியால் தொழில்துறை முதலாளித்துவம் விவசாய வர்க்கத்தின் மீது நேரடியான தாக்கம் செலுத்துதல் சாத்திய

---

*V. I. Lenin, *Collected Works*, vol. 3, p. 523; vol. 16, p. 401.

மாயிற்று; விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட வடிவங்களில் இழுக்கப்பட்டிருந்தார்கள்.

ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் இருந்ததைக் காட்டிலும் குறைவாக இருந்த போதிலும் அதன் குவிப்பு மிகவும் அதிகமாக இருந்தது; ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் இருந்ததை விட அதிகமாக இருந்தது.

மேற்கு நாடுகளைக் காட்டிலும் ருஷ்யாவில் பெரிய தொழிற்சாலைகளில் தொழிலாளி வர்க்கம் அதிகமாகக் குவிந்திருந்தது அது ஏன் அவ்வளவு புரட்சிகரமாக இருந்தது என்பதை விளக்குகிறது. தொழிலாளி வர்க்கம் ஒன்று சேர்ந்ததாக, நன்கு அமைக்கப்பட்டதாக, போர்க்குணமிக்க புரட்சிகர இயல்புகளையும் நீண்ட கூட்டுப் போராட்டத்துக்கு அவசியமான தேர்ச்சிகளையும் பெறுவதற்கு இந்த அம்சம் உதவியளித்தது. தொழிலாளர் இயக்கத்தின் பலம் முக்கியமாக பெரிய தொழிற்சாலைகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்க அமைப்புகளில் திரண்டிருந்தது, ஏனென்றால் பாட்டாளி வர்க்கத்தின் ஆகப் புரட்சிகரமான பகுதி அங்கேதான் குவிக்கப்பட்டிருந்தது என்று லெனின் பன்முறை சுட்டிக் காட்டினார்.

ருஷ்யாவில் 19ஆம் நூற்றாண்டின் கடைசியில் வேகமான தொழில்துறை வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் தொழிலாளி வர்க்கத்

தின் நிலை முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களில் (தொழிலாளர்கள் ஈவிரக்கமின்றிச் சுரண்டப்படுதல் எல்லா நாடுகளிலும் ஆரம்பக் கட்டத்தின் குணாம்சம் ஆகும்) இருந்த நிலையிலிருந்து மாற வில்லை. தொழிலாளி நாளொன்றுக்குப் 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது; பஞ்சாலைகளில் 13 மணி நேரம்—15 மணி நேரம் கூட—வேலை செய்ய வேண்டியிருந்தது. ருஷ்யத் தொழிலாளியின் ஊதியம் மிகவும் குறைவாக இருந்தது; ருஷ்யத் தொழிலாளியின் ஊதியம் பிரிட்டிஷ் தொழிலாளியின் ஊதியத்தில் நான்கில் ஒரு பகுதியாகவும் அமெரிக்கத் தொழிலாளியின் ஊதியத்தில் ஐந்தில் ஒரு பகுதியாகவும் இருந்தது; அந்த ஊதியம் அவனுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூடப் போதுமானதாக இருக்கவில்லை. ஆண்களுக்குத் தரப்பட்ட கூலியில் பாதி அல்லது மூன்றில் ஒரு பகுதி அதே வேலையைச் செய்த பெண் தொழிலாளர்களுக்குத் தரப்பட்டது.

தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்துக் கொள்வதற்கு, கூட்டங்கள் நடத்துவதற்கு அல்லது வேலைநிறுத்தம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் வேலை நிலைமைகளைப் பற்றி லேசான எதிர்ப்பைக் காட்டினாலும் ஜாரிஸ்ட் எதேச்சாதிகாரம் அவர்களை ஈவிரக்கமில்லாமல் நசுக்கியது. வேலைநிறுத்

தங்களை நசுக்குவதற்குப் போலீசும் துருப்புகளும் உபயோகிக்கப்பட்டன.

தொழிலாளர்களும் விவசாயிகளும் ஈவிரக்கமில்லாமல் சுரண்டப்பட்டதன் விளைவாக சில தொழில்துறைகள் அதிகமான வளர்ச்சி விகிதங்களை அடைந்தன. சுரண்டலின் தன்மையும் அதன் அளவும் வடிவங்களும் தொழிலாளர்களின் நடவடிக்கைகள் ஈவிரக்கமில்லாதபடி நசுக்கப்பட்டதும் சுரண்டல்காரர்களுக்கு எதிராக அதிக உறுதியான, விடாப்பிடியான போராட்டத்தை நடத்தும்படி தொழிலாளி வர்க்கத்தைத் தூண்டின. வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை மேன்மேலும் அதிகரித்தது அதற்குச் சான்றாகும். 1880க்களின் முதற் பாதியில் சுமார் 100 வேலைநிறுத்தங்களும் 50க்கும் அதிகமான கலவரங்களும் நடைபெற்றன என்றால் 1890க்களின் முதற் பாதியில் 181 வேலைநிறுத்தங்களும் 83 கலவரங்களும் நடைபெற்றன.

தொழிலாளர்களின் ஒற்றுமை, உறுதி, கைது செய்யப்பட்ட தொழிலாளர்களைப் பலாத்காரத்தை உபயோகித்து விடுதலை செய்தல், போலீசுப் படையினருடனும் துருப்புக்களுடனும் மோதல், போராட்டத்தின் துணிகரமான தன்மை, வேலைநிறுத்த காலத்தில் சில தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் இவ்வேலைநிறுத்தங்களின் குறிப்பிடத் தக்க அம்சங்களாக இருந்தன.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழிலாளர் இயக்கம் புதிய மற்றும் உயர்ந்த கட்டத்தை அடைந்தது. தொழிலாளர்கள் பொருளாதாரப் போராட்டங்களிலிருந்து (வேலைநிறுத்தங்களில் மேன்மேலும் அதிகமான நபர்கள் ஈடுபட்டார்கள்) அரசியல் நடவடிக்கைக்கு முன்னேறினார்கள். தெருக்களில் பெருந்திரளான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்ற பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் புதிய வடிவத்தை உருவாக்கினார்கள். தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தங்கள் செய்வதிலிருந்து தொழில் கேந்திரம் முழுவதிலும், பிறகு பொருளாதாரப் பிரதேசம் முழுவதிலும் நடைபெறுகின்ற வேலைநிறுத்தங்களைத் தொழிலாளர்கள் நடத்த முன்னேறி னார்கள்.

1902இல் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர நடவடிக்கையைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''முதல் தடவையாகப் பாட்டாளி வர்க்கம் ஒரு வர்க்கம் என்ற முறையில் மற்ற எல்லா வர்க்கங்களையும் ஜாரிஸ்ட் அரசாங்கத்தையும் எதிர்த்து நின்றது.''*

ருஷ்யாவில் 1861இல் பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்ட பிறகு பணக்கார விவசாயிகளும் நிலக்கிழார்களும் முதலாளித்

*V. I. Lenin, *Collected Works*, vol. 8, p. 140.

துவ விவசாய முறைகளைப் பின்பற்றினார்கள். அதன் விளைவாகச் சிறு விவசாயிகள் அழிந்தார்கள்; அவர்கள் கிராமப்புறப் பாட்டாளிகளாகவும் அரைப் பாட்டாளிகளாகவும் மாறினார்கள். 1897இல் ருஷ்யாவில் கிராமாந்தர மக்கள் தொகை 9,70,00,000 ஆகும்; இதில் பாதி பாட்டாளிகளாகவும் அரைப் பாட்டாளிகளாகவும் இருந்தார்கள் என்று லெனின் கணக்கிட்டார். விவசாயிகள் மத்தியில் உடைமை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வு அதிகரித்தது; ஏழை விவசாயிகளுக்கும் கிராம முதலாளி வர்க்கமாகிய குலாக்குகளுக்கும் இடையில் போராட்டங்கள் தோன்றின. அது முதலாளித்துவச் சுரண்டலை எதிர்த்து தொழிலாளி வர்க்கம் மற்றும் கிராமப்புற அரைப் பாட்டாளி வர்க்கப் பகுதியினரது கூட்டு நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தது.

பண்ணையடிமை முறையின் எச்சங்கள் விவசாயத்தில் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன. விவசாயிகள் முன்போலவே நிலப்பிரபுத்துவ சேவைகளைச் செய்தனர். உதாரணமாக, அவர்கள் நிலவுடைமையாளருடைய நிலத்தில் குத்தகைக்குப் பயிரிட்டனர்; அதற்குக் கூலியாக அவர்கள் நிலவுடைமையாளருடைய நிலத்தில் உழைக்கவேண்டும் அல்லது அறுவடையில் ஒரு பகுதியை (பெரும்பாலும் பாதிப் பகுதியை) கொடுக்க வேண்டும். விவசாயிகள் பண்ணையடிமை முறை

யிலிருந்து ''விடுதலை அடைந்த'' பொழுது பெற்ற நிலத்துக்குப் பல பத்தாண்டுகளாகப் பாடுபட்டுப் பணம் கொடுத்தார்கள். இத் தொகை மொத்தம் 86,70,00,000 ரூபிள்களாகும்; இத்தொகை நிலத்தின் உண்மையான விலையைக் காட்டிலும் 32,30,00,000 ரூபிள்கள் அதிகமாக இருந்தது. இதைத் தவிர நிலவுடைமையாளர்கள் நல்ல நிலங்களைத் தமக்கு எடுத்துக் கொண்டார்கள்; விவசாயிகள் ''விடுதலைக்கு'' முன்னர் உழுது பயிரிட்ட நல்ல நிலங்களையும் எடுத்துக் கொண்டார்கள். இதன் விளைவாகப் பணக்கார விவசாயிகள் (குலாக்குகள்) உட்பட எல்லா விவசாயிகளுக்கும் நிலம் குறைவாக இருந்தது; நிலக்கிழார்களின் நில உடைமைகளில் ஏதாவது தமக்குக் கிடைக்குமா என்று அவர்கள் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

விவசாயிகளிடம் இருந்த நிலம் மிகக் குறைவு; அவர்களை நிலக்கிழார்கள் ஒடுக்கியபடியால் அவர்கள் அடிக்கடி கலகம் செய்தார்கள்; ஆனால் அவர்கள் ஈவிரக்கமின்றி நசுக்கப்பட்டார்கள். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் விவசாயிகள் போராட்டத்தில் புதிய கட்டத்தைத் துவக்கியது. விவசாயிகளுடைய கலகங்கள் மிகப் பெரிய அளவில் நடைபெற்றபடியால் பல்லாயிரக் கணக்கான போர்வீரர்களைப் பயன்படுத்தி அவை அடக்கப்பட்டன.

ருஷ்யாவில் பல தேசிய இனங்களைச்

சேர்ந்த மக்கள் வாழ்ந்தார்கள். அங்கே எதேச்சாதிகாரமும் ஆளும் வர்க்கங்களும் வல்லரசு தேசியவெறிக் கொள்கையைப் பின்பற்றி தேசிய இனப் பகைமையைத் தூண்டி விட்டன. எதேச்சாதிகாரக் கொள் கைக்கும் ஒடுக்கப்பட்டிருந்த மக்களினங் களுடைய நலன்களுக்கும் ஏற்பட்ட முரண் பாட்டினால் மக்கள் ஜாரிசத்தை எதிர்த்துப் போராடுவதற்குக் கிளர்ந்தெழுந்தார்கள்.

ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சி உலக வரலாற்றுச் செயல்முறையின் ஒரு பகுதி, மார்க்ஸ் விளக்கியுள்ள, மேற்கு நாடு களில் அமுலில் இருக்கின்ற விதிகளுக்கு அந்த வளர்ச்சி உட்பட்டது என்று லெனின் எடுத் துக் காட்டினார். முதலாளித்துவ உடைமை மற்றும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி, தொழிலாளி வர்க் கத்தின் எண்ணிக்கை மேன்மேலும் அதிகரித் தல், சுரண்டலையும் கொடுங்கோன்மையை யும் எதிர்த்து அதன் போராட்டங்கள் ஓங்கு தல் முதலாளித்துவ வளர்ச்சியின் முக்கிய மான அம்சங்களாக இருந்தன.

லெனின் ருஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சியையும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதன் விளைவுகளையும் ''ஒரு பக்கத்தில் மிகவும் பிற்போக்கான நிலவுடைமை முறை மற்றும் மிகவும் அறி வில்லாத விவசாய வர்க்கம், மறு பக்கத்தில் மிகவும் வளர்ச்சியடைந்த தொழில்துறை

மற்றும் நிதி முதலாளித்துவம்'' என்று வர்ணித்தார்.*

இந்த வர்ணனை ருஷ்யப் பொருளாதாரத்தின் முக்கியமான முரண்பாட்டின் சாராம்சத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. அது ருஷ்யாவின் தொழிலாளர் மற்றும் புரட்சிகர இயக்கத்தின் காரணத்தையும் தன்மையையும் நிர்ணயித்தது.

## தொழிலாளர் இயக்கம், மார்க்சியம் மற்றும் புரட்சிகரமான அமைப்புகள்

பாட்டாளி வர்க்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும், அது எதேச்சாதிகாரத்தையும் முதலாளிகளையும் எதிர்த்து மேன்மேலும் அதிகமாகப் போராடுதல், தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தை விவசாயிகளின் போராட்டத்துடன் இணைக்கின்ற சாத்தியம் ஆகிய புறவய வரலாற்றுக் காரணிகள் உலக ஏகாதிபத்திய அமைப்பில் ருஷ்யாவை முரண்பாடுகளின் குவிமுனையாகச் செய்தன; உலகத் தொழிலாளர் இயக்கத்தின் மையம் ருஷ்யாவுக்கு மாறி விடுவதற்குரிய முன்நிபந்தனைகளை அமைத்தன.

தொழிலாளர் மற்றும் விவசாய இயக்கத்தின் வளர்ச்சியும் மாணவர்களுடைய

* V. I. Lenin, *Collected Works*, vol. 13, p. 442.

போராட்டங்களும் பொதுவான ஜனநாயக எழுச்சி, தேசியப் புரட்சிகர நெருக்கடி ஆழமடைதல், புரட்சி நெருங்கி வருதல் ஆகியவற்றுக்குச் சான்றாக இருந்தன. ''மாபெரும் புயல் நெருங்கி வந்ததை எங்கும் உணர முடிந்தது. எல்லா வர்க்கங்களும் கொந்தளிப்பான நிலைமையில் இருந்தன; தயாரிப்புகளில் முனைந்திருந்தன'' என்று லெனின் இக்காலகட்டத்தைப் பற்றி எழுதினார்.*

ருஷ்யாவிலும் மற்ற நாடுகளிலும் தொழிலாளர் இயக்கத்தின் மீது தாக்கம் செலுத்திய கருத்துகள் எவை? தொழிலாளர் இயக்கத்துக்கு வழிகாட்டிய அல்லது வழிகாட்டுவதற்கு முற்பட்ட அரசியல் கட்சிகள் எவை?

ருஷ்ய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியின் தனித்தன்மையான கூறுகளை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு அதன் முந்திய வரலாற்றைப் பற்றிக் குறைந்தபட்சம் சில மேலெழுந்தவாரியான விவரங்களையாவது அறிந்துகொள்வது அவசியம்.

1880க்களுக்குள் மேற்கு ஐரோப்பாவின் தொழிலாளர் இயக்கத்தில் மார்க்சியம் தலைமையான போக்காக மாறியிருந்தது. மேற்கு நாடுகளில் பாட்டாளி வர்க்க அரசியல் கட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 192.

''மார்க்சின் தத்துவம் முழுநிறை வெற்றி பெற்றுப் பரவத் தொடங்கிற்று. பாட்டாளி வர்க்கத்தினுடைய சக்திகளின் தேர்வாய் வும் அணிதிரட்டலும், வரவிருந்த போராட் டங்களுக்கான அதன் தயாரிப்பும், மெது வாகத்தான் என்றாலும், இடையறாது முன் னேறின'' என்று லெனின் எழுதினார்.*

சுரண்டலும் ஒடுக்குமுறையும் நிலவிய எந்த நாட்டையும் போலவே ருஷ்யாவி லும் கொடுங்கோன்மையை எதிர்த்து மக் களுடைய நல்வாழ்க்கைக்குப் போராடுகின்ற தன்னலமற்ற போராளிகள் இருந்தார்கள். அவர்கள் நாட்டு மக்களிலேயே மிகச் சிறந்த வர்களாக இருந்தார்கள்.

ருஷ்யாவில் 1860க்களிலும் 1870க்களி லும் புரட்சிகர ஸ்தாபனங்கள் அமைக்கப் பட்டன; அவற்றின் உறுப்பினர்கள் ''நரோத் னிக்குகள்'' என்று அழைக்கப்பட்டார்கள். அவற்றில் முற்போக்கான, புரட்சிகர அறிவு ஜீவிகள், குறிப்பாக மாணவர்கள், ஆசிரி யர்கள் மற்றும் டாக்டர்கள் ஈடுபட்டார் கள்.

இந்த இரகசிய அமைப்புகளின் உறுப் பினர்கள் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுமாறு விவசாயிகளைத் தூண்டுவதற்

---

* வி. இ. லெனின், **மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1985, பக்கம் 16.

காக அவர்கள் மத்தியில் வேலை செய் தார்கள். அவர்கள் விவசாயிகளைப் போல உடையணிந்து கொண்டு கிராம மக்களிடம் சென்றார்கள். எனவே அவர்கள் நரோத் னிக்குகள் (''நரோத்'' என்ற சொல் மக் களைக் குறிப்பிடுகிறது) என்று அழைக்கப் பட்டார்கள்.

அவர்கள் தம்மை சோஷலிஸ்டுகள் என்று கூறிக் கொண்டார்கள், ருஷ்யாவின் பொருளாதாரத்தில் முதலாளித்துவம் ஆதிக் கம் செலுத்தியதை மறுத்தார்கள்; நாட்டில் முக்கியமான புரட்சிகர சக்தி தொழிலாளி வர்க்கம் அல்ல, விவசாயிகளே என்று நம்பி னார்கள். அவர்கள் அரசியல் புரட்சியை நிராகரித்தார்கள், விவசாயக் கூட்டுச் சமூகத் திலிருந்து நேரடியாக சோஷலிசத்துக்கு மாற முடியும் என்று போதித்தார்கள். அவர் கள் சமூக வளர்ச்சியின் விதிகளைப் புரிந்து கொள்ளவில்லை, புரட்சியின் இயக்கு சக்திகளைப் பார்க்கவில்லை; ''வீரர்கள்'' மட்டுமே வரலாற்றை உருவாக்குகிறார் கள், ஒழுங்கற்ற கும்பலை மக்களாக மாற்று கிறார்கள் என்று நம்பினார்கள். அவர்களு டைய கருத்துகள் புரட்சிகர மனோபாவம் கொண்ட அறிவுஜீவிகள், வளர்ச்சியடைந்த தொழிலாளர்கள் சிலர் மத்தியில் பரவியிருந் தன. அவர்கள் விஞ்ஞான சோஷலிசத்தை அல்ல, கற்பனாவாத விவசாய சோஷ லிசத்தைப் பின்பற்றினார்கள்; அவர்கள் நிலைமையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளா

மல் கலகம் செய்யும்படி விவசாயிகளை அறைகூவினார்கள்; ஆகவே அவர்களுடைய செயல்முறை விஞ்ஞானத்துக்குப் புறம்பாக வும் தவறாகவும் இருந்தது. விவசாயிகள் அவர்களைப் புரிந்து கொள்ளவுமில்லை, நம்பவுமில்லை; எனவே போலீசுத்துறை யினர் அவர்களைக் கைது செய்வது சுலப மாக இருந்தது. நரோத்னிக்குகளின் இம் முயற்சிகள் தோல்வியடைந்த பின் அவர்கள் பயங்கரவாத முறைகளைக் கையாண்டார் கள்.

''மக்கள் சித்தம்'' என்னும் இரகசியச் சங்கம் ஜார் அரசனைக் கொலை செய்வ தென்று முடிவு செய்தது. 1881 மார்ச் முதல் தேதியன்று இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஜார் இரண்டாம் அலெக் சாந்தரைக் கொலை செய்தார்கள். எனினும் இந்த நடவடிக்கையினால் விவசாயிகளுக் கோ, தொழிலாளர்களுக்கோ எத்தகைய பலனுமில்லை. ஜார் கொலை செய்யப் பட்டவுடன் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து விவசாயிகள் கிளர்ந்தெழுவார்கள் என்று நரோத்னிக்குகள் நம்பினார்கள்; அதுவும் நடைபெறவில்லை. நரோத்னிக்குகளின் இர கசிய அமைப்பு அழிக்கப்பட்டது; ஆனால் அவர்களுடைய கருத்துகள் புரட்சிகரமான அறிவுஜீவிகள் மத்தியில் மேலும் நீண்ட காலம் நீடித்தன. வளர்ச்சியடைந்த புரட்சி கரமான தொழிலாளர்கள் மீது கூட நரோத்

னிக்குகளின் தவறான கருத்துகள் அதிக மான தாக்கம் செலுத்தின.

1880க்கள் ருஷ்யாவில் மார்க்சியம் பரவுவதற்குரிய புறவய மற்றும் அகவய நிலைமைகளைத் தயாரித்தன. அதற்குள் பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் வளர்ச் சியடைந்தது மட்டுமின்றி புரட்சிகரமான போராட்டத்துக்குத் தன்னுடைய சொந்தப் பாதையைத் தயாரிக்கின்ற, வளர்ச்சியடை கின்ற சமூக சக்தி என்ற நிலையை அடைந்தது. புரட்சிகரமான அறிவுஜீவிகளில் ஒரு பகுதியினர் நரோத்னிக்குகளிடமிருந்து பிரிந்தனர்; அவர்கள் மார்க்சியத்தைக் கற்றனர், மேற்கு ஐரோப்பாவில் தொழி லாளர் இயக்கத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொண்டனர்; அவர்கள் ருஷ்யா வின் புரட்சிகர இயக்கத்தையும் அங்கே தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தங் களின் முக்கியத்துவத்தையும் வளர்ச்சி யடைந்த ருஷ்யத் தொழிலாளர்கள் மத்தி யில் தங்களுடைய சொந்த அனுபவத்தை யும் விமர்சன ரீதியாகப் பகுத்தாராய்ந்தார் கள். அத்தகைய புரட்சிகரமான அறிவுஜீவி களில் ஒருவர்தான் நரோத்னிக் இயக்கத் தின் அங்கீகரிக்கப்பட்ட தத்துவாசிரியரும் தலைவரும், திறமை மிக்க பத்திரிகையாள ரும் மார்க்சியப் பிரச்சாரகருமான கியோர்கி பிளெஹானவ். 1883இல் அவர் வெளிநாட் டிலிருந்த பொழுது ''உழைப்பின் விடு

தலை'' என்னும் சமூக-ஜனநாயகக் குழுவை நிறுவினார்.

ருஷ்யாவில் விஞ்ஞான சோஷலிசக் கருத்துகளைப் பரப்புதல், நரோத்னிக்கு களின் தவறான கருத்துகளை விமர்சனம் செய்தல், ருஷ்ய சமுதாயத்தின் கேந்திர மான பிரச்சினைகளை மார்க்சிய நிலைகளி லிருந்து, தொழிலாளி வர்க்கத்தின் நலன் களை முன்னிறுத்தி ஆராய்தல் ஆகியவை தன்னுடைய முக்கியமான கடமைகள் என்று இக்குழு அறிவித்தது. இக்குழு மார்க்ஸ், எங்கெல்ஸ் எழுதிய நூல்களை ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டது; கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, கூலியுழைப்பும் மூலதனமும், மெய்யறிவின் வறுமை, லுட்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத் துவஞானத்தின் முடிவும், இதரவை இவற்றில் அடங்கும். இவை ருஷ்யாவில் இரகசிய மாகப் பரப்பப்பட்டன. மார்க்சும் எங்கெல் சும் தங்களுடைய நூல்களின் ருஷ்யப் பதிப்பு கள் சிலவற்றுக்கு விசேஷமாக முன்னுரைகள் எழுதினார்கள். இக்குழு வளர்ச்சியடைந்த தொழிலாளர்கள் படிப்பதற்கென்று தொடர் வரிசையான பிரசுரங்களையும் வெளியிட்டது.

பிளெஹானவ் சில புத்தகங்களையும் கட்டுரைகளையும் எழுதினார்; அவை நரோத்னிக்குகளின் தவறான தத்துவங் களை ஆழமாக விமர்சனம் செய்தன, மார்க் சியக் கருத்துகளைச் சிறப்பான முறையில் வலியுறுத்திப் பரப்பின.

''உழைப்பின் விடுதலைக்'' குழு ருஷ்யாவின் மார்க்சியவாதிகளுக்கு ஒரு நடவடிக்கைத் திட்டத்தை வகுத்தது; அது அடிப்படையில் அந்தக் காலகட்டத்துக்குச் சரியானதாக இருந்தது. எனினும் அச்செயல் திட்டம் பல அம்சங்களில் சூக்குமமாகவும் தெளிவற்றதாகவும் இருந்தது. வரப் போகின்ற ருஷ்ய முதலாளித்துவப் புரட்சியில் வர்க்க சக்திகளின் ஒப்புநிலை, முதலாளி வர்க்கமும் விவசாயிகளும் அதில் வகிக்கப் போகின்ற பாத்திரம் ஆகியவை அதில் தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை. ஆகவே இப்பிரச்சினைகளைப் பற்றி பிளெஹானவும் அவருடைய குழுவினரும் கடைப்பிடித்த நிலை முரண்பாடானதாகவும் வாதத்துக்குரியதாகவும் இருந்தது.

எனினும் ''உழைப்பின் விடுதலைக்'' குழு ருஷ்யாவில் மார்க்சியத்தைப் பரப்புவதிலும் ஒரு மார்க்சியக் கட்சியை நிறுவுவதற்குக் களத்தைத் தயாரிப்பதிலும் பெரும் பாத்திரத்தை வகித்தது. அதே சமயத்தில் அந்தக் குழுவுக்குத் தொழிலாளர் இயக்கத்துடன் தொடர்பு கிடையாது; அத்திசையில் அது முதல் காலடியை மட்டுமே எடுத்து வைத்திருந்தது.

வெளிநாட்டிலிருந்த ''உழைப்பின் விடுதலைக்'' குழுவைத் தவிர ருஷ்யாவின் பல நகரங்களில், குறிப்பாக, தொழில்துறைக் கேந்திரங்களில் மார்க்சியக் குழுக்கள் தோன்றி இயங்கிக் கொண்டிருந்தன.

லெனின் கஸான் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருக்கின்ற பொழுதே அத்தகைய குழுக்களில் ஒன்றில் சேர்ந்திருந்தார். ஆரம்பகால மார்க்சியக் குழுக்களின் தோற்றத்திலிருந்து ருஷ்ய சமூக-ஜனநாயகம் சர்வதேச சோஷலிஸ்ட் தொழிலாளர் இயக்கத்தின் ஒரு பகுதியாக மாறியது.

1883—1894ஆம் ஆண்டுகளுக்குஇடைப்பட்ட காலகட்டத்தில் ருஷ்யாவில் சமூக-ஜனநாயக இயக்கம் முளைவிடத் தொடங்கியது.

மார்க்சியத்தை ஆதரிப்பவர்கள் இன்னும் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே இருந்தார்கள். இந்தக் காலகட்டத்தைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''தொழிலாளர் இயக்கம் இல்லாமலே சமூக-ஜனநாயகம் இருந்தது, ஓர் அரசியல் கட்சி என்கிற வகையில் அது கரு நிலையிலேயே இருந்தது.''*

## மார்க்சிய வளர்ச்சியில் லெனினியக் கட்டத்தின் தொடக்கம்

1890க்களில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனரும் தலைவருமான லெனின் தன்னுடைய புரட்சிகர நடவடிக்கையைத் தொடங்கினார்.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 478.

விளதீமிர் உலியானவ் (லெனின்) 1870 ஏப்ரல் 22ஆம் நாளன்று ஸிம்பீர்ஸ்க் (தற்பொழுது உலியானவ்ஸ்க் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற நகரத்தில் பிறந்தார். கஸான் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த பொழுதே அவர் புரட்சிகர இயக்கத்தில் ஈடுபட்டார்; அதன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். அவர் இளமைப்பருவத்திலேயே மார்க்சிய நூல்களைத் தனியாகவும், மார்க்சியக் குழு உறுப்பினர்களோடு சேர்ந்தும் ஆழமான முறையில் படித்தார். பிறகு அவர் சட்ட விரோதமான மார்க்சியக் குழுக்களுக்கு வகுப்புகள் நடத்தினார். 1893 ஆகஸ்டில் லெனின் ருஷ்யப் பேரரசின் தலைநகரமாகவும் ருஷ்யத் தொழிலாளர் இயக்கத்தின் கேந்திரமாகவும் இருந்த பீட்டர்ஸ்பர்க் (தற்பொழுது லெனின்கிராத் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது) நகரத்துக்கு வந்தார். அங்கே அவர் விரிவான தத்துவ மற்றும் ஸ்தாபன நடவடிக்கைகளில் ஈடுபட்டார். மார்க்சியக் குழுக்களில் அவர் நிகழ்த்திய ஆரம்பகாலச் சொற்பொழிவுகள் உறுப்பினர்கள் மனங்களில் அழிக்க முடியாதபடி பதிந்தன. லெனின் இளைஞராக இருந்த போதிலும் ஆழமான புலமை, முழுமை மற்றும் கூர்மதி உடையவர், மார்க்சியத்தை வறட்டுக் கோட்பாடாக இல்லாமல் எதார்த்தத்தை அதன் எல்லா வெளிப்பாடுகளிலும் புரிந்து கொள்வதற்குரிய விஞ்

ஞான ரீதியான முறையாக உபயோகிக்கின்ற திறமை உள்ளவர் என்று அவர்கள் கருதி னார்கள். லெனின் தொழிலாளர்களின் வாழ்க்கையை அகல்விரிவாகவும் நுணுக்க மாகவும் ஆராய்ந்தார், வளர்ச்சியடைந்த தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய் வதில் அதிகமான கவனமும் முயற்சியும் செலுத்தினார், அந்த நடவடிக்கைகளில் மார்க்சியக் குழுக்களின் உறுப்பினர்களை யும் ஈடுபடுத்தினார்.

அவருடைய ஆழமான மார்க்சிய அறிவு, மார்க்சிய நிலையிலிருந்து நிகழ்வுகளை ஆராய்வதற்கும் முடிவுகளைப் பெறுவதற் கும் அவருடைய திறமை, சுறுசுறுப்பான ஸ்தாபன நடவடிக்கை ஆகியவை சீக்கிரத் திலேயே லெனினை பீட்டர்ஸ்பர்க் மார்க் சியவாதிகளின் அங்கீகரிக்கப்பட்ட தலை வராகச் செய்தன.

அது உலக வரலாற்றில் ஒரு திருப்பு முனைக் கட்டம். ஒப்பீட்டளவில் சமாதான பூர்வமான முதலாளித்துவ வளர்ச்சி முடி வுக்கு வந்து கொண்டிருந்தது; புரட்சிகர மான சண்டைகளும் கொந்தளிப்புகளும் ஆரம்பமாகிக் கொண்டிருந்தன; முதலாளித் துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் புரட்சி கரமாக மாறுவது சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருந்தது. இத்தகைய கட்டத்தில் லெனின் அரசியல் துறையில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார். ருஷ்யாவில் வளர்ந்து கொண்டிருந்த தொழி

லாளர் மற்றும் பொதுவான ஜனநாயக விடுதலை இயக்கம் பாட்டாளி வர்க்கம் அதன் வரலாற்றுக் கடமையை—எதேச்சாதி காரத்தை ஒழித்து முதலாளித்துவத்தை அகற்றுதல்—நிறைவேற்றுவதற்குத் தயாரிக் கப்படுவதை இன்றியமையாதபடிச் செய் தது. இத்தயாரிப்பு தத்துவ ரீதியாகவும் செய்முறையாகவும் (ஸ்தாபன ரீதியாகவும்) இருக்க வேண்டும். ஒரு பக்கத்தில், பாட் டாளி வர்க்கத்துக்கு அந்நியமான நரோத் னிக்குகளின் குட்டி முதலாளி வர்க்கக் கருத்துகளையும் தொழிலாளி வர்க்கத்தின் மீது தாக்கம் செலுத்தி அதன் போராட் டத்தைத் தன்னுடைய சொந்த நோக்கங் களுக்குப் பயன்படுத்துகின்ற மிதவாத முத லாளி வர்க்கத்தின் முயற்சிகளையும் முடி வாக அம்பலப்படுத்தி ஒழிக்க வேண்டியது அவசியம்; புரட்சிகரத் தத்துவத்தை மேலும் வளர்த்து பாட்டாளி வர்க்கப் போராட்டத் தின் இறுதி நோக்கங்களை நிறைவேற்று வதற்கு உடனடிக் கடமைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். மறு பக்கத்தில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் பொது ஜனநாயக இயக் கத்துக்குத் தலைமை தாங்குவதற்குத் தயா ரிக்கப்படுவதும் அது ஸ்தாபன ரீதியாக வலிமையான அரசியல் சக்தியாக மாறு வதற்கு உதவி செய்வதும் அவசியமாக இருந்தன.

சோஷலிசம் தொழிலாளர் இயக்கத் துடன் இணைவதற்கு, அதாவது புரட்சிகர

மார்க்சியப் பாட்டாளி வர்க்கக் கட்சியை நிறுவுவதற்கு நிலைமைகள் முதிர்ச்சி அடைந்து விட்டன என்பதைப் புரிந்து கொண்ட முதல் ருஷ்ய மார்க்சிஸ்டு லெனினே. நரோத்னிக்குகள் ருஷ்யாவில் அத்தகைய கட்சியை அமைப்பதற்கு முக்கியமான சித்தாந்தத் தடையாக இன்னும் இருந்து கொண்டிருந்தார்கள். 1880க்களில் பிளெஹானவ் நரோத்னிக்குகளின் சித்தாந்தத்துக்குப் பலத்த அடி கொடுத்த போதிலும் அது இன்னும் முழுமையாக முறியடிக்கப்படவில்லை. அவர்களுடைய கருத்துகளுக்குச் சில புரட்சிகரமான இளைஞர்கள் மத்தியில் இன்னும் அனுதாபம் இருந்தது. அது மட்டுமல்ல. நரோத்னிக்குகள் தங்களுடைய கருத்துகளைப் பரப்புவதற்கு முயற்சி செய்த பொழுது ருஷ்ய மார்க்சியவாதிகளின் கருத்துகளைக் குறை சொல்லத் தொடங்கினார்கள், ருஷ்யாவுக்கு மார்க்சியம் பொருந்தாது என்று நிரூபிப்பதற்கு முயற்சி செய்தார்கள்.

லெனின் 1894இல் **''மக்களின் நண்பர்கள்'' எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் சமூக-ஜனநாயக வாதிகளை எதிர்த்துப் போரிடுவது எப்படி?** என்னும் புத்தகத்தை எழுதினார். அப்புத்தகம் நரோத்னிக்குகளின் விஞ்ஞானத்துக்குப் புறம்பான கருத்துகளை அம்பலப்படுத்துவதிலும் ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் கடமைகளை வகுத்தளிப்பதிலும் தலைசிறந்த பாத்திரத்தை வகித்தது. அப்புத்தகம்

நரோத்னிக்குகளின் தத்துவஞான, பொருளாதாரக் கருத்துகளையும் அவர்களுடைய அரசியல் திட்டத்தையும் செயல்முறையையும் ஆழமான மார்க்சிய விமர்சனத்துக்கு உட்படுத்தியது.

லெனின் 1890க்களில் நரோத்னிக்குகளின் கருத்துகளுக்கும் 1870க்களில் அவர்களுடைய கருத்துகளுக்கும் இடையிலிருந்த அடிப்படையான வேறுபாட்டை எடுத்துக் காட்டினார், மார்க்சிய இலக்கியத்தில் முதல் தடவையாக நரோத்னிக் இயக்கத்தைப் பற்றி விரிவான பகுப்பாய்வைக் கொடுத்தார், அதன் வர்க்கத் தோற்றுவாய்களை வெளிக்காட்டினார். நரோத்னிக் இயக்கத்தின் வளர்ச்சி, புரட்சிகர நரோத்னிக்குகளின் தத்துவம் அற்பவாத, சீர்திருத்தவாதக் கற்பனையாக மாறியதற்குரிய காரணங்களை அவர் எடுத்துக் காட்டினார்.

1870க்களைச் சேர்ந்த நரோத்னிக்குகள் விவசாய சோஷலிசப் புரட்சியில் நம்பிக்கை வைத்த புரட்சிக்காரர்கள்; எதேச்சாதிகாரத்தை எதிர்த்து வீரமாகப் போராடியவர்கள். நரோத்னிக்குகள் இன்னும் பாகுபாட்டு நிலையை அடைந்திராத விவசாய வர்க்கம் முழுவதின் நலன்களையும் விருப்பார்வங்களையும் வெளியிட்டார்கள்.

1890க்களைச் சேர்ந்த நரோத்னிக்குகள் நிதானமான மிதவாதிகள்; அவர்கள் சமுதாயத்தைப் புரட்சி முறையில் மாற்றியமைக்கின்ற தத்துவத்தைக் கைவிட்டவர்

கள்; அவர்கள் கிராம முதலாளி வர்க்கத்தின், குலாக்குகளின் நலன்களைப் புறநிலையாகப் பிரதிபலித்தவர்கள். புரட்சிகரமான நரோத்னிக்குகளின் மரபுகளைத் தாங்கள் பின்பற்றுவதாக அவர்களது கூற்றுகளை லெனின் மறுத்தார். சிறந்த புரட்சிகரமான மரபுகளுக்கு உண்மையான வாரிசுகள் ருஷ்ய மார்க்சியவாதிகள் மட்டுமே என்று அவர் எடுத்துக்காட்டினார்.

**மக்களின் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் சமூக-ஜனநாயகவாதிகளை எதிர்த்துப் போரிடுவது எப்படி?** என்ற புத்தகத்தில் ஒரு சுயேச்சையான, சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சியை அமைக்கின்ற கடமையை லெனின் முன்வைத்தார். தனிப்பட்ட தொழிலாளர் குழுக்கள் ஒருங்கிணைப்பு இல்லாமல் நடத்துகின்ற பொருளாதாரப் போராட்டத்தை மொத்த பாட்டாளி வர்க்கத்தின் உணர்வு பூர்வமான, அமைப்பு ரீதியான வர்க்கப் போராட்டமாக மாற்றியமைப்பதற்கு அத்தகைய கட்சி இன்றியமையாததாக இருந்தது. அக்கட்சி பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தத் தலைவனாகவும் அமைப்பாளனாகவும் இருக்கும்.

அத்தகைய கட்சி தொழிலாளர்கள் மத்தியில் மட்டும் வேலை செய்வதோடு தன்னைக் குறுக்கிக் கொள்ள முடியாது. தொழிலாளி வர்க்கம் எல்லா ஜனநாயக சக்திகளுக்கும் தலைமை தாங்க வேண்டியிருந்ததால் இந்தச் சக்திகளுடைய, எல்லாவற்றுக்கும்

மேலாக விவசாயிகளின் ஆதரவை அது உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இக்காரணத்துக்காகக் கட்சி பெருந்திரளான தொழிலாளர் இயக்கத்தைச் சார்ந்திருப்பதுடன் மற்ற வர்க்கங்கள் மற்றும் சமூகப் பகுதியினர் மத்தியில் தன்னுடைய கருத்துகளைப் பரப்ப வேண்டியிருந்தது, விவசாயிகள், நகர மற்றும் கிராமப் படிப்பாளிகள், கைவினைஞர்கள் ஆகியோர் மத்தியில் வேலை செய்ய வேண்டியிருந்தது.

இத்தகைய கட்சியைக் கறாரான, சமரசத்துக்கு இடமில்லாத விஞ்ஞானத் தன்மையையும் புரட்சிகரத் தன்மையையும் அங்கக ரீதியில் ஒருங்கிணைந்த மார்க்சியம் என்னும் உறுதியான அடிப்படையின் மீது நிறுவ வேண்டும்; அது தன்னுடைய நடவடிக்கையில் தத்துவம் மற்றும் நடைமுறையின் பிரிக்கப்பட முடியாத ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும்.

மார்க்சியக் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் மட்டுமே எல்லா ஜனநாயக சக்திகளுக்கும் தலைமை தாங்குகின்ற ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் எதேச்சாதிகாரத்தை ஒழிக்க முடியும்; அத்தகைய கட்சி "வெற்றிகரமான கம்யூனிசப் புரட்சிக்கு இட்டுச் செல்கின்ற பகிரங்கமான அரசியல் போராட்டம் என்னும் நேர்பாதையில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்துக்கு (எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் தோளோடு தோள் நிற்க) தலைமை தாங்கும்" என்பது லெனினுடைய

முடிவு.* அது ருஷ்யாவில் அத்தகைய கட்சியை அமைப்பதற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

லெனின் மற்றும் இதர மார்க்சியவாதிகளின் முயற்சிகளினால் நரோத்னிக்குகள் முறியடிக்கப்பட்டார்கள்.

ருஷ்யாவில் மார்க்சியக் கட்சியை அமைப்பதற்கு ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளின்'' கருத்துகள் மற்றொரு தடையாக இருந்தன.

அவர்கள் முதலாளித்துவ அறிவுஜீவிகள், நிதானமான மிதவாதிகள்; ஜாரிஸ்ட் அரசாங்கம் அனுமதித்த பத்திரிகைகளிலும் இதழ்களிலும் மார்க்சியப் பதாகையின் கீழ் தம்முடைய கருத்துகளை விளக்கி எழுதி வந்தார்கள். ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகள்'' நாட்டில் முதலாளித்துவ வளர்ச்சியை ஆதரிக்கின்ற பொழுது தம்க்குரிய முறையில் நரோத்னிக்குகளை சிறு அளவு உற்பத்தியை ஆதரிப்பவர்கள் என்று விமர்சனம் செய்தார்கள். அத்தகைய விமர்சனத்தின்படி அவர்கள் மார்க்சியத்தைத் தகவமைக்கவும் அதன் புரட்சிகரமான உள்ளடக்கத்தை அகற்றவும் முயற்சி செய்தார்கள். ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளின்'' தலைவரான பியோத்தர் ஸ்துரூவே முதலாளித்துவ அமைப்பை எதிர்த்துப் புரட்சிகரமாகப் போராடுவதற்குப் பதிலாக முதலாளித்து

* V. I. Lenin, *Collected Works*, vol. 1, p. 300.

வத்தைப் போற்றினார், முதலாளித்துவத்திடம் பயில வேண்டுமென்று வலியுறுத்தினார். ஆகவே ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகள்'' முதலாளி வர்க்க சித்தாந்தத்தை எடுத்துக் கூறினார்கள், தொழிலாளர் இயக்கத்தை முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்துவதற்கு முயன்றார்கள். அவர்கள் புரட்சிகர மார்க்சியத்தை எதிர்த்தார்கள், மார்க்சியத் தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்தார்கள். அதே சமயத்தில் அவர்கள்—மிகவும் ஜாக்கிரதையாகவே—எதேச்சாதிகாரத்தை எதிர்த்து முதலாளித்துவ ஜனநாயக சுதந்திரங்களைக் கோரினார்கள்.

நரோத்னிக்குகளை எதிர்த்த புரட்சிகர மார்க்சிஸ்டுகள் ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளுடன்'' தற்காலிகமான உடன்பாட்டுக்கு வந்தார்கள்; இவர்கள் நடத்திய பத்திரிகைகளில் தம்முடைய கட்டுரைகளை வெளியிட்டார்கள்.

சமூக-ஜனநாயகவாதிகளும் ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளும்'' 1895இல் கூட்டாக ஒரு கட்டுரைத் தொகுப்பை வெளியிட்டார்கள்; லெனின், பிளெஹானவ் மற்றும் இதர சமூக-ஜனநாயகவாதிகள் எழுதிய கட்டுரைகள் ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளின்'' கட்டுரைகளுடன் சேர்த்து வெளியிடப்பட்டன. நரோத்னிக் இயக்கத்தின் பொருளாதார உள்ளடக்கமும் திரு. ஸ்துரூவேயின் புத்தகத்தில் அதைப் பற்றிய விமர்சன

மும் என்ற தலைப்பில் லெனின் எழுதியிருந்த கட்டுரையில் மிதவாத நரோத்னிக்குகளின் தவறான கருத்துகளை மட்டுமின்றி ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளின்'' கருத்துகளையும் ஆழமாக விமர்சனம் செய்தார். ஸ்துரூவே யின் புத்தகத்தின் முக்கியமான குறையை, அதாவது மார்க்சியத்திலிருந்து எவ்விதமான புரட்சிகர உள்ளடக்கத்தையும் அவர் நீக்க விரும்புவதை லெனின் அம்பலப்படுத்தினார். ஸ்துரூவே தன்னுடைய புத்தகத்தை மார்க் சிய நிலையிலிருந்து எழுதவில்லை; முத லாளித்துவப் புறவயவாத நிலையிலிருந்து எழுதினார். அவர் மார்க்சியத்தைப் பற்றி தெளிவில்லாத, சூக்குமமான வடிவத்தில் எழு தியபடியால் அதில் புரட்சிகரமான உள்ளடக் கம் ஏதுமில்லாதிருந்தது. ஸ்துரூவே முத லாளித்துவத்தின் வர்க்க முரண்பாடுகளை யும் பாட்டாளி வர்க்கத்தின் சோஷலிசக் கடமைகளையும் பகுப்பாய்வு செய்வதைத் தவிர்த்தார். அவர் அரசைப் பற்றிய மார்க் சின் கோட்பாட்டைத் ''திருத்துவதற்கு'' முயன்றார்; முதலாளித்துவத்தைப் புரட்சி கரமான முறையில் ஒழிக்கின்ற மார்க்சியத் தத்துவத்துக்குப் பதிலாக முதலாளித்துவ சமுதாயத்தைச் சீர்திருத்தம் செய்கின்ற மித வாதத் தத்துவத்தை வைத்தார். ஸ்துரூவே யின் புத்தகத்திலிருந்த மார்க்சியத்தைப் பற்றிய மிதவாத முதலாளி வர்க்கக் கருத்து விளக்கம் குறித்து லெனின் செய்த விமர் சனம் 1894ஆம் ஆண்டிலேயே இலையுதிர்

பருவத்தில் லெனின் தலைமையில் பீட்டர்ஸ் பர்க் மார்க்சிஸ்டுகளின் குழு ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளுடன்'' நடத்திய சூடான விவாதங்களின் விரிவாக இருந்தது.

வெவ்வேறு சித்தாந்த நிலைகளைக் கொண்டிருந்த பல்வேறு அரசியல் சக்தி களுடைய கூட்டு முயற்சிகள் புரட்சிக்காரர் கள் சமரசம் செய்து கொள்ள அனுமதித்த லும் அதன் தன்மையும் என்ற நோக்கி லிருந்து பார்க்கும் பொழுது சுவாரசியமான வையாக இருக்கின்றன.

''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளின்'' முத லாளி வர்க்க நோக்கங்களை, அவர்கள் தொழிலாளர் இயக்கத்தை முதலாளி வர்க் கத்தின் சித்தாந்தத்துக்கும் நலன்களுக்கும் கீழ்ப்படுத்த திரும்புதலை லெனின் நன்றாக அறிவார். எனினும் அவர் கூட்டுப் பிரசுரத் தில் கட்டுரைகளை எழுதினார்.

''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளுடன்'' இந்த இலக்கிய ரீதியான உடன்பாடு தற் காலிகமான அரசியல் கூட்டணி என்று அவர் கருதினார். அத்தகைய கூட்டணி தற் காலிகமாக இருக்க வேண்டும்; அது மட்டு மின்றி முழுமையான சித்தாந்த, அரசியல், ஸ்தாபன சுதந்திரத்தைக் கடைப்பிடிப்ப துடன் ஒருவரது தற்காலிகமான, நம்ப முடியாத கூட்டாளியை விமர்சிப்பதற்கு முழுமையான சுதந்திரம் அவசியம்.

இந்தத் தற்காலிகமான உடன்பாட்டின் காரணமாக ''வியப்பூட்டும் வேகத்திலே

நரோத்னிக் இயக்கத்தை வென்று தீர்த்தோம், மார்க்சியக் கருத்துகள்... மிக விரிவாகப் பரவின...''.* அதே சமயத்தில் மார்க்சியத்தை மிதவாத முதலாளி வர்க்க அடிப்படையில் விளக்கம் தந்தவர்களுடைய திருத்தல்வாதக் கருத்துகள் அம்பலப்படுத்தப் பட்டன. அதனால் இத்தற்காலிக உடன்பாடு புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளின் இலட்சியத்துக்கு நல்ல சேவையளித்தது.

எனினும் இது ''சட்ட பூர்வ மார்க்சியத்துக்கு'' எதிரான லெனினுடைய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. அவர் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த காலத்திலும் அதையே தொடர்ந்தார். அவர் ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளது'' ஒவ்வொரு வெளியீட்டுக்கும் பதிலளித்தார்; அவர்களுடைய திருத்தல்வாதக் கருத்துகளை விமர்சனம் செய்தார். லெனின் சைபீரியாவிலிருந்த பொழுது எழுதிய கட்டுரைகளில் ஸ்துரூவே மற்றும் அவருடைய ஆதரவாளர்களின் மார்க்சிய விரோதக் கருத்துகளை அம்பலப்படுத்தினார்; முதலாளி வர்க்கத்தை பகிரங்கமாக ஆதரித்து அதன் வர்க்க நலன்களை முரணில்லாமல் வெளியிட்ட ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளின்'' தலைவர்கள் எத்தகைய வளர்ச்சியை அடைந்திருக்கிறார்கள்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 217.

என்பதை அவர் எடுத்துக் காட்டினார். 1901க்குள் ''சட்ட பூர்வ மார்க்சியம்'' ஒரு சித்தாந்தப் போக்கு என்ற முறையில் அநேக மாக அழிந்து விட்டது. அதற்குப் பிறகு அதன் முந்திய தலைவர்கள் முதலாளித்துவ அரசியலமைப்புச் சட்ட ஜனநாயகக் கட்சி யின் கருவாக, போல்ஷிவிசம் மற்றும் அக் டோபர் புரட்சியின் எதிரிகளாக மாறினார் கள்.

''சட்ட பூர்வ மார்க்சியம்'' என்பது முற்றிலும் ருஷ்யாவுக்கே உரிய நிகழ்வு அல்ல. அது ''மார்க்சியத்தை 'அன்பினால்' கொலை செய்ய... மிதவாத முதலாளி வர்க் கம் ஏற்றுக் கொள்ளக் கூடிய எல்லாவற்றை யும் எடுத்துக் கொண்டு... மார்க்சியத்தின் ஜீவனுள்ள ஆன்மாவை 'மட்டுமே', அதன் புரட்சிகரமான உள்ளடக்கத்தை 'மட்டுமே' தூக்கியெறிய விரும்பிய... முதலாளி வர்க்கத் தத்துவாசிரியர்களின் சர்வதேச ரீதியான முயற்சி'' என்று லெனின் பிற்காலத் தில் எழுதினார்.*

''சட்ட பூர்வ மார்க்சியத்தை'' எதிர்த்து லெனின் நடத்திய போராட்டம் சர்வ தேச முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது; ஏனென்றால் ''சட்ட பூர்வ மார்க்சியம்'' சர்வதேச சந்தர்ப்பவாதத்தின் ஒரு வகை, ''பொருளாதாரவாதத்தின்'' தத்துவ அடிப் படையாகும். இப்போராட்டம் மார்க்சியத்

* V. I. Lenin, *Collected Works*, vol. 21, p. 222.

தத்துவத்தைத் திருத்துவதை எதிர்த்து சித்தாந்த ரீதியில் சமரசமில்லாமல் போராடுவதற்கு உதாரணமாக இருந்தது.

உண்மையான மார்க்சிஸ்டு என்ற முறையில் லெனின் தத்துவப் பிரச்சினைகளை விவாதிப்பதுடன் நிற்கவில்லை; அவர் நடைமுறைப் புரட்சிக்காரராகவும் இருந்தார்.

அவர் 1893 ஆகஸ்டில் பீட்டர்ஸ்பர்குக்கு வந்தவுடன் அங்கேயிருந்த சமூக-ஜனநாயகக் குழுக்களின் நிலைமையை கவனமாக ஆராய்ந்து அவற்றின் நடவடிக்கைகளின் போக்கும் தன்மையும் தீவிரமாக மாற்றப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். இருக்கின்ற புரட்சிகர மார்க்சிய சக்திகளை ஒன்று சேர்ப்பதற்கும் மற்ற நகரங்களிலிருந்த மார்க்சிஸ்டுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கும் அவர் இடைவிடாது பாடுபட்டார். அவர் தன்னுடைய குழுவினரைத் தொழிற்சாலைகளுக்குச் சென்று அங்கிருந்த குழுக்களில் இயங்குமாறு செய்தார். சமூக-ஜனநாயகவாதிகள் தொழிலாளர் குழுக்களில் மார்க்சியத்தைப் பரப்புவதுடன் நிற்கக் கூடாது, அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் பரந்த பகுதியினரிடம் பிரச்சாரத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று லெனின் ஆலோசனை கூறினார். தொழிலாளர் குழுக்களில் கூட எதார்த்தத்துடன் நெருக்கமான தொடர்பில், தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் அவசியங்களோடு இணைத்து மார்க்சியத்தைப்

போதிப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவர் பாடுபட்டார்.

லெனினுடைய குழுவும் தொழிலாளர் குழுக்களும் திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாக இக்குழுக்களின் எண்ணிக்கை ஒரே ஆண்டில் மும்மடங்காகப் பெருகியது. அவற்றில் வளர்ச்சியடைந்த தொழிலாளி வர்க்கப் புரட்சிக்காரர்களின் மொத்த தலைமுறை, தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்கள் மற்றும் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கக் கட்சியை சுறுசுறுப்பாக நிர்மாணிப்பவர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

1895ஆம் ஆண்டின் இலையுதிர் பருவத்தில் பீட்டர்ஸ்பர்கில் இருந்த மார்க்சியக் குழுக்கள் இரகசியமான ஒற்றை அரசியல் ஸ்தாபனமாக—''தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகம்''—ஒன்று சேர்க்கப்பட்டன; அது சமூக-ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சியிலும், கட்சி அமைக்கின்ற முயற்சிகளிலும் ஒரு புதிய கட்டமாக அமைந்தது. சமூக-ஜனநாயக சக்திகளை பலப்படுத்துவதும் பெருந்திரளான மக்களிடையில் வேலையை விரிவுபடுத்துவதும் ஒன்று சேர்த்தலின் முக்கிய நோக்கங்களாக இருந்தன.

இக்கழகம் நன்கு வரையறுக்கப்பட்ட அமைப்பைக் கொண்டிருந்தது; அதன் உட்குழு பதினைந்து முதல் பதினேழு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது; அவர்கள் அந்த நகரத்தை மூன்று பகுதிகளாகப்

பிரித்து அதில் வேலை செய்தார்கள். மத்திய வழிகாட்டும் உட்குழுவில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்தார்கள். இக்கழகத்தின் அடித்தளத்தில் தொழிற்சாலைகளில் இருந்த தொழிலாளர் குழுக்கள் இருந்தன. மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் கழகம் இயங்கியது; அதே சமயத்தில் அன்றைக்கிருந்த சந்தர்ப்பங்களில் சாத்தியமான அளவுக்கு ஜனநாயகமும் பின்பற்றப்பட்டது.

புரட்சிக்காரர்கள் கைது செய்யப்படாதபடி அல்லது கைது செய்யப்படுவதைத் தாமதப்படுத்தி அந்த அவகாசத்தை வேலை செய்வதற்கு உபயோகிப்பதற்காகக் கழகத்தின் உறுப்பினர்கள் இரகசிய முறைகளை நிரந்தரமாகவும் கறாராகவும் கடைப்பிடிக்க வேண்டும்.

லெனின் தொழிலாளர்களுடன் தொடர்ச்சியான தொடர்புகளை வைத்துக் கொண்டு அவர்களுடைய தேவைகளை அறிந்திருந்தபடியால் அவர்களுக்கென்று விசேஷமாகப் பிரசுரங்களை எப்படி எழுதுவதென்று அறிந்திருந்தார். அவர் எளிமையான சொற்களில் எதேச்சாதிகார அரசியல் அமைப்பின் சாராம்சத்தை, உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள சமரசப்படுத்த முடியாத முரண்பாட்டை, சுரண்டல்காரர்களை எதிர்த்து அமைப்பு ரீதியாகவும் உணர்வு பூர்வமாகவும் போராட்டம் நடத்த வேண்டிய அவசியத்தை விளக்கி

னார். கழகத்தின் மற்ற உறுப்பினர்கள் எழுதிய பிரசுரங்களும் இதே மாதிரியான முறையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கூறிய கழகம் அடக்குமுறைக்கு ஆளான போதிலும் ருஷ்யாவில் தொழிலாளர் இயக்கத்தில் விஞ்ஞான சோஷலிசத்தைப் புகுத்திய முதல் ஸ்தாபனம் ஆகும். அது தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தது, 1895 மற்றும் 1896ஆம் ஆண்டுகளில் பீட்டர்ஸ்பர்கில் நடைபெற்ற பிரபலமான வேலைநிறுத்தங்களுக்குத் தலைமை தாங்கியது. அந்த வேலைநிறுத்தங்கள் தொழிலாளி வர்க்கத்தை அரசியல் விவகாரங்களின் முன்னணிக்குக் கொண்டு வந்தன. கழகம் தொழிலாளர் இயக்கத்தை ஆதாரமாகக் கொண்ட புரட்சிகரமான பாட்டாளி வர்க்கக் கட்சியின் கருவடிவமாக இருந்தது.

அதன் நடவடிக்கைகள் அனைத்தும் நாடு முழுவதிலும் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியை வன்மையாகத் தூண்டின. 1898ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் கட்சியின் முதல் காங்கிரஸ் நடைபெற்ற பொழுது ஐம்பதுக்கும் அதிகமான நகரங்களில் சமூக-ஜனநாயகக் குழுக்கள் இருந்தன.

நரோத்னிக் இயக்கம், மார்க்சியத்தின் முதலாளித்துவ உருத்திரிபுகள், சந்தர்ப்பவாதம் ஆகியவற்றை எதிர்த்த தத்துவாசிரியர் என்ற முறையில் லெனின் நடத்திய சமரசமில்லாத போராட்டம், அவர் மார்க்

சியத்தைப் படைப்பாற்றலுடன் வளர்த்து ருஷ்யாவின் நிலைமைகளுக்குக் கையாண்டது, பீட்டர்ஸ்பர்கின் மார்க்சிஸ்டுகளின் தலைவர்களில் ஒருவர் என்ற முறையில் அவர் செய்த ஸ்தாபன வேலை—இவை அனைத்தும் மார்க்சிய வளர்ச்சியில் புதிய, லெனினியக் கட்டத்துக்கு வழிவகுத்தன.

## கடந்த காலப் புரட்சிகர அனுபவத்தைப் பற்றிய அணுகுமுறை

ருஷ்யாவுக்கு ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி இன்றியமையாதது என்று லெனின் உறுதியாக நம்பினார்; அதன் நோக்கங்களைப் பற்றியும் அவர் அறிந்திருந்தார்; எனவே லெனின் அதன் தத்துவ, சித்தாந்த அடிப்படைகளை, அதன் ஸ்தாபனக் கோட்பாடுகளை, அதை அமைக்கும் திட்டத்தைச் சிறப்பான முறையில் விரித்துக் கூறினார்; ஏனென்றால் இது கட்சியின் எதிர்காலத்தை மட்டுமின்றி ருஷ்யாவில் மொத்த புரட்சிகர இயக்கத்தின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கக் கூடியதாக இருந்தது. ருஷ்யாவில் புரட்சிகர மார்க்சியக் கட்சியை அமைப்பது இக்காலகட்டத்தில் கேந்திரமான கடமையாக இருந்தது.

ஜூபிட்டர் கடவுளின் தலையிலிருந்து மினர்வா வெளியே வந்ததைப் போல ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி திடீரென்று தோன்றி விட முடியாது, ஐரோப்பா மற்றும் தன்னுடைய நாட்டின் மொத்த அனுபவத்

தையும் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் அத்தகைய கட்சியை அமைக்க முடியாது என்பதை லெனின் முழுமையாக உணர்ந்திருந்தார்.

''மேற்கு ஐரோப்பாவில் சோஷலிசம் மற்றும் ஜனநாயகத்தின் வரலாறு, ருஷ்யாவில் புரட்சிகர இயக்கத்தின் வரலாறு, நம்முடைய தொழிலாளர் இயக்கத்தின் அனுபவம்—நம்முடைய கட்சிக்குக் குறிவழிப்பட்ட அமைப்பையும் குறிவழிப்பட்ட செயல்முறையையும் விரித்துக் கூறுவதென்றால் இவ் **விஷயங்கள்** அனைத்தையும் நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும்'' என்று லெனின் எழுதினார்.*

லெனின் இந்த அனுபவத்தை, எல்லாவற்றுக்கும் மேலாக, பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியைப் பற்றி மார்க்ஸ், எங்கெல்சின் கோட்பாடுகளை, ''கம்யூனிஸ்டுச் சங்கம்'' மற்றும் முதலாவது அகிலத்தின் நடவடிக்கைகளை ஆழமாகவும் அகல் விரிவாகவும் கற்று ஆராய்ந்தார்.

மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் அவசியத்தைத் தத்துவ ரீதியாக நிறுவியதுடன் நின்று விடவில்லை. அவர்களது நேரடியான வழிகாட்டுதலின்படி 1847இல் ''கம்யூனிஸ்டுச் சங்கமும்'' 1864இல் முதலாவது அகிலமும் அமைக்கப்பட்டன; சில நாடுகளில் (1870க்களின் பிந்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 4, p. 217.

திய பகுதியிலும் 1880க்களின் தொடக்கத்திலும்) பெருந்திரளான சமூக-ஜனநாயகக் கட்சிகள் ஏற்பட்டன; 1889இல் இரண்டாவது அகிலம் அமைக்கப்பட்டது. இந்த ஸ்தாபனங்கள் செய்முறைப் புரட்சிகர வேலைகளில் ஈடுபட்டன. ''கம்யூனிஸ்டுச் சங்கத்தின்'' உறுப்பினர்கள் 1848—1849இல் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சியில் சுறுசுறுப்பாகப் பங்கெடுத்தார்கள். முதலாவது அகிலம் பல நாடுகளில் தொழிலாளர் இயக்கத்துக்கு உதவி செய்தது, அதற்குத் தத்துவத்தை வழங்கியது, பல்வேறு பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களையும் தொழிலாளி வர்க்கத் தேசியப் பிரிவுகளையும் கூட்டுப் போராட்டத்துக்கு ஒன்றுபடுத்தியது; தொழிலாளர் இயக்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் இடையில் தொடர்புகளைப் பலப்படுத்தியது.

முதலாவது அகிலத்தின் உறுப்பினர்கள் பலர் பங்கெடுத்த பாரிஸ் கம்யூன் அதன் குழந்தை எனலாம். பாரிஸ் கம்யூன் வீழ்ச்சியடைந்த பிறகு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மையம் ஜெர்மனிக்கு மாறியது.

1870க்களின் பிந்திய பகுதியிலும் 1880க்களின் முந்திய பகுதியிலும் தோற்றுவிக்கப்பட்டிருந்த சோஷலிஸ்ட் கட்சிகளும் அமைப்புகளும் (குறிப்பாக ஜெர்மானிய சமூக-ஜனநாயகம்) தொழிலாளி வர்க்கத்

தின் பொருளாதார், அரசியல் போராட்டங்களுக்கு வழி காட்டுவதில் சிற்சில வெற்றிகளை அடைந்திருந்தன.

முந்திய ஐரோப்பிய அனுபவத்தைப் பற்றி லெனின் உயர்வாகச் சிந்தித்த போதிலும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதிகள் இந்த அனுபவத்தைச் சுயேச்சையான முறையில் பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார்; ஏனென்றால் ''முன்னரே தயாரிக்கப்பட்ட மாதிரிகள் என்று எங்குமே கிடையாது''*.

ஐரோப்பாவின் அனுபவத்தை அப்படியே ருஷ்யாவுக்கு மாற்ற முடியாது; ஏனென்றால் எதேச்சாதிகார ஆட்சி நடைபெறுகின்ற நாட்டில் பகிரங்கமான சட்ட பூர்வமான நடவடிக்கைகளைச் செய்ய முடியாது. நாட்டின் சமூக, அரசியல் அமைப்பை மாற்றியமைப்பதற்குச் செய்யப்படுகின்ற மிகவும் அற்பமான முயற்சியைக் கூட எதேச்சாதிகாரம் குரூரமாக நசுக்கியது. இத்தகைய சூழ்நிலையில் ருஷ்யாவில் ஒரு சோஷலிஸ்ட் கட்சி சட்ட பூர்வமாக இயங்குவதற்கு எவ்விதமான சாத்தியமும் இல்லை. எனவே ஈவிரக்கமற்ற அடக்குமுறையை மீறியே கட்சியை அமைக்க வேண்டும்; அது மிகவும் சிக்கலான கடமையாக இருந்தது.

ருஷ்ய நிலத்தில் ஐரோப்பிய அனுபவத்தை அப்படியே பயிரிட முடியாததற்கு

---

* *Ibid.*

மற்றொரு காரணமும் இருந்தது. அக்கால கட்டம் உலக வரலாற்றின் திருப்பு முனை; ஏகாதிபத்தியம் தோன்றி விட்டது, மாபெரும் வர்க்கச் சமர்கள் நடக்கப் போகின்றன. இத்தகைய காலகட்டத்தில் ஐரோப்பாவின் சமூக-ஜனநாயக இயக்கம் திருத்தல் வாதத்தினால் மேன்மேலும் அரித்தழிக்கப் பட்டிருந்தது.

இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த ஜெர்மானிய, பிரெஞ்சு, இத்தாலிய மற்றும் இதர கட்சிகளில் சீர்திருத்தவாதப் போக்குகள் தோன்றி பலமடைந்திருந்தன. தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள சமரசப் படுத்த முடியாத முரண்பாடுகளை அவற்றின் சித்தாந்திகள் மழுப்புவதற்கு முனைந்தார்கள்; சமூகப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அவசியத்தை மறுத்தார்கள்.

1890க்களின் கடைசியிலிருந்து புரட்சிகர மார்க்சியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான எடுவார்டு பெர்ன்ஷ்டைன் தலைமை தாங்கினார். அவர் மார்க்சியத்தை ''விமர்சிப்பதற்கு சுதந்திரம்'' என்ற கோஷத்தைப் பிரகடனம் செய்தார், மார்க்சின் போதனை காலாவதியாகிவிட்டது, அதைத் திருத்த வேண்டும் என்று கோரினார். கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை எழுதப்பட்ட பிறகு வந்திருக்கும்

அரை நூற்றாண்டுக் காலத்தில் முதலாளித் துவத்தின் தன்மை கணிசமாக மாறி விட்ட தென்று அவர் வாதிட்டார். இந்த மாற்றங் கள் முரண்பாடுகளின் தன்மையை பாதித் திருக்கின்றன என்று அவர் கூறினார். முத லாளித்துவத்தின் தன்மையும் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் மாற்றமடைந் திருப்பதால் முதலாளித்துவ அமைப்பைப் புரட்சியின் மூலம் ஒழித்து விட்டு சமு தாயத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப் பதற்காகப் பாட்டாளி வர்க்கத்தின் அரசி யல் ஆதிக்கத்தை நிறுவுவது இனிமேல் அவசியமில்லை. முதலாளித்துவ ஜனநாயக நிறுவனங்களைக் கொண்டு படிப்படியான சீர்திருத்தங்களின் மூலம் சோஷலிசத்தை ஏற்படுத்த முடியும் என்று பெர்ன்ஷ்டைன் கூறினார். எனவே, இத்தகைய சூழ்நிலை யில் முதலாளித்துவ நாடாளுமன்றத்திலும் தேர்தல் முறையின் மூலமும் இத்தகைய சீர்திருத்தங்களுக்குப் போராடுவதே பாட் டாளி வர்க்கக் கட்சியின் கடமை. ''இயக் கமே எல்லாமாகும், இறுதி இலட்சியம் எதுவுமில்லை'' என்பது பெர்ன்ஷ்டை னுடைய கோஷம். அவர் இந்த கோஷத்தில் மார்க்சியத்துக்கு மாறான தன்னுடைய தத் துவத்தின் சாராம்சத்தை எடுத்துக் கூறி னார். இந்த கோஷம் முதலாளித்துவம் தவிர்க்க முடியாதபடி அழியும் என்பதை மறுத்தது, முதலாளித்துவ சமுதாயத்தைப்

புரட்சியின் மூலம் கம்யூனிச சமுதாயமாக மாற்றுவதைப் பற்றிய விஞ்ஞான ரீதியான மார்க்சியத் தத்துவத்தை மறுத்தது. சோஷலிசத்துக்காகவும் சோஷலிசப் புரட்சிக்காகவுமான போராட்டத்தை நிராகரித்தது, சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்குப் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் வர்க்கப் போராட்டத்துக்குப் பதிலாக சீர்திருத்தங்களைக் கோருகின்ற இயக்கம் போதும் என்றது. இது சீர்திருத்தவாதத்தின் சாராம்சம்; மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைத் திருத்த முற்பட்டதன் நோக்கம்.

இன்றளவில் கூட விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் காரணமாக முதலாளித்துவத்தின் தன்மை மாறிவிட்டது, ஆகவே மார்க்சியம் காலாவதியாகி விட்டது என்ற கருத்தை நவீன திருத்தல்வாதிகள் ஆதரிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருத்தல்வாதம் ஜெர்மனியில் தோன்றியது; பிறகு மற்ற நாடுகளுக்குப் பரவியது. ''தற்காலத்தில்... ஆங்கிலேய ஃபேபியன் வாதிகளும், பிரெஞ்சு அமைச்சரவைவாதிகளும், ஜெர்மன் நாட்டு பெர்ன்ஷ்டைன் ஆதரவாளர்களும், ருஷ்ய நாட்டு விமர்சகர்களும்—இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயுள்ளனர், ஒருவரை ஒருவர் ஏற்றிப் போற்றிக் கொள்

கின்றனர், ஒருவரிடமிருந்து மற்றவர் கற்கின்றனர், எல்லோரும் திரண்டெழுந்து 'வறட்டுச் சூத்திர வகைப்பட்ட' மார்க்சியத்தை எதிர்த்து ஆயுதம் ஏந்துகின்றனர்'' என்று லெனின் என்ன செய்ய வேண்டும்? என்ற புத்தகத்தில் எழுதினார்.*

ருஷ்யாவில் ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளும்'' பொருளாதாரவாதிகளும் பெர்ன்ஷ்டைனுடைய தத்துவத்தை ஆதரித்தார்கள்.

முதலாளித்துவ வளர்ச்சி மற்றும் வர்க்கப் போராட்டத்தின் தன்மையிலிருந்து தோன்றிய புறவய மற்றும் அகவயக் காரணங்களினால் சோஷலிஸ்ட் இயக்கத்தில் திருத்தல்வாதம் தோன்றியது.

முதலாவதாக, 19ஆம் நூற்றாண்டு முடிவதற்குள் மார்க்சியம் அதை எதிர்த்த குட்டி முதலாளி வர்க்கத் தத்துவங்களில் (புரூதோனிசம், பிளாங்கிவாதம் மற்றும் இதரவை) ஒன்றுமில்லை என்று நிரூபித்து விட்டது. குட்டி முதலாளி வர்க்கத் தத்துவங்களும் போக்குகளும் தம்மைக் காத்துக் கொள்வதற்கு வேறு வழிகளைத் தேடின. ''மார்க்சியத்தின் தத்துவார்த்த வெற்றியால் நிர்ப்பந்திக்கப்பட்ட அதன் பகைவர்கள், மார்க்சிஸ்டுகளாய்த் தமக்கு வேஷமிட்டுக் கொண்டனர் — வரலாற்றின் இயக்கவியல்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 201.

போக்கு அத்தகையதாய் இருந்தது. உள்ளுக்குள் உளுத்துப் போய்விட்ட மிதவாத மானது சோஷலிச சந்தர்ப்பவாதத்தின் வடிவில் தனக்குப் புத்துயிர் அளித்துக் கொள்ள முயன்றது'' என்று லெனின் இதைப் பற்றி எழுதினார்.* மார்க்சியத்துக்குள் புரட்சிகர சக்திகளுக்கும் சந்தர்ப்பவாத சக்திகளுக்கும் இடையில் போராட்டம் நடைபெற்றது. மார்க்சியத்துக்குள்ளேயிருந்த மார்க்சிய விரோதப் போக்குகள் மார்க்சியத்தின் அடிப்படையான கோட்பாடுகளை எதிர்த்தன, அவை பொய்யானவை என்று நிரூபிக்க முனைந்தன.

திருத்தல்வாதம் சமூகத் தோற்றுவாய்களையும் கொண்டிருந்தது. காலனியாதிக்கக் கொள்ளையினால், உலகச் சந்தையில் தனக்கிருந்த விசேஷ நிலைமையினால் மிகை லாபங்களைப் பெற்ற முதலாளி வர்க்கம் அதில் அற்பமான பகுதியைத் தொழிலாளி வர்க்கத்தில் உயர்ந்த தொழில்நுட்பத் தேர்ச்சி கொண்டிருந்த சிறு பகுதியினருக்கு ஊதியமாகக் கொடுத்தது. முதலாளி வர்க்கம் அதே முறையில் பணத்தைச் செலவிட்டு நாடாளுமன்றத்திலுள்ள தொழிலாளர்களின் பிரதிநிதிகளில் சிலரையும் தொழிற் சங்கத் தலைமையையும் சமூக-ஜனநாயகக்

* வி. இ. லெனின், மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள், பக்கம் 16.

கட்சிகளின் தலைவர்களையும் வளைத்துப் போட்டுக் கொண்டது. இது 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திற்குள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமிருந்த ஏகாதிபத்திய நாடுகளில் ''தொழிலாளர் பிரபுக்கள்'' என்னும் சற்று விரிந்த பகுதியை ஏற்படுத்தியது; அவர்கள் தம்முடைய பொருளாயத மற்றும் சமூக அந்தஸ்தைப் பற்றித் திருப்தியோடிருந்தார்கள்; அதை மேலும் பலப்படுத்திக் கொள்வதில் அக்கறை காட்டினார்கள். அவர்கள் உண்மையில் முதலாளி வர்க்கத்துக்குச் சேவை செய்தார்கள்; சீர்திருத்தவாதம் மற்றும் திருத்தல்வாதம் அவர்களிடம் பிறந்து வளர்ந்தன. தொழிலாளி வர்க்கத்தின் அணிகளில் சேர்ந்த குட்டி முதலாளி வர்க்கமும் திருத்தல்வாதத்தை ஆதரித்தது.

சமூக-ஜனநாயக இயக்கத்தில் மிக முந்திய காலமான 1880க்களிலேயே திருத்தல்வாதப் போக்குகள் தோன்றின என்றாலும் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து எங்கெல்ஸ் நடத்திய உறுதியான போராட்டம் சமூக-ஜனநாயகக் கட்சிகளில் அது விரிவாகப் பரவுவதைத் தடுத்தது. எங்கெல்சின் மரணம் மார்க்சியத்தின் எதிரிகள் தம்முடைய நடவடிக்கையை அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பாக இருந்தது.

திருத்தல்வாதம் தொழிலாளர் இயக்கத்தைப் புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்திலிருந்து சீர்திருத்தங்களுக்கும் மித

வாத முதலாளி வர்க்கத் தொழிலாளர் கொள்கைகளுக்கும் திருப்பி விட முடியும் என்பதால் அது ஆபத்தானதாக இருந்தது. ஆகவே சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துப் போராடுதல் உண்மையான மார்க்சியவாதிகள் அனைவருக்கும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் முழுவதற்கும் முக்கியமான கடமையாக இருந்தது. இப்போராட்டத்தை மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயக இயக்கத்திலிருந்த புரட்சிகரமான இடதுசாரியினர் நடத்தினார்கள். ரோஸா லுக்சம்பர்க், கிளாரா ஸெத்கின், ஃப்ரான்ஸ் மேரிங், போல் லஃபார்க், ஜூல் கெட், அன்டோனியோ லப்ரியோலா, திமித்ர் பிளகோயெவ் ஆகியோர் அந்த இடதுசாரி அணியைச் சேர்ந்தவர்கள். எனினும் இந்தப் போராட்டம் எல்லா சமயங்களிலும் போதிய அளவுக்கு முரணில்லாதபடி நடத்தப்படவில்லை; திருத்தல்வாதிகளுடன் ஸ்தாபன ரீதியாக முறித்துக் கொள்கின்ற நிலையை ஒருபோதும் அடையவில்லை.

உதாரணமாக, 1899இல் ஹனோவரில் நடைபெற்ற ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் காங்கிரஸ் திருத்தல்வாதத்தைக் கண்டனம் செய்தது; ஆனால் அங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முக்கியமான திருத்தல்வாதியாகிய பெர்ன்ஷ்டைன் பெயரைக் குறிப்பிடுவதற்குத் தவறியது.

சமூக-ஜனநாயகக் கட்சிகள் மற்றும் இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள்

திருத்தல்வாதிகளின் பால் சமரசக் கொள் கையைக் கடைப்பிடித்தார்கள்.

## திருத்தல்வாதத்தை எதிர்த்து லெனின் நடத்திய போராட்டம்

லெனின் ''தொழிலாளி வர்க்க விடு தலைப் போராட்டக் கழகத்தின்'' தலைவர் களில் ஒருவர் என்ற முறையில் ஸைபீரியா வுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த பொழுது 1899 ஆகஸ்டில் பெர்ன்ஷ்டைன் எழுதிய **சோஷலிசத்தின் முன்நிபந்தனைகளும் சமூக-ஜனநாயகத்தின் கடமைகளும்** என்னும் புத்த கத்தைப் படித்தார். பெர்ன்ஷ்டைன் மற்றும் அவருடைய ஆதரவாளர்களின் கருத்து களைக் குறித்த தன்னுடைய அணுகு முறையை அவர் பின்வருமாறு விளக்கினார்: ''...வளர்த்திடுமாறு மார்க்சும் எங்கெல்சும் நம்மைப் பணித்துச் சென்ற இந்த விஞ்ஞா னத்தை ஓரடியுங்கூட இவர்கள் முன்னேறச் செய்துவிடவில்லை; புதிய போராட்ட முறைகள் எவற்றையும் இவர்கள் பாட் டாளி வர்க்கத்துக்குக் கற்றுக் கொடுத்து விடவில்லை. மாறாக, இவர்கள் பிற்பட்ட தத்துவங்களிலிருந்து சிறு கவளங்களைக் கடன்வாங்கி, பாட்டாளி வர்க்கத்துக்குப் போராட்டத் தத்துவத்தையல்ல, விட்டுக் கொடுத்துச் செல்லும் தத்துவத்தை... பிரச்

சாரம் செய்துப் பின்வாங்கியே சென்றிருக்கிறார்கள்.''*

லெனின் திருத்தல்வாதத்தை அம்பலப் படுத்துவதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தினார். அவருடைய கட்டுரைகளும் கடிதங்களும் பெர்ன்ஷ்டைன்வாதத்தினால் ஏற்படுகின்ற மாபெரும் தீங்கைச் சுட்டிக் காட்டின. திருத்தல்வாதத்தை உறுதியாக எதிர்த்துப் போராடுங்கள், மார்க்சியம் மற்றும் சமூக-ஜனநாயகத்தில் புரட்சிகர மார்க்சியப் போக்கின் வெற்றியை உறுதிப்படுத்துங்கள் என்று அவர் நேர்மையான எல்லா சமூக-ஜனநாயகவாதிகளையும் கேட்டுக் கொண்டார்.

திருத்தல்வாதம் என்னும் விஷக்கிருமி ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்திலும் கூட ஊடுருவியிருந்தது. ருஷ்யாவில் ''சட்டபூர்வ மார்க்சிஸ்டுகளைத்'' தவிர பொருளாதாரவாதிகள் என்று சொல்லப்படுபவர்களும் தோன்றியிருந்தார்கள். அவர்கள் 19ஆம் நூற்றாண்டின் கடைசியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கத்திலிருந்த சந்தர்ப்பவாதப் போக்கைப் பிரதிநிதித்துவம் செய்தார்கள். அவர்கள் இரண்டாம் அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளில் மார்க்சியத்தின் எதிரி

---

* வி. இ. லெனின், சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1974, பக்கம் 17.

களாக இருந்த பெர்ன்ஷ்டைன்வாதிகளின் கருத்துகளைப் பிரச்சாரம் செய்தார்கள்.

பொருளாதாரவாதத்தின் வலதுசாரிப் பிரிவில் எஸ்.என். புரொக்கப்போவிச், எ.தி. குஸ்கோவா, வி.பி. அக்கீமவ் மற்றும் சிலர் இருந்தார்கள். மேற்கூறியவர்கள் பெர்ன்ஷ்டைனை மிகத் தீவிரமாக ஆதரித்தார்கள். எ.தி. குஸ்கோவா எழுதிய *Credo* இக்குழுவினரது கருத்துகளை விளக்கியது; அவை பெர்ன்ஷ்டைனுடைய திருத்தல்வாதக் கருத்துகளுடன் முழுமையாகப் பொருந்தியிருந்தன.

ரபோச்சயா மீஸ்ல் ("தொழிலாளர் சிந்தனை") என்ற பத்திரிகை உண்மையில் பொருளாதாரவாதக் கருத்துகளின் தலைமை நிலையமாக, பிறப்பிடமாக, சாதனமாக இருந்தது. அதை நடத்திக் கொண்டிருந்த சமூக-ஜனநாயக அறிவுஜீவிகள் அது தொழிலாளர் பத்திரிகை என்று சித்திரித்தார்கள்; ஆனால் அவர்கள் சீர்திருத்தவாத மற்றும் சந்தர்ப்பவாதக் கருத்துகளைப் பின்பற்றினார்கள்.

ரபோச்சியே தேலோ ("தொழிலாளர் இலட்சியம்") என்னும் இதழும் பொருளாதாரவாதிகளின் கருத்துகளை ஆதரித்தது. தத்துவார்த்த வெளியீட்டின் பாத்திரத்தை வகிக்க விரும்பிய அந்த இதழை வெளிநாட்டில் வசித்துக் கொண்டிருந்த ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் வெளியிட்டார்கள். பி.என். கிரிச்சேவ்ஸ்கி, வி.பி. இவான்ஷின்,

அ. எஸ். மர்த்தீனவ் உள்ளிட்ட பொருளா தாரவாதத் தலைவர்கள் அந்த இதழின் ஆசிரியர்களாக இருந்தார்கள்.

பெர்ன்ஷ்டைனைப் பின்பற்றி பொருளா தாரவாதிகள் பிரச்சாரம் செய்த கருத்துகள் சமூகப் புரட்சியின் அவசியத்தையும் தொழிலாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் அவசியத்தையும் நிராகரித்தன.

பெர்ன்ஷ்டைனைப் போல பொருளா தாரவாதிகள் கொச்சையான ''பொருளா தாரப் பொருள்முதல்வாதத்தின்'' நிலைகளில் நின்றிருந்தார்கள். பொருளாதாரம், ''பொருளாதாரக் காரணி'' அரசியலின் தன்மையை நிர்ணயிப்பதாகக் கருதிய பொருளாதாரவாதிகள் அரசியல் போராட்டம் பொருளாதாரப் போராட்டத்துக்குக் கீழ்ப் படுத்தப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

ருஷ்யாவில் தொழிலாளர் இயக்கம் இப்பொழுதுதான் உருவாகிக் கொண்டிருக்கிறது, அதற்கு அனுபவம் அல்லது பலம் இல்லை; ஆகவே அதனால் அரசியல் நோக்கங்களைப் புரிந்து கொள்ளவோ அரசியல் போராட்டத்தை நடத்தவோ முடியாது. என்று கூறினர். அரசியல் போராட்டம் மிதவாத முதலாளி வர்க்கத்தின் தனியுரிமை என்று கருதப்பட்டது. போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய பொருளாதார நிலையையும் வேலை நிலைமைகளையும் அபிவிருத்தி

செய்கின்ற போராட்டங்களில் மட்டுமே ஈடுபட வேண்டும். சமூக-ஜனநாயகவாதிகளின் கடமை தொழிலாளி வர்க்கத்தின் இந்தப் போராட்டத்துக்கு உதவி செய்வது, அதாவது பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தை ஊக்குவிப்பதே.

பொருளாதாரவாதிகள் தொழிலாளர் இயக்கத்தின் மீது விஞ்ஞான சோஷலிசத் தத்துவத்தின் தீர்மானகரமான தாக்கத்தையும் மறுத்தார்கள். தொழிலாளர் இயக்கம் தன்னியல்பானது என்று அவர்கள் கூறினார்கள். இத்தத்துவம் அவர்களுடைய மொத்த சித்தாந்தத்துக்கும் ஸ்தாபனக் கோட்பாடுகள் அனைத்துக்கும் அடிப்படையாக இருந்தது. வரலாற்று வளர்ச்சி தன்னியல்பானது என்று அவர்கள் கருதியபடியால் பொதுவாக மக்களையும் சிறப்பாகத் தொழிலாளி வர்க்கத்தையும் உற்பத்தி உறவுகளின் விளைவாக, உற்பத்திச் சக்திகளின் செயலற்ற ''அம்சமாகக்'' கருதினார்கள். ஆகவே மக்களுடைய நடவடிக்கைகள், வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வு மட்டம் மற்றும் அதன் அரசியல் கல்வி முக்கியமல்ல. அவர்கள் அகவயக் காரணி வகிக்கின்ற பாத்திரத்தைப் புரிந்து கொள்ளத் தவறிய காரணத்தால் தொழிலாளர் இயக்கத்தை விஞ்ஞான சோஷலிசத்திலிருந்து தனியாகப் பிரிப்பதற்கு முனைந்தார்கள்.

அவர்களுடைய தவறான தத்துவம் தவ

றான செயல்முறைக் கோட்பாடுகளுக்கு வழி வகுத்தது. பொருளாதாரப் போராட்டங்களிலிருந்தும் தொழிலாளர் இயக்கத்தின் அன்றாடத் தேவைகளிலிருந்தும் செயல் தந்திரமும் நடைமுறைக் கொள்கையும் தன்னியல்பாகத் தோன்றும் என்று பொருளாதாரவாதிகள் கருதினார்கள். அதன் விளைவாக ஜனநாயகத்துக்கு ஆதரவான, எதேச்சாதிகாரத்துக்கும் பிற்போக்குக்கும் எதிரான தலைசிறந்த போராளி என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரத்தை மறுத்தார்கள்.

அவர்கள் நடைமுறையில் தொழில் வாரியாக ஸ்தாபனங்களையும் வேலைநிறுத்த நிதிகளையும் அமைப்பதைப் பிரதானமாக வலியுறுத்தினார்கள். அவர்கள் கருத்தின்படி தொழிலாளி வர்க்கக் கட்சி என்பது தொழிற்சங்கக் கட்சியே. அரசியல் கட்சி தொழிலாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்க வேண்டும், அதன் அரசியல் வர்க்கப் போராட்டத்தின் அமைப்பாளனாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் மறுத்த பொழுது தொழிலாளர் இயக்கம் முதலாளி வர்க்க சித்தாந்தத்தினாலும் மிதவாத முதலாளி வர்க்கத்தின் தொழிலாளர் கொள்கையினாலும் வழிகாட்டப்பட வேண்டும் என்பதையே குறித்தது.

சர்வதேசத் திருத்தல்வாதத்தின் ஒரு ரகம் என்ற முறையில் பொருளாதார வாதம் தோன்றி வளர்ச்சியடைந்ததற்குரிய

பொதுக் காரணங்களைத் தவிர, அது ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் காலூன்றிய தற்கு விசேஷமான காரணங்களும் இருந் தன.

தொழிலாளி வர்க்கத்தில் பாட்டாளி வர்க்கம் அல்லாத, குட்டி முதலாளி வர்க்க சக்திகள், முதன்மையாக விவசாயிகள் கலந் திருந்தது அதற்கு ஒரு காரணமாகும். ருஷ்யா வில் தொழிலாளி வர்க்கத்தின் வேகமான வளர்ச்சி, குட்டி முதலாளி வர்க்க சித்தாந் தத்தின் ஆதிக்கத்தில் இருந்து, பாட்டாளி வர்க்க அனுபவம் இல்லாதிருந்த விவசாயி கள் அதன் அணிகளில் சேர்ந்தது தொழி லாளி வர்க்க சித்தாந்தத்தை ''நீராளமாக் கின''; சந்தர்ப்பவாதக் கருத்துகள் பரவு வதற்குச் சாதகமான நிலைமைகளை ஏற் படுத்தின.

வேலைநிறுத்தப் போராட்டங்களின் வெற்றிகளும் ருஷ்யத் தொழிலாளர் இயக் கத்தில் சந்தர்ப்பவாதம் வேகமாகவும் விரி வாகவும் பரவுதலுக்கு ஓரளவுக்கு உதவி புரிந்தன. உதாரணமாக, 1896—1900ஆம் வருடங்களின் போது நடைபெற்ற 166 வேலைநிறுத்தப் போராட்டங்களில் 120 வெற்றியில் முடிவடைந்தன. அந்த வெற்றி யின் சாதனைகள் அற்பமாக இருந்த போதி லும் அவை அரசியல் போராட்டங்கள் இல்லாமல் பொருளாதாரப் போராட்டங் களின் மூலமாக மட்டுமே தொழிலாளர் கள் நிலையில் சிறப்பான அபிவிருத்திகளை

ஏற்படுத்த முடியும் என்னும் பிரமைகளை வளர்த்தன. ஆகவே தொழிலாளி வர்க்கத்துக்கு அரசியல் போதிப்பதற்குப் பதிலாக பொருளாதார நடவடிக்கையை வற்புறுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

எனினும் ருஷ்யாவின் புரட்சிகர மார்க்சிஸ்டுகள் வேலைநிறுத்த இயக்கத்தின் வளர்ச்சி அல்லது அதன் சாதனைகளைப் பற்றி சிறிதுகூட அதிருப்தி அடைந்தார்கள் என்று கருதக் கூடாது. வேலைநிறுத்தப் போராட்டங்கள் வெற்றியடைவதை மார்க்சிஸ்டுகள் எப்பொழுதுமே வரவேற்கிறார்கள்; ஏனென்றால் அந்த வெற்றிகள் தொழிலாளர் இயக்கம் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது, பலமடைந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் அவர்கள் பொருளாதாரவாதிகளைப் போல பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தை வேலைநிறுத்த நடவடிக்கைக்குள் குறுக்கிவிடுவதில்லை அல்லது தொழிலாளர் இயக்கத்தைப் பொருளாதாரப் போராட்டத்தின் எல்லைக்குள் அடக்குவதில்லை. அவர்கள் புரட்சிகரமான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சித்தாந்த வழிகாட்டுதலின் மூலமாக தொழிலாளர் இயக்கத்தை அரசியல் போராட்டத்தின் தரத்துக்கு உயர்த்துவதற்கும் அதை உண்மையாகவே புரட்சிகரமாக்குவதற்கும் பாடுபடுகிறார்கள்.

லெனின் மற்றொரு காரணத்தையும்

சுட்டிக் காட்டினார். மார்க்சிஸ்டுகளுக்கு எதிரான போலீஸ் நவடிக்கைகள் மேன் மேலும் அதிகரித்தது பொருளாதாரவாதம் பலமடைந்ததற்கு ஒரு காரணம் என்று அவர் கூறினார். உதாரணமாக, பீட்டர்ஸ் பர்கின் ''போராட்டக் கழகத்தின்'' தலைவர்கள் (லெனின் உட்பட) கைது செய்யப் பட்ட பிறகு அந்த ஸ்தாபனத்துக்கு ''இளைஞர்கள்'' என்று சொல்லப்பட்டவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர்கள் ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளின்'' திருத்தல்வாத இலக்கியத்திலிருந்து தம்முடைய கருத்துகளைப் பெற்றவர்கள்; ஆகவே அவர்களுடைய தத்துவ அறிவு குறைவுதான். அவர்கள் ''தன்னியல்பான எழுச்சியின் விரிவுக்கும் வலுவுக்கும் முன்னே'' மண்டியிட்டார்கள்; அவர்கள் இந்த இயக்கத்திலிருந்து தத்துவம், நடைமுறை ஆகிய இரண்டிலுமே பின்தங்கினார்கள்.* ஆகவே எதிரெதிரான இரண்டு போக்குகளுக்கு இடையில் நடைபெற்ற பகிரங்கமான போராட்டத்தில் பொருளாதாரவாதம் வெற்றியடையவில்லை; ''பழைய'' புரட்சிக்காரர்கள் மேன்மேலும் அதிகமான எண்ணிக்கையில் போலீசுக்காரர்களால் ''பிடித்துச் செல்லப் பட்ட'' பொழுது, மேன்மேலும் அதிகமான ''இளைஞர்கள்'' முன்னணிக்கு வந்த பொழுது வெற்றி பெற்றது.**

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 480.

** அதே நூல், பக்கம் 249.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பொருளாதாரவாதம் இடம் பெற்றதற்கு மற்றொரு காரணம் அந்த இயக்கத்தில் ஏற்பட்ட நெருக்கடியாகும். அந்த நெருக்கடி 1898இல் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் முதல் காங்கிரசை அடுத்து ஏற்பட்டது. இது பிளவு, சீர்குலைவு மற்றும் ஊசலாட்டத்தின் கால கட்டம் என்று லெனின் வர்ணித்தார். கட்சி ஒற்றுமையுள்ள மத்திய அமைப்பாக இருக்கவில்லை. அதற்குச் செயல்திட்டம், விதி முறைகள், ஒற்றைச் செயல்தந்திரத் திசை வழி இல்லை. முதல் காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டதைப் பிரகடனம் செய்தது. ருஷ்ய சமூக-ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியைப் பொருளாதாரவாதிகள் பயன்படுத்திக் கொண்டார்கள்; அந்த நெருக்கடியைத் தீவிரப்படுத்தினார்கள். புரட்சிகர மார்க்சியப் பிரிவைக் காட்டிலும் தற்காலிகமாக அவர்கள் கை ஓங்கியிருந்தது. லெனினுடைய வார்த்தைகளில் கூறுவதென்றால் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகம் ''ஸ்தல கட்சி அமைப்புகளின் உருவமில்லாத அவியலாக மாறியது''*.

பொருளாதாரவாதம் பேரளவில் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை லெனின் உணர்ந்தார். தொழிலாளர் இயக்கத்தில் அது வெற்றியடைந்தால் ருஷ்யாவில் பாட்டாளி

* V. I. Lenin, *Collected Works*, vol. 7, p. 477.

வர்க்கத்தின் புரட்சிகர இயக்கம் தோல்வி அடையும். ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணமிக்க, புரட்சிகர மார்க்சியக் கட்சியை அமைப்பதற்குப் பொருளாதாரவாதத்தை சித்தாந்த ரீதியில் முறியடிக்க வேண்டும்.

பொருளாதாரவாதத்தை எதிர்த்து லெனின் சமரசத்துக்கு இடமில்லாத, முரணற்ற, விஞ்ஞான ரீதியாக வாதிக்கப்பட்ட போராட்டத்தை நடத்தினார்.

*Credo*வில் எழுதப்பட்டிருந்த பொருளாதாரவாதிகளின் கருத்துகளை லெனின் நன்றாக ஆராய்ந்த பிறகு 1899 ஆகஸ்டில் **ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் மறுப்பு** என்ற கட்டுரையை எழுதினார். ருஷ்யப் பொருளாதாரவாதம் சர்வதேசத் திருத்தல்வாதத்தின் ஒரு ரகம் என்று அவர் அக்கட்டுரையில் தெளிவாக எழுதினார்.

பின்னர் அவர் பொருளாதாரவாதிகளை விமர்சனம் செய்து கட்டுரைத் தொடரை எழுதினார். **ருஷ்ய சமூக-ஜனநாயகத்தில் பின்னடைவுப் போக்கு** மற்றும் *Profession de foi* **குறித்து** என்னும் தலைப்புகளைக் கொண்ட கட்டுரைகளில் அவர் ருஷ்யப் பொருளாதாரவாதிகளின் திருத்தல்வாதக் கருத்துகளை அம்பலப்படுத்தியது மட்டுமின்றி, கட்சியில் நெருக்கடி ஏற்பட்ட காரணங்களை விளக்கி அதைப் போக்குவதற்குரிய வழிகளை விவரித்தார்.

1900 டிசம்பரில் **இஸ்க்ரா** (''தீப்

பொறி'') பத்திரிகை நிறுவப்பட்ட பிறகு லெனின் அப்பத்திரிகையின் முதல் பதின் மூன்று இதழ்களில் இருபதுக்கும் அதிகமான கட்டுரைகளை எழுதினார். அவர் இக் கட்டுரைகளில் பொருளாதாரவாதிகளின் மார்க்சியத்துக்குப் புறம்பான கருத்துகளை விமர்சனம் செய்தார், ருஷ்யாவில் புரட்சிகர மார்க்சியக் கட்சியை அமைப்பதற்குரிய திட்டத்தை முன்வைத்தார், பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்திற்கு வழிகாட்டுவதில் அதன் பாத்திரத்தை விளக்கினார். உதாரணமாக, லெனின் பொருளாதாரவாதத்தை ஆதரிப்பவர்களுடன் ஓர் உரையாடல் என்ற கட்டுரையை 1901 டிசம்பரில் இஸ்க்ராவில் வெளியிட்டார். அவர் அக்கட்டுரையில் சந்தர்ப்பவாதிகளைத் தீவிரமாகத் தாக்கியதுடன் நெருக்கமாக ஒன்றுபட்ட, மத்தியப்படுத்தப்பட்ட மார்க்சியக் கட்சியை அமைக்க வேண்டிய காரணங்களை விளக்கினார்; அத்தகைய கட்சிதான் ஓங்கிவருகின்ற தொழிலாளி வர்க்கப் போராட்டங்களுக்கும் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான வெகுஜன இயக்கத்துக்கும் தலைமை தாங்க முடியும் என்றார்.

இக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் சந்தர்ப்பவாதத்தை எதிர்க்கின்ற போராட்டத்தில் திட்டவட்டமான கட்டத்தைப் பிரதிபலித்தன; அதே சமயத்தில் அவை என்ன செய்ய வேண்டும்? என்ற புத்தகத்தை எழுதுவதற்குத் தயாரிப்பின் பகுதியாகவும் இருந்தன.

இது வரை எழுதியவற்றைத் தொகுத்துரைப்போம். ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சி ஒருபுதிய வர்க்கத்தின்—பாட்டாளி வர்க்கத்தின்—வேகமான வளர்ச்சியுடன், தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியுடன், வர்க்கப் போராட்டம் தீவிரமடைதலுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தது. எனினும் உழைக்கும் மக்களுடைய விடுதலைப் போராட்டத்துக்குப் புரட்சிகர ஜனநாயகவாதிகள், நரோத்னிக்குகள் தலைமை தாங்கினார்கள். அவர்களுடைய சித்தாந்தம் கற்பனாவாத சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்டது; அது பெருந்திரளான சிறு உற்பத்தியாளர்கள் நிலப்பிரபுத்துவ எச்சங்கள் மற்றும் மூலதனத்தின் ஒடுக்குமுறைக்குக் காட்டிய எதிர்ப்பைப் பிரதிபலித்தது. முன்னர் ஏற்பட்ட தொழிலாளர் ஸ்தாபனங்கள் நரோத்னிக் கருத்துகளின் வன்மையான தாக்கத்துக்கு உட்பட்டிருந்தன என்றாலும் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியடைந்த பிரதிநிதிகள் நரோத்னிக்குகளிடமிருந்து வேறுபட்ட தம்முடைய சொந்தப் பாதையைப் பின்பற்றினார்கள். ''அராஜகவாதம் மற்றும் நரோத்னிக் சோஷலிசத்தின் பிரமைகளிலிருந்து, அரசியலைப் பற்றிய அருவருப்பிலிருந்து, ருஷ்யா தனிரகமான, புதிய வளர்ச்சிப் பாதையில் செல்லும் என்ற நம்பிக்கையிலிருந்து, மக்கள் புரட்சிக்குத் தயாராக இருக்கிறார்கள் என்ற உறுதியிலிருந்து, எதேச்சாதிகாரத்

துக்கும் வீரமிக்க அறிவுப் பகுதியினருக்கும் இடையில் நடைபெறுகின்ற இருவர்-சண்டையைப் போன்ற போராட்டத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்னும் தத்துவத்திலிருந்து''* ருஷ்யாவின் புரட்சிகர இயக்கத்தை விடுவிப்பதற்கு மார்க்சியம் மட்டுமே தகுதி உடையது.

*1883*க்கும் *1893*க்கும் இடையில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கம் மெதுவாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. ''இக்காலப் பகுதியில் சமூக-ஜனநாயகத்தின் தத்துவமும் வேலைத்திட்டமும் தோன்றி வளர்ந்து கெட்டிப்பட்டன.''**

*1890*க்களின் நடுப்பகுதியில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டம் அதன் வளர்ச்சியில் புதிய கட்டத்தை அடைந்தது. சமூக-ஜனநாயகவாதிகள் பங்கெடுத்த பெருந்திரளான தொழிலாளர் இயக்கம் உருவெடுத்தது. விடுதலை இயக்கத்தில் பாட்டாளி வர்க்கம் முக்கியமான சக்தியாக வளர்ந்து கொண்டிருந்தது. சோஷலிஸ்ட் சித்தாந்தத்தைத் தொழிலாளர் இயக்கத்தில் புகுத்துவதற்கும் சிதறிக் கிடந்த, தனித்தனியான மார்க்சியக் குழுக்களை சமூக-ஜனநாயகக்

---

* *Ibid.*, vol. 5, p. 80.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி *1*, பக்கம் *478*.

கட்சியாக ஒன்றுபடுத்துவதற்கும் சாதகமான நிலைமைகள் தோன்றிக் கொண்டிருந்தன. 1894க்கும் 1898க்கும் இடையில் ருஷ்ய சமூக-ஜனநாயகம் ''ஒரு சமூக இயக்கமாக, பெருந்திரளான மக்களின் எழுச்சியாக, ஓர் அரசியல் கட்சியாகத்''* தோன்றியது.

ருஷ்யாவில் சமூக-ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சியில் தீவிரமான திருப்புமுனை லெனினுடைய தத்துவ மற்றும் செய்முறைப் பணி இல்லாமல் நடைபெற்றிருக்க முடியாது.

லெனின் நரோத்னிக் இயக்கம், ''சட்ட பூர்வ மார்க்சியம்'', திருத்தல்வாதம், வறட்டுச் சூத்திரவாதம் ஆகிய அனைத்தையும் எதிர்த்துத் தீவிரமான போராட்டத்தை நடத்திய பொழுது மார்க்ஸ், எங்கெல்சின் போதனையைப் பாதுகாத்ததுடன் புதிய வரலாற்று நிலைமைகளுக்கு ஏற்ற விதத்தில் அதை வளர்த்தார். லெனின் தன்னுடைய தத்துவ மற்றும் செய்முறை நடவடிக்கையின் மூலம் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைப்பதற்கு வழிவகுத்தார்.

பீட்டர்ஸ்பர்க் நகரத்தில் லெனின் நிறைவேற்றிய புரட்சிகரப் பணி தேசிய முக்கியத்துவத்துடன் சர்வதேச முக்கியத்துவத்தையும் கொண்டிருந்தது. மார்க்சியத்

---

* அதே நூல், பக்கம் 478.

தத்துவம் மற்றும் செய்முறையின் வளர்ச்சியில் அது ஒரு புதிய, லெனினியக் கட்டத்தைத் துவக்கியது, சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சியை அமைக்கின்ற வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்கு அடித்தளத்தை அமைத்தது. ''1898ஆம் ஆண்டு வசந்த காலத்தில் கட்சி உருவாகியது, இது இக்காலப் பகுதியைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகளின் மிகவும் எடுப்பான, அதே நேரத்தில் **கடைசியான** செய்கையாகும்'' என்று லெனின் வலியுறுத்தினார்.*

நாடு புரட்சியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது, தொழிலாளி வர்க்கத்தை அமைப்பு ரீதியாகத் திரட்டுவது மேன்மேலும் அவசரக் கடமையாயிற்று. இக்கட்டத்தில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகம் ஆழமான நெருக்கடியில் சிக்கியிருந்தது. அது பிளவு மற்றும் ஊசலாட்டக் கட்டம் (1898—1900) ஆகும்.

மக்களிடம் தன்னியல்பாக எழுந்த பேரெழுச்சிக்கு தொழிலாளர் இயக்கத்தின் தலைமை ஈடு கொடுக்க முடியாதபடியால் இந்த நெருக்கடி வளர்ச்சியடைந்தது.

இந்த நெருக்கடியைப் போக்குவதற்கு சந்தர்ப்பவாதிகளை சித்தாந்த ரீதியில் முறியடித்தல், ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் பிளவை

---

* அதே நூல், பக்கம் 479.

அகற்றல், ஸ்தல சமூக-ஜனநாயக அமைப்புகளை ஒற்றை, மத்தியப்படுத்தப்பட்ட மார்க்சியக் கட்சியாக ஒன்று சேர்த்தல் இன்றியமையாதவையாக இருந்தன.

இது வெற்றியடைவதை லெனின் எழுதிய **என்ன செய்ய வேண்டும்?** என்னும் நூல் உறுதிப்படுத்தியது.

## 2. விஞ்ஞான சோஷலிசமும் தொழிலாளர் இயக்கமும்

லெனின் தன்னுடைய புத்தகத்தில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர மார்க்சியக் கட்சியின் தத்துவத்தை விளக்கினார். அவர் தொழிலாளர் இயக்கத்தில் புரட்சிகரமான தத்துவத்தின்—விஞ்ஞான சோஷலிசத்தின்—பாத்திரத்தையும் இத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சி தொழிலாளர் இயக்கத்துக்குத் தலைமை தாங்குவதில் வகிக்கின்ற பாத்திரத்தையும் விளக்கினார். புதிய வரலாற்று நிலைமைகளில் மார்க்சியம் ஒன்று மட்டுமே சரியான, விஞ்ஞான பூர்வமான புரட்சிகரத் தத்துவம், இந்த முற்போக்கான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சி மட்டுமே தொழிலாளர் இயக்கத்தின் போர்க்குணமிக்க அரசியல் தலைவனாக இருக்க முடியும் என்பதை லெனின் நிரூபித்தார்.

**என்ன செய்ய வேண்டும்?** என்னும் புத்தகத்தின் முதல் இரண்டு அத்தியாயங்களில் (''வறட்டுச் சூத்திரவாதமும் 'விமர்சன சுதந்திரமும்''' மற்றும் ''மக்களின் தன்னியல்பும் சமூக-ஜனநாயகவாதிகளின் உணர்வும்'') இப்பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன.

முதல் அத்தியாயத்தில் லெனின், ஐரோப்பியத் திருத்தல்வாதிகள், முக்கியமாக பெர்ன்ஷ்டைன் விஞ்ஞான சோஷலிசத் தத்துவத்தை — மார்க்சியத்தை — ''விமர்சன சுதந்திரம்'' என்னும் புதுக் கோஷத்தைப் பயன்படுத்தி திருத்தல்வாத முறையில் உருச் சிதைப்பதற்குச் செய்த முயற்சிகளை அம்பலப்படுத்துகிறார். திருத்தல்வாதிகள் தொழிலாளர் இயக்கத்தைப் பாதுகாப்பதாக உரிமை கொண்டாடியதை லெனின் மறுக்கிறார்; அவர்களுடைய கருத்துகள் சந்தர்ப்பவாதத்துக்கு அடிப்படையானவை, அவை சமூகப் புரட்சிக்குப் பாடுபடுகின்ற தொழிலாளி வர்க்கக் கட்சியை சமூக சீர்திருத்தங்களுக்குப் பாடுபடுகின்ற ஜனநாயகக் கட்சியாக மாற்றி விடும் என்று அவர் எடுத்துக்காட்டினார்.

மார்க்சியத்தை ''விமர்சிப்பதற்கு சுதந்திரம்'' என்ற கோஷத்தை ருஷ்யாவில் ஆதரித்தவர்களின் உண்மையான உருவத்தை அவர் எடுத்துக்காட்டுகிறார். அவர்கள் இந்த கோஷத்தை உபயோகித்து ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்துக்கு சுதந்திரத்தையே கோரினார்கள் என்பதை அம்பலப்படுத்துகிறார்.

லெனின் ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளும்'' பொருளாதாரவாதிகளும் மார்க்சியத்தைப் பற்றிச் செய்கின்ற விமர்சனத்தின் திருத்தல்வாத சாராம்சத்தை மேலும் விளக்குகிறார். இது உண்மையில் பெர்ன்

ஷ்டைனுடைய கருத்துகளுடன் முழுமையான ஒருமைப்பாட்டையே காட்டுகிறது, தொழிலாளர் இயக்கத்துக்குப் புரட்சிகரத் தத்துவத்தின் முக்கியத்துவத்தை மறுத்து அதன் தன்னியல்புவாதத்துக்கு அடிபணிகிறது என்று அவர் எடுத்துக் காட்டுகிறார்.

முதல் அத்தியாயம் தொழிலாளர் இயக்கத்துக்கும் சமூக-ஜனநாயகத்துக்கும் தத்துவப் போராட்டம் மற்றும் புரட்சிகரத் தத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்குகிறது.

இரண்டாவது அத்தியாயத்தில் லெனின் தொழிலாளர் இயக்கத்தில் தன்னியல்பான அம்சத்துக்கும் உணர்வு பூர்வமான அம்சத்துக்கும் இடையிலுள்ள உறவை விரிவாக ஆராய்கிறார், ருஷ்யாவில் தன்னியல்பான தொழிலாளர் இயக்கம் தோன்றிய காரணங்களைப் பகுத்தாராய்கிறார்; தன்னியல்புவாதம் தொழிலாளர் இயக்கத்தை முதலாளி வர்க்க சிந்தாந்தத்தின் ஆதிக்கத்துக்குத் தவிர்க்க முடியாதபடி உட்படுத்துவதால் அதற்குப் பணிவதால் ஏற்படுகின்ற ஆபத்தை விளக்குகிறார். லெனின் தன்னியல்பான தொழிலாளர் இயக்கத்தை வர்க்க உணர்வுடைய தொழிலாளர் இயக்கமாக மாற்றக் கூடிய வழியைச் சுட்டிக் காட்டுகிறார், முதலாளி வர்க்க சித்தாந்தத்தை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தையும் அந்தச் செயலுக்கு ஒரு புரட்சிகரமான கட்சியின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிறார்.

## தொழிலாளர் இயக்கத்தில் புறவய மற்றும் அகவயக் காரணிகளுக்கு இடையிலுள்ள உறவைப் பற்றி

லெனின் தொழிலாளர் இயக்கத்தில் புரட்சிகரமான தத்துவத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கின்றபொழுது அந்த இயக்கத்தில் தன்னியல்பான அம்சத்துக்கும் உணர்வு பூர்வமான அம்சத்துக்கும் இடையிலுள்ள உறவைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்.

தன்னியல்பான அம்சம் வரலாற்று வளர்ச்சியின் இயற்கையான விளைவு, முதலாளித்துவத்தின் சகஜமான படைப்பு, தொழிலாளர் இயக்கத்தில் புறவயக் காரணி ஆகும்.

உணர்வு பூர்வமான அம்சம் தொழிலாளர் இயக்கத்தில் சமூக-ஜனநாயகத்தின் சித்தாந்த மற்றும் அமைப்புப் பணியாக, அதன் அகவயக் காரணியாக இருக்கிறது.

சமூக-ஜனநாயகவாதிகள் சித்தாந்தம் மற்றும் தத்துவத்தின் பாத்திரத்தை மிகைப்படுத்துகிறார்கள்; ''வளர்ச்சியின் புறவகைப்பட்ட அல்லது தன்னியல்பான அம்சத்தின் முக்கியத்துவத்தைச் சிறுமைப்படுத்துகிறார்கள்''* என்று பொருளாதாரவாதிகள் குற்றம் சாட்டினார்கள். அவர்கள் தன்னியல்பான இயக்கத்தின் மீது, பெருந்திரளான மக்களின் தன்னியல்பான போராட்டத்தின்

* அதே நூல், பக்கம் 236.

மீது தம்முடைய நம்பிக்கைகள் அனைத்தை யும் வைத்திருந்தார்கள்; அவர்கள் அகவயக் காரணியை, அதாவது கட்சியின் பாத்திரம் மற்றும் தொழிலாளர் இயக்கத்துக்குத் தத் துவம், சித்தாந்தத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டார்கள்.

பொருளாதாரவாதிகள் தத்துவத்தைப் புறக்கணிப்பதை அல்லது குறைத்து மதிப் பிடுவதை நியாயப்படுத்துவதற்கு மார்க்சை மேற்கோள் காட்டினார்கள்: ''ஓர் உண்மை யான இயக்கத்தின் ஒவ்வொரு காலடியும் ஒரு டஜன் செயல்திட்டங்களைக் காட்டி லும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.''* தொழிலாளர் இயக்கத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தைப் பற்றி எழுதப்பட்ட இக்கருத் தின் அர்த்தத்தைத் திரித்துக் கூறிய பொருள் முதல்வாதிகள் தம்முடைய சந்தர்ப்பவாத நிலையை நியாயப்படுத்துவதற்கு அதைப் பயன்படுத்தினார்கள்.

தொழிலாளர் இயக்கத்தில் தன்னியல் பான அம்சத்தை மிகைப்படுத்துவதனால் ஏற்படுகின்ற தீமையை லெனின் விளக்கி னார். இது சமூக-ஜனநாயகவாதிகளைத் தொழிலாளர் இயக்கத்தின் சேவகர்களாக்கு கிறது என்று வலியுறுத்தினார். இதன் காரணமாக அவர்கள் தொழிலாளர் இயக் கத்திலிருந்து பின்தங்கிவிடுகிறார்கள். அவர்

---

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, Moscow, Progress Publishers, 1982, p. 278.

கள் அதன் ''வால்பகுதியாக'' இருக்கிறார்கள் என்று லெனின் இந்த சந்தர்ப்பவாதப் போக்கைப் பற்றிப் பொருத்தமாகக் கூறினார். ''மக்களின் தன்னியல்பான எழுச்சி பெருகப் பெருக, இயக்கம் பரவப் பரவ, சமூக-ஜனநாயகத்தின் தத்துவார்த்த, அரசியல், அமைப்புத் துறைகளின் வேலையிலே மேன்மேலும் அதிகமான உணர்வுக்கான தேவையும் வேகமாக வளர்கிறது'' என்று லெனின் தன்னுடைய புத்தகத்தில் நிரூபித்தார்.*

**புரட்சிகர இயக்கத்தில்**
**மார்க்சியத் தத்துவத்தின் பாத்திரம்**

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற பொழுது அகவயக் காரணியின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது என்று லெனின் சுட்டிக் காட்டினார். இந்த அர்த்தத்தில் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் மீது மார்க்சியத் தத்துவத்தின் தாக்கம் மிக முக்கியமாகும்.

லெனின் தொழிலாளர் இயக்கத்திற்குப் புரட்சிகரத் தத்துவத்தின் முக்கியத்துவத்தையும் மார்க்சியத்தைப் பற்றித் தன்னுடைய அணுகுமுறையையும் விளக்குகின்ற தனது அடிப்படையான முடிவை என்ன செய்ய

---

* வி. இ. லெனின் தேர்வு நூல்கள். தொகுதி 1, பக்கங்கள் 273—274.

வேண்டும்? என்ற நூலில் பின்வருமாறு வகுத்தளிக்கிறார்: ''புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்க முடியாது.''* சமூக-ஜனநாயகவாதிகளுக்கு மார்க்சியம் எப்பொழுதுமே அத்தகைய தத்துவமாக இருந்து வந்திருக்கிறது. சோஷலிசம் நவீன சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் இன்றியமையாத மற்றும் தவிர்க்க முடியாத விளைவு, அது பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் இறுதி நோக்கம் என்பதை மார்க்சியம் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தைப் புரட்சியின் மூலம் மாற்றி, பிறகு சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதற்குப் பாடுபடுகின்ற கட்சிக்கு மார்க்சியம் அதன் எல்லா நடவடிக்கைகளுக்கும் தத்துவ அடிப்படையாக இருக்கிறது.

ருஷ்ய சமூக-ஜனநாயகத்தைப் பொறுத்த மட்டில் புரட்சிகரமான தத்துவத்தின் முக்கியத்துவம் மூன்று முக்கியமான அம்சங்களால் அதிகரித்தது. இந்த அம்சங்களை லெனின் சுட்டிக் காட்டினார்.

முதலாவதாக, கட்சி இன்னும் உருவாக்கக் கட்டத்தில்தான் இருந்தது. அது புரட்சிகரமான சிந்தனையில் சமூக-ஜனநாயகம் அல்லாத பல்வேறு போக்குகளை இன்னும் முறியடிக்கவில்லை; அவை தொழி

* அதே நூல், பக்கம் 229.

லாளர் இயக்கத்தைத் திசை திருப்பக் கூடியவை; அதனால் எதிர்காலத்தில் சமூக-ஜனநாயகத்துக்கும் தொழிலாளர் இயக்கத்துக்கும் ஆபத்தான விளைவுகள் ஏற்படலாம்.

இரண்டாவதாக, ஒரு நாட்டினுடைய சமூக-ஜனநாயக இயக்கம் சர்வதேச அனுபவத்தை சுவீகரித்துக் கொள்ளாமல் ஒரு போதும் வெற்றி பெற முடியாது. சர்வதேச அனுபவத்தை விமர்சன ரீதியாக மதிப்பிடுவதற்கும் அதிலிருக்கின்ற ஆகச் சிறந்த அம்சங்கள் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்வதற்கும் பரந்த தத்துவ அறிவு தேவைப்பட்டது.

மூன்றாவதாக, ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத்துக்கு முன்பாக இருந்த கடமை மற்ற எந்த சோஷலிஸ்ட் கட்சிக்கும் முன்பாக இருந்த கடமைகளைக் காட்டிலும் அதிகப் புரட்சிகரமாக இருந்தது. எதேச்சாதிகாரத்தை ஒழிப்பதே அந்தக் கடமை. ருஷ்யா உலகப் புரட்சிகர இயக்கத்தின் மையமாக, ஏகாதிபத்தியத்தின் அனைத்து முரண்பாடுகளின் குவிமுனையாக இருந்தது என்றால் ருஷ்யாவின் எதேச்சாதிகார ஆட்சி ஐரோப்பிய மற்றும் ஆசியப் பிற்போக்குவாதத்தின் அரணாக விளங்கியது. இக்காரணத்தினால் எதேச்சாதிகாரத்தை ஒழிக்காமல், ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றாமல் இந்த முரண்பாடுகளைத் தீர்க்க முடியாது. எதேச்சாதிகாரத்தை ஒழிப்பது ஏகாதிபத்தியத்துக்கு பலத்த அடியைக்

கொடுக்கும், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்னுரையாக இருக்கும். இக்கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்றால் கட்சி வர்க்கப் போராட்டத்துக்கு வழிகாட்டுகின்ற அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் அரசியல் போராட்டம் மற்றும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் சிக்கலான நிலைமைகளில் புரட்சிகரத் தத்துவத்தைக் கடைப்பிடிக்கின்ற, அதை வளர்க்கின்ற, அதனால் வழிகாட்டப்படுகின்ற அனுபவமும் அவசியமாகும். லெனின் அதை ஒரு சூத்திரத்தின் வடிவத்தில் கூறினார்: ‘‘**ஆக மிக முன்னேறிய தத்துவத்தை வழிகாட்டியாகக் கொண்டுள்ள கட்சி ஒன்றுதான் முன்னணிப் போராளியின் பாத்திரத்தை நிறைவேற்ற முடியும்.**’’*

லெனின் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கையில் புரட்சிகரமான தத்துவத்தின் தீர்மானகரமான பாத்திரத்தைப் பற்றித் தன்னுடைய முடிவை மார்க்சியம் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர மார்க்சியக் கட்சியின் பல்வேறு ரகங்களைச் சேர்ந்த எதிரிகளுக்கு எதிராக இடைவிடாத போராட்டத்தில் பாதுகாத்தார். ‘‘சட்டபூர்வ மார்க்சிஸ்டுகளிலிருந்து’’ தொடங்கி ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியின் அனைத்து எதிரிகளும் அதன் தத்துவ அடிப்படையை அரித்தழிப்

---

* அதே நூல், பக்கம் 231.

பதன் மூலம் அத்தகைய கட்சி உருவாகி, பலமடைவதைத் தடை செய்தார்கள். ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகளும்'' பொருளா தாரவாதிகளும் மார்க்சியத்தைப் பற்றித் தம்முடைய மிதவாத முதலாளி வர்க்க உருச்சிதைவை விஞ்ஞான ரீதியான தத்துவம் என்று காட்டுவதற்கு, தொழிலாளர் இயக் கத்தில் முதலாளி வர்க்கக் கொள்கையைப் பரப்புவதற்கும் முதலாளித்துவ அமைப்பை மெய்யாகவே ஆதரிப்பதற்கும் உரிய பாத் திரத்தை சமூக-ஜனநாயகத்துக்குக் கொடுப் பதற்கு முயற்சி செய்தார்கள். பிற்காலத் தில் திரோத்ஸ்கிவாதிகள் மார்க்சியத்தின் தங்களுடைய குட்டி முதலாளி வர்க்க உருச் சிதைவை அதை வளர்ப்பதற்குச் செய்யப் படுகின்ற முயற்சியாகவும் புரட்சிகரமான தத்துவமாகவும் காட்டுவதற்கு முயற்சி செய்தார்கள்; அவர்கள் பெருந்திரளான உழைக்கும் மக்களிடமிருந்து கட்சியைப் பிரிப்பதற்கு, ஒரு குறுகிய குழுவாக மாற்று வதற்கு, அரசியல் தன்மையற்ற பொரு ளாகச் செய்வதற்குப் பாடுபட்டார்கள். போர்க்குணமிக்க புரட்சிகரக் கட்சியை எதிர்த்த சமூக-ஜனநாயகத்தின் இடை நிலைக் குழுக்கள், கோஷ்டிகள், கூட்டணி கள் அனைத்தும் கட்சி நடவடிக்கைகளில் புரட்சிகரமான தத்துவத்தின்—மார்க்சியத் தின்—பாத்திரத்தைக் குறைத்தன அல்லது மறுத்தன.

மார்க்சியத்தை முதலாளி வர்க்க நிலை

யிலிருந்து திரித்துக் கூறிய ''சட்ட பூர்வ மார்க்சிஸ்டுகள்'', வலதுசாரித் திருத்தல் வாதிகள் — பொருளாதாரவாதிகள் —மற்றும் பின்னர் திரோத்ஸ்கியைப் போன்ற குட்டி முதலாளி வர்க்க சாகசவாதிகள் ஆகியோருக்கு எதிராக லெனின் மார்க்சியத்தைத் தற்காத்து நின்றது ருஷ்யாவுக்குமட்டுமின்றி உலக அளவில் புரட்சிகரத் தத்துவத்துக்கும் புரட்சிகர இயக்கத்துக்கும் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. **என்ன செய்ய வேண்டும்?** என்னும் புத்தகம் மார்க்சியத்தைக் கோட்பாட்டு ரீதியாக நிலைநிறுத்துவதற்கு மிகவும் சிறந்த உதாரணமாக இருக்கிறது.

லெனின் மார்க்சியத்தை நிலைநாட்டியதில் பின்வரும் அம்சங்கள் தலைசிறந்த முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன: முதலாவதாக, மார்க்சியத்தை ''விமர்சிப்பதற்கு'' அல்லது ''அபிவிருத்தி'' செய்வதற்கு—அந்த மாறுவேடம் எவ்வளவு திறமையாக இருந்தாலும் அல்லது எவ்வளவு ''இயற்கையான'' காரணங்களும் வாதங்களும் உபயோகிக்கப்பட்டாலும்—எவ்விதமான முயற்சிகள் செய்யப்பட்டாலும் மார்க்சியத் தத்துவத்தை உருமாற்றுகின்ற தன்மையை எடுத்துக்காட்டுவதற்கும் அவற்றின் உண்மையான நோக்கங்களை அம்பலப்படுத்துவதற்கும் லெனினிடமிருந்த திறமை; இரண்டாவதாக, மார்க்சியக் கோட்பாடுகளைக் கெட்டியாகிப் போன வறட்டுச் சூத்

திரங்களாகப் பயன்படுத்துவதில் உள்ள ஆபத்தைப் பற்றி அவருடைய விளக்கம்; மூன்றாவதாக, மாற்றமடைந்து கொண்டிருந்த எதார்த்தத்துக்கு மார்க்சியக் கோட்பாடுகளை அவர் கையாண்டது.

புரட்சிகரமான சமூக-ஜனநாயகவாதிகள் மற்றவர்களுடைய கருத்துகளைக் கேட்க மறுக்கிறார்கள் என்று திருத்தல்வாதிகள் செய்த தாக்குதல்களையும் குற்றச் சாட்டுகளையும் மறுத்த லெனின் புரட்சிகரமான தத்துவத்தைப் பாதுகாத்தல் என்ற கோட்பாட்டை (அதை வளர்க்க வேண்டிய அவசியத்தையும் அது உள்ளடக்கியிருக்கிறது) வகுத்தளித்தார். “...நீங்கள் அறிந்த வரை மெய்யானதென நீங்கள் கருதும் இத்தகைய ஒரு தத்துவத்தை ஆதாரமற்ற தாக்குதல்களிலிருந்தும், அதைச் சீர்கேடுறச் செய்வதற்கான முயற்சிகளிலிருந்தும் பாதுகாக்கிறீர்கள் என்றால், எல்லா விமர்சனத்துக்கும் நீங்கள் பகையாகிவிட்டதாய் அர்த்தமல்ல. மார்க்சின் தத்துவத்தை நாங்கள் முற்றும் முடிவான ஒன்றாய், மீறொணாத ஒன்றாய்க் கருதவில்லை. மாறாக, அது சோஷலிஸ்டுகளுக்குரிய விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மட்டுமே அமைத்துக் கொடுத்திருக்கிறது, சோஷலிஸ்டுகள் வாழ்க்கையுடன் சேர்ந்து நடைபோட விரும்பினால் இந்த விஞ்ஞானத்தை எல்லாத் திசைகளிலும்

வளர்த்துச் செல்வது அவசியம் என்பதை நாம் ஐயமற அறிவோம்.''*

மார்க்சியத்தின் முடிவுகளையும் சூத்திரங்களையும் கெட்டியாகிப் போன வறட்டுக் கோட்பாடாகக் கருதுவது மார்க்சியத்தின் உயிரை, புரட்சிகர இயக்கவியலைக் கொன்று விடுகிறது. மார்க்சியம் வறட்டுச் சூத்திரம் அல்ல, அது நடவடிக்கைக்கு வழிகாட்டி என்பதை லெனின் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார். மார்க்சியம் வளர்ச்சியடைந்த விஞ்ஞானம் என்ற முறையில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து புதிய நிகழ்வுகளின் பொருளையும் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்வதற்கு உதவாவிட்டால் அத்தகைய வழிகாட்டியாக இருக்க முடியாது.

புரட்சிகரமான தத்துவத்தை வளர்க்கின்ற பொழுது ஒவ்வொரு புரட்சிகரக் கட்சியும் சுயேச்சையான முறையில் மார்க்சியத்தை வளர்ப்பதன் அவசியம், மற்ற நாடுகளின் அனுபவத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பயன்படுத்த வேண்டிய அவசியம், ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் வளர்ச்சியின் பிரத்யேகமான அம்சங்களை (அதன் பொது வளர்ச்சி மற்றும் உலக அளவில் அதன் பொது அம்சங்கள் என்ற சுற்றுவட்டத்திற்குள்) கண்டுபிடித்

* வி. இ. லெனின், சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து, பக்கம் 18.

தல் ஆகிய கோட்பாடுகளை லெனின் வலியுறுத்தினார்.

புரட்சிகரத் தத்துவத்தை சுயேச்சையாக வளர்க்காமல் உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்துக்கு வழிகாட்டுகின்ற அவசரமான, மிகவும் முக்கியமான கடமையை நிறைவேற்ற முடியாது. புதிதாக அமைக்கப்படுகின்ற மார்க்சியக் கட்சிக்கு தொழிலாளர் இயக்கத்துக்கும் நாட்டின் சமூக வளர்ச்சிக்கும் வழிகாட்டுவதற்காக முன்னரே தயாரிக்கப்பட்ட சூத்திரங்களை யாராலும் கொடுக்க முடியாது என்பது இதன் பொருளாகும். அத்தகைய சூத்திரங்களைப் புதிதாக அமைக்கப்படுகின்ற அல்லது ஏற்கெனவே அமைக்கப்பட்டு, இயங்கிக் கொண்டிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கொடுக்க முடியாது; ஏனென்றால் ஒவ்வொரு நாடும் அதன் புரட்சிகரமான போராட்டமும் பிரத்யேகமான வரலாற்று நிலைமைகளில் வளர்ச்சியடைந்திருக்கின்றன.

ஒவ்வொரு புரட்சிகரக் கட்சியும் தத்துவத்தை சுயேச்சையாக வளர்த்துக் கொள்வது அவசியம் என்பது எல்லாவற்றுக்கும் மேலாக அந்த நாட்டின் புரட்சிகர இயக்கத்துக்கு முன்னால் அதன் பொறுப்பைக் குறிக்கிறது. கட்சி விஞ்ஞான ரீதியான செயல் திட்டத்தை விரித்துரைப்பதிலும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் போர்த்தந்திர நோக்கங்களை வகுத்துக் கொள்வதி

லும் இந்தப் பொறுப்பு பிரதிபலிக்கப்படுகிறது.

ஆனால் ஒவ்வொரு மார்க்சிய-லெனினியக் கட்சியும் புரட்சிகரமான தத்துவத்தை சுயேச்சையான முறையில் வளர்த்துக் கொள்வது அவசியம் என்று சொல்கின்றபொழுது ஒவ்வொரு கட்சியும் தனியாக, மற்ற கட்சிகளிலிருந்து தனித்த முறையில் குறிப்பிட்ட காலகட்டத்தில் அந்த நாட்டின் வர்க்க முரண்பாடுகளையும் வர்க்கப் போராட்டத்தையும் தத்துவ ரீதியில் பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்பது சிறிதும் அர்த்தம் அல்ல. மொத்த உலக நிகழ்வுப் போக்கிலிருந்து தனியாக நின்று எந்த நாடும் வளர்ச்சியடைய முடியாது; ஒரு நாட்டிலுள்ள புரட்சிகர இயக்கத்தை சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்திலிருந்து பிரிக்கவும் இயலாது. அதைப் போலவே எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளின் முயற்சிகளையும் முந்திய தத்துவ சாதனைகள் அனைத்தையும் ஆதாரமாகக் கொண்டிருந்தால் மட்டுமே புரட்சிகரமான தத்துவத்தின் வளர்ச்சி சாத்தியம்.

முதலாளி வர்க்க மற்றும் குட்டி முதலாளி வர்க்க சித்தாந்திகள் மார்க்சியத்தை உருச்சிதைப்பதற்குச் செய்த முயற்சிகளுக்கு எதிராக லெனின் நடத்திய போராட்டம் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதிகள் மீது மார்க்சியத்தைப் பற்றித் தன்னுடைய சொந்த விளக்கத்தைத் திணிப்பதற்கு

லெனின் முயற்சி செய்ததாக எடுத்துக் காட்டுவதற்கு முதலாளித்துவ சோவியத் இயல் ஆராய்ச்சியாளர்கள் பாடுபடுகிறார் கள். லெனினுடைய மார்க்சிய விளக்கமும் திருத்தல்வாதமே என்று அவர்கள் கூறுகிறார் கள்.

மேற்கு நாடுகளின் பத்திரிகைகள் லெனி னியத்தையும் ருஷ்யாவையும் பற்றிய ''நிபு ணர்'' என்று பாராட்டுகின்ற பேரா சிரியர் பெர்ட்ரம் வோல்ஃபை உதாரண மாக எடுத்துக்கொள்வோம். லெனினுடைய போதனை மார்க்சியத்தின் வளர்ச்சி அல்ல, அது உண்மையான மார்க்சியத்தை ருஷ்ய முறையில் மாற்றியமைத்துக் கொண்டதே என்று அவர் தன்னுடைய பெரும்பாலான புத்தகங்களிலும் கட்டுரைகளிலும் நிரூபிப் பதற்குப் பாடுபட்டார். லெனினுடைய பின் வரும் கருத்து அடிக்கடி மேற்கோளாகக் காட்டப்படுகிறது: ''...மார்க்சின் தத்து வத்தை சுயேச்சையான முறையில் விரிவுபட வளர்த்திடுவது முக்கியமாய் ருஷ்ய சோஷ லிஸ்டுகளுக்கு அத்தியாவசியமாகுமெனக் கருதுகிறோம். ஏனெனில் இந்தத் தத்து வம் பொதுவான வழிகாட்டும் கோட்பாடு களையே அளித்திடுகிறது; தனிப்பட்ட முறை யில் அவை பிரான்சிலிருந்து வேறு விதமாய் இங்கிலாந்திலும், ஜெர்மனியிலிருந்து வேறு விதமாய் பிரான்சிலும், ருஷ்யாவிலிருந்து வேறு விதமாய் ஜெர்மனியிலும் கையாளப்

படுகிறவை.''* முதலாளித்துவப் பொய்யர்கள் லெனினுடைய அணுகுமுறையின் மெய்யான பொருளைத் திரித்துக் கூறி மார்க்சியத்தைத் திருத்துவதற்கு லெனின் முன் முயற்சி எடுத்தார் என்று காட்டுவதற்கு முயல்கிறார்கள். மேலும் மார்க்சியத்தைத் திருத்துவது அவசியம் என்று லெனின் கருதியதாகக் கூறுவதன் மூலம் தாங்கள் அதைத் திருத்துவதை நியாயப்படுத்துவதற்கு முயற்சிக்கிறார்கள். ஜான் எஸ். ரேஷெட்டார் (ஜூனியர்) என்ற அமெரிக்கப் பேராசிரியர் லெனினுடைய கருத்து மார்க்சியம் ''பொருந்தாதது'', ருஷ்யாவின் புரட்சிகர இயக்கம் விசேஷமான, ''கலப்பற்ற ருஷ்யக்'' கோட்பாட்டை உருவாக்க வேண்டும் என்று கருதியதை ''நிரூபிப்பதாகக்'' கூறினார்.** மார்க்சியத்தின் ''பொதுவான வழிகாட்டும் கோட்பாடுகளை'' அப்படியே வைத்துக் கொண்டு அத்தத்துவத்தை வளர்க்க வேண்டும் என்றே லெனின் எப்பொழுதும் கூறினார்.

புரட்சிகரமான தத்துவத்தை சுயேச்சையான முறையில் வளர்த்தல் என்பது அடிப்படையான மார்க்சியக் கோட்பாடுகளைத் திட்டவட்டமான வரலாற்று நிலைமை

---

* அதே நூல், பக்கம் 18.

** John S. Reshetar, Jr., A *Concise History of the Communist Party of the Soviet Union*, New York, Praeger, 1960, p. 23 பார்க்க.

களுக்குக் கையாளுதல் என்பது லெனி னுடைய கருத்தாகும்.

புரட்சி நெருங்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் புரட்சிகரமான தத்துவத்தை வளர்ப்பது இன்றியமையாததாகும். லெனின் **என்ன செய்ய வேண்டும்?** என்ற புத்தகத்தில் ''புரட்சியின் முற்பொழுதுக் கருத்தோட் டம்'' என்று சொல்லப்படுவதற்கு எதிராக வாதிட்டு புரட்சிகரமான காலகட்டத்தில் தத்துவத்தை விரித்துரைக்கின்ற அவசியத் தைப் பற்றிய ஆய்வுரையை எடுத்துக் கூறி விளக்கமளிக்கிறார். ''புரட்சியின் முற் பொழுதுக் கருத்தோட்டத்தைப்'' பொரு ளாதாரவாதிகள் பின்பற்றினார்கள். புரட்சி யின் முற்பொழுதில் விவாதத்திலோ அல்லது புலமைமிகுந்த ஆராய்ச்சியிலோ ஈடுபடு வதற்கு நேரமில்லை, அப்படிச் செய்து கொண்டிருந்தால் புரட்சி வந்துவிட்டதைக் கூட கவனிக்க முடியாமற் போய்விடும் என்று அவர்கள் கருதினார்கள். இத்தகைய கருத்து கள் அரசியல் துர்ச்சாகசத்துக்கு இட்டுச் செல்லும் என்பதை லெனின் நிரூபித்தார். புரட்சி என்பது தனித்த நடவடிக்கை அல்ல, அது ஒரு நிகழ்வுப் போக்கு. அதில் கொந்த ளிப்பான மற்றும் அமைதியான காலகட்டங் கள் இருக்கின்றன. ''...கட்சி தன் தலைமை இடத்தில் நின்றபடியே நிகழ்ச்சிகளின் முன்னேற்ற நடை வேகமடையும் பொழுது எந்த மாற்றத்திலும் தன் கடமையை நிறை வேற்றுவதற்கான தயார்நிலையையும்

உறுதிப்படுத்துவதற்கு''* தத்துவத்தினால் மட்டுமே இயலும். தத்துவ ரீதியான திறமை யின்மை மற்றும் சம்பவங்கள் எழுப்புகின்ற அவசரமான பிரச்சினைகளைத் தவிர்த்தல் கட்சிக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் புரட்சிக்கும் மிகவும் ஆபத்தான விளைவு களை ஏற்படுத்தக் கூடும். ''தற்பொழுது, புரட்சியின் சகாப்தத்தில் தத்துவப் பிரச் சினைகளில் மழுப்பல் அல்லது கொள்கை இல்லாதிருத்தல் சித்தாந்த ரீதியில் முழு ஒட்டாண்டித் தனத்துக்குச் சமமாகும்; ஏனென்றால் மற்ற எல்லாக் காலங்களை யும் காட்டிலும் தற்பொழுதுதான் ஒரு சோஷலிஸ்ட் நன்கு சிந்திக்கப்பட்ட, முரணில்லாத உலகக் கண்ணோட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுது தான் சம்பவங்கள் அவரை ஆள முடியாது, அவர் சம்பவங்களை ஆட்சி செய்ய முடியும்.''** என்று லெனின் 1905ஆம் ஆண்டிலேயே, முதல் ருஷ்யப் புரட்சி உச்ச கட்டத்திலிருந்த பொழுது எழுதினார். மொத்தப் புரட்சியின் எதிர்காலம் மட்டுமல்ல, தனிப்பட்ட சமர் களின் முடிவும் கூட தத்துவத்தின் நிலையை, புரட்சியின் பாதையையும் முடிவையும் சரியாக மதிப்பிடுவதற்கு எல்லா அம்சங் களையும் விஞ்ஞான ரீதியாகப் பகுத்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 473.

** V. I. Lenin, *Collected Works*, vol. 8, p. 316.

தாராய்வதைப் பொறுத்திருக்கிறது என் பதை அவர் நிரூபித்தார்.

இன்று, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற சகாப்தத்தில், வரலாற்று வளர்ச்சியின் வேகம் அதிகரிக்கின்ற பொழுது, சமூக வளர்ச்சியின் மொத்த, பன்முகமான நிகழ்வுப் போக்கு மேன்மேலும் சிக்கலடைந்து கொண்டிருக்கின்ற பொழுது, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தீவிரமடைகின்ற பொழுது, தொழிலாளி வர்க்கம் மற்றும் பெருந்திரளான உழைக்கும் மக்கள் மத்தியில் புரட்சிகர உணர்ச்சிகள் மேன்மேலும் அதிகரிக்கின்ற பொழுது புரட்சிகரமான தத்துவத்தை வளர்க்க வேண்டிய அவசியம் முன்னைக் காட்டிலும் அதிகரித்திருக்கிறது.

நவீன விஞ்ஞானத்தின் சாதனைகளின் அடிப்படையில் எல்லாவற்றையும் தொடர்ச்சியாகப் பகுத்தாராய்தல், இப்பகுப்பாய்வின் விளைவுகளையும் அதன் முடிவுகளையும் ஒவ்வொரு கட்சியும் முறையாக விவாதிப்பதுதான் அக்கட்சி தன்னுடைய தத்துவத்தை இன்றைய நிலைக்குச் சரியாக வைத்திருப்பதற்கும் எந்த நேரத்திலும் உபயோகிக்கத் தயாராக வைத்திருப்பதற்கும் எப்பொழுதும் உதவியாக இருக்கும். அப்பொழுது நாட்டில் ஏற்படுகின்ற அரசியல் மாற்றம், முரண்பாடுகளும் வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டமும் தீவிரமடைதல் ஆகியவை நடைபெறும் பொழுது கட்சி சுய

விழிப்பற்ற நிலையில் இருக்காது. கட்சி தெளிவான, திட்டவட்டமான தீர்வுகளை முன்வைப்பதற்கும் மிகவும் கஷ்டமான நெருக்கடியான நிலைமையில் புரட்சிகர மான பெருந்திரளான மக்களுக்கு வழி காட்டுவதற்கும் தயாராக இருக்க முடியும்.

### தொழிலாளர் இயக்கத்துக்குள் விஞ்ஞான சோஷலிசத்தைக் கொண்டு செல்வதில் கட்சியின் பாத்திரம்

தத்துவம் பெருந்திரளான மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பாக ஒரு பொருளாயத சக்தியாக முடியாது என்று மார்க்ஸ், எங்கெல்ஸ் கூறியதை லெனின் முழுமையாக ஏற்றுக்கொண்டார். அவருடைய புத்தகங்கள் இந்த முடிவை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கின்றன. அவர் ருஷ்யாவிலிருந்த நிலைமைகளுக்கு இந்த முடிவை விரித்துக் கூறினார். அவர் பீட்டர்ஸ்பர்கின் ‘‘போராட்டக் கழகத்துக்குத்’’ தலைமை தாங்கிய காலத்தில் இதை நடைமுறைப்படுத்துவதற்கும் தொழிலாளர் இயக்கத்தில் விஞ்ஞான சோஷலிசக் கருத்துகளைக் கொண்டு செல்வதற்கும் பாடுபட்டார்.

தொழிலாளர் இயக்கத்தின் தன்னியல்பான அம்சத்துக்குத் தலைவணங்கிய பொருளாதாரவாதிகள் முதலாளித்துவம் தொழிலாளி வர்க்கம் மற்றும் பெருந்திரளான உழைக்கும் மக்களுடைய தன்னியல்பான நட

வடிக்கையினால் சீர்திருத்தப்படும், ஒழிக்கப் படும் என்று கருதினார்கள்; ஏனென்றால் தன்னியல்பான இயக்கம் என்னும் இந்தக் காரணியை முதலாளித்துவ சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள்தான் தோற்றுவிக்கின் றன. அது தொடர்ந்து வளர்ச்சி அடையும். உணர்வு பூர்வமான காரணியின் பாத்திரத் தைக் குறைவாக மதிப்பிட்ட பொருளா தாரவாதிகள் தன்னியல்பான இயக்கத்தில் சோஷலிச உணர்வையும் விஞ்ஞான சோஷ லிசக் கருத்துகளையும் நுழைப்பதற்குக் கட்சி எடுத்த எந்த முயற்சியையும் அந்த இயக்கத்தை நிர்ப்பந்தித்தல் என்று கண்ட னம் செய்தார்கள். தன்னியல்பான இயக்கத் திலிருந்து உணர்வு பூர்வமான அம்சமும் சோஷலிசமும் தோன்றும், கட்சி முயற்சி கள் அவசியமில்லை என்று அவர்கள் வாதிட் டார்கள்.

தொழிலாளர் இயக்கத்துக்குள் சோஷ லிசமும் சோஷலிச சித்தாந்தமும் தன்னியல் பாகத் தோன்றும், அதே மாதிரி தொழி லாளி வர்க்கத்தின் மத்தியில் தன்னியல் பாகப் பரவும் என்று பொருளாதாரவாதி களும் இதர சந்தர்ப்பவாதிகளும் கூறியது முற்றிலும் தவறு என்பதை லெனின் தன் னுடைய புத்தகத்தில் நிரூபிக்கிறார். இப் படிப் பேசுவது தொழிலாளர்களை ஏமாற்று வதற்குச் சமம்; ஏனென்றால் பாட்டாளி வர்க்கத்தின் சோஷலிச சித்தாந்தம் வர்க்கப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்

கின்ற பொழுது தன்னியல்பாகத் தோன்று வதில்லை. தொழிலாளி வர்க்கம் தன்னுடைய முயற்சியினால் வெறும் தொழிற் சங்க உணர்வை, அதாவது தொழிற்சங்கங் களில் ஒன்று சேர்ந்து கூலி உயர்வு, வேலை நிலைமைகளில் அபிவிருத்தி, இதரவைகளுக்காகப் போராட வேண்டிய அவசியத்தைப் பற்றிய உணர்வை மட்டுமே பெறுகிறது என்பதை வரலாற்று அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. ஆனால் இது உணர்வு பூர்வமான அம்சத்தின் கருவடிவம் மட்டுமே.

சோஷலிச உணர்வும் சோஷலிச சித்தாந்தமும் விஞ்ஞான சோஷலிசத்தின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன, விஞ்ஞான சோஷலிசம் தன்னியல்பாகத் தோன்றுவதில்லை, தொழிலாளி வர்க்கத்தின் கருத்துகளைப் பகிர்ந்து கொள்கின்ற கல்வியறிவு பெற்ற உறுப்பினர்களால் (அவர்கள் அறிவுப் பகுதியிலிருந்து வருபவர்களா அல்லது தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா என்பது முக்கியமல்ல) வளர்க்கப்படுகிறது என்னும் உண்மை இதை விளக்கக் கூடியது. விஞ்ஞான சோஷலிசம் தொழிலாளர் இயக்கத்துக்கு வெளியில் தோன்றுகிறது. அது தொழிலாளர் இயக்கத்துக்குள் தோன்ற முடியாது அல்லது அந்த இயக்கத்தில் பங்கெடுக்கின்ற தொழிலாளர்களால் அதை வளர்க்க முடியாது; ஏனென்றால் முதலாளித்துவ சமுதாயத்தில் ஆராய்ச்சி வாய்ப்புகள் தொழிலாளர்க

ளுக்குக் கிடைப்பதில்லை. சோஷலிச சித்தாந்தத்தை விரித்துக் கூறுவதில் தொழிலாளர்களும் பங்கெடுக்கிறார்கள், ஆனால் லெனின் சுட்டிக் காட்டியதைப் போல, ''தொழிலாளிகள் என்கிற முறையிலல்ல, சோஷலிசத் தத்துவாசிரியர்கள் என்கிற முறையில்—புரூதோன்களைப் போல, வைத்லிங்குகளைப் போல; சுருங்கச் சொன்னால், அவர்கள் தங்கள் சகாப்தத்தின் அறிவைப் பெறவும் அதை வளர்க்கவும் ஏறத்தாழ முடிகிற போதுதான், முடிகிற அளவுக்குத்தான், அவர்கள் பங்குகொள்கிறார்கள்''*.

பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில், அந்தப் போராட்டத்தின் வெளியீடு என்ற முறையில் மார்க்சியம் என்ற விஞ்ஞானம் தோன்றியது. மார்க்சும் எங்கெல்சும் மனிதகுலம் சேகரித்திருக்கின்ற அறிவுச் செல்வத்தை ஆராய்ந்து கற்ற பிறகு எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர் இயக்கத்திலிருந்து பொதுவான முடிவுகளைப் பெற்று விஞ்ஞான சோஷலிசத்தைப் படைத்தார்கள்.

தொழிலாளர் இயக்கம் தொழிற்சங்க உணர்வை மட்டுமே வளர்க்க முடியுமாதலால் அது தனக்கு அந்நியமான, பகையான முதலாளித்துவ சித்தாந்தத்தின் தாக்கத்துக்கு உட்படுகிறது; ஏனென்றால் தொழிற்

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 253.

சங்க இயக்கம் தன்னியல்பாகவே ''முதலாளி வர்க்கத்தின் அரவணைப்பின் கீழ்''* செல்ல முயல்கிறது. முதலாளித்துவ சித்தாந்தம் சோஷலிச சித்தாந்தத்துக்கு நெடுங்காலத்துக்கு முன்பே தோன்றி விட்டது, அதனிடம் மிகவும் வலுவான பிரச்சார சாதனங்கள் இருக்கின்றன என்ற காரணங்களினால் இது நடைபெறுகிறது. அது முதலாளித்துவ சமுதாயத்தின் மொத்த அரசு இயந்திரத்தையும் பயன்படுத்துகிறது. கல்வி நிலையங்களிலும் இராணுவத்திலும் பத்திரிகை, வானொலி, கலை, இலக்கியம், சமயம் ஆகியவற்றின் மூலம் பெருந்திரளானவர்கள் மத்தியிலும் அது பரப்பப்படுகிறது; சுருக்கமாகச் சொல்வதென்றால் அது மொத்த சமுதாயத்திலும் ஊடுருவிக் கலந்திருக்கிறது. முதலாளித்துவக் கல்வியாளர்களும் முதலாளித்துவப் பிரச்சாரமும் தங்களுடைய சித்தாந்தத்தைப் பரப்புவதற்குப் புதிய, நயமான வழிகளைக் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர் இயக்கத்தை அதன் போக்கில் விட்டுவிட்டால் அது முதலாளித்துவ சித்தாந்தத்தின் தாக்கத்துக்கு உட்படுவது நிச்சயமாகும்.

லெனின் தன்னுடைய புத்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்: ''...ஒன்றுதான் தேர்ந்தெடுக்க உண்டு — முதலாளித்துவ சித்தாந்தம் அல்லது சோஷலிச சித்தாந்

* அதே நூல், பக்கம் 254.

தம், என்று. நடுவழி ஏதும் கிடையாது (ஏனெனில் மனிதகுலம் ஒரு மூன்றாம் சித்தாந்தத்தைப் படைக்கவில்லை; மேலும், வர்க்கப் பகைமைகளால் பிளக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயத்தில் வர்க்கத் தன்மையற்ற சித்தாந்தமோ, வர்க்கத்துக்கு அப்பாற்பட்ட சித்தாந்தமோ என்றைக்கும் இருக்க முடியாது). எனவே சோஷலிச சித்தாந்தத்தை எந்த விதத்தில் சிறுமைப்படுத்தினாலும், அதிலிருந்து இழையளவேனும் விலகிச் சென்றாலும் முதலாளித்துவ சித்தாந்தத்தை பலப்படுத்துவதாகவே பொருளாகும்.''* இந்த முடிவு முற்காலத்தைப் போல இன்றும் சரியானதாகும்.

லெனின் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் மூன்று முக்கியமான வடிவங்களை—அரசியல், பொருளாதார மற்றும் தத்துவார்த்த (சித்தாந்த) வடிவங்களை—பற்றிய மார்க்சியக் கருதுகோள்களை வளர்த்தார். சித்தாந்தப் போராட்டம் மற்ற இரண்டு வடிவங்களையும் போலவே இன்றியமையாதது என்று அவர் நிரூபித்தார். முதலாளித்துவ சித்தாந்தத்தின் செல்வாக்கிலிருந்து தொழிலாளி வர்க்கத்தை விடுவிப்பதற்கும் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ சமுதாயத்தில் தன்னுடைய நிலையையும் தன்னுடைய வரலாற்றுக் கடமையையும் புரிந்து கொள்வதற்கும்

* அதே நூல், பக்கங்கள் 253—254.

உதவி செய்வதற்கு அது இன்றியமையாதது. விஞ்ஞான சோஷலிசத்தை ஆதரிப்பவர்கள் முதலாளித்துவ சித்தாந்தத்துக்கு எதிராக நடத்துகின்ற சமரசமில்லாத போராட்டம் முதலாளி வர்க்கத் தத்துவங்களுக்கும் கருத்துகளுக்கும் எதிரான போராட்டம் மட்டுமல்ல; அது தொழிலாளர் இயக்கத்தில் முதலாளி வர்க்கத்தின் செல்வாக்கு பரவு வதற்கு உதவி செய்கின்ற சந்தர்ப்பவாதத் துக்கு எதிரான போராட்டமும் ஆகும். லெனின் என்ன செய்ய வேண்டும்? என்னும் புத்தகத்தில் வளர்த்துக் கூறிய கருத்துகள் இன்றும் செல்தகைமையைக் கொண்டிருக் கின்றன; ஏனென்றால் இன்று முதலாளித் துவ உலகத்திலுள்ள உழைக்கும் மக்களில் கணிசமான பகுதியினர் முதலாளித்துவ சித் தாந்தத்தின் செல்வாக்கில் இருக்கின்றனர், சந்தர்ப்பவாதிகளை ஆதரிக்கின்றனர். தொழிலாளி வர்க்கத்தை முதலாளித்துவ சித்தாந்தத்தின் செல்வாக்கிலிருந்து விடு விப்பது எந்த அளவுக்கு மிகவும் கஷ்ட மானது, பாட்டாளி வர்க்க சித்தாந்தம் பரவுவதை முதலாளி வர்க்கம் எவ்வளவு வன்மையாக எதிர்க்கிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

லெனினுடைய கருத்துகளை மறுப் பதற்குப் பொருளாதாரவாதிகள் அன்று உப யோகித்த வாதங்களை மார்க்சிய-லெனினி யத்தின் முதலாளி வர்க்க விமர்சகர்கள் இன்று விரிவாகப் பயன்படுத்துகிறார்கள்.

லெனினியத்தின் நவீன விமர்சகரான ஜான் கீப் என்ற பிரிட்டிஷ் வரலாற்றாசிரியரது நூல்களிலும் பொருளாதாரவாதிகளின் கருத்துகளைக் காண முடியும். தன்னியல்பான தொழிலாளர் இயக்கம் முதலாளித்துவ சித்தாந்தத்துக்கு இரையாவது உறுதி என்னும் லெனினுடைய முடிவு "பாட்டாளி வர்க்கத்தின் உள்ளுறையான வர்க்க உணர்வைப் பற்றிய மரபு வழிப் பட்ட மார்க்சியக் கருதுகோளில் அவருக்கு சிறிதளவு நம்பிக்கையே இருந்தது அல்லது எதுவுமில்லை"* என்பதை எடுத்துக்காட்டுகிறது என்று அவர் எழுதினார். "...தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தன்னியல்பு பால் உள்ள எல்லா வழிபாடும், 'உணர்வு பூர்வமான அம்சத்தின்' பாத்திரத்தைச் சிறுமைப் படுத்துவதனைத்தும், சமூக-ஜனநாயகத்தின் பாத்திரத்தைச் சிறுமைப்படுத்துவதனைத்தும்—அப்படிச் செய்கிறவன் விரும்புகிறானோ இல்லையோ—தொழிலாளிகள் மீது முதலாளி வர்க்க சித்தாந்தத்தின் செல்வாக்கை பலப் படுத்துவதாகவே பொருள்"** என்ற லெனினுடைய முடிவு இன்றும் செல்தகைமையைக் கொண்டிருக்கிறது. லெனின் சித்தாந்த வேலையைக் குறைத்து மதிப்

---

* J. L. H. Keep, *The Rise of Social Democracy in Russia*, Oxford, Clarendon Press, 1963, pp. 89—90.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 250.

பிடுவதை எதிர்த்தார்; தொழிலாளி வர்க்கத்திடம் தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் பரப்பபப்பட்டு வருகின்ற முதலாளித்துவக் கருத்துகளுக்கு எதிராகவும் தொழிலாளர் இயக்கத்தில் முதலாளித்துவ சித்தாந்தத்தின் தாக்கத்துக்கு எதிராகவும் சமரசமில்லாத போராட்டத்தை நடத்த வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தினார்.

''தொழிலாளிகளுக்கு வர்க்க அரசியல் உணர்வு **வெளியிலிருந்து மட்டுமே**—அதாவது, பொருளாதாரப் போராட்டத்துக்கு அப்பால் வெளியிலிருந்துதான், தொழிலாளிகள், முதலாளிகள் இடையேயுள்ள உறவுகளின் துறைக்கு அப்பால் வெளியிலிருந்துதான்—கொண்டுவர முடியும்''* என்பது லெனினுடைய மற்றொரு அடிப்படையான முடிவு. தற்காலத்தில் இதுவும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்கு இன்றியமையாததாகும்.

ஒரே விதமான சித்தாந்த, செயல்தந்திர, அமைப்புக் கோட்பாடுகளைப் பின்பற்றி அவற்றின் அடிப்படையில் இயங்குகின்றவர்களின் நன்கு அமைக்கப்பட்ட இறுக்கமான அமைப்பு தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சியக் கட்சி. அக்கட்சியே தொழிலாளர் இயக்கத்திற்குள் சோஷலிச உணர்வைப் புகுத்துகிறது.

தொழிலாளர் இயக்கத்துக்குள் சோஷ

---

* அதே நூல், பக்கம் 317.

லிச உணர்வையும் விஞ்ஞான சோஷலிசக் கருத்துகளையும் புகுத்துவதற்கு மார்க்சியக் கட்சி சோஷலிசம் மற்றும் தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமையின் மெய் வடிவமாக இருக்க வேண்டும். தொழிலாளர் இயக்கத்திற்குள் சோஷலிச உணர்வைப் புகுத்துகின்ற தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக, உணர்வு பூர்வமான பகுதியாக மார்க்சியக் கட்சி இருக்கிறது.

தொழிலாளர் இயக்கம் சோஷலிசத்தை சுவீகரித்துக் கொள்ள வேண்டும் என்பது மொத்த தொழிலாளி வர்க்கமும் கட்சியில் சேர வேண்டும் என்பதைக் குறிக்கவில்லை. கட்சி தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதி, அதன் முன்னணிப் படை. வர்க்கத்தின் முன்னணிப் படை என்பதற்கு அதைப் பிரதிநிதித்துவம் செய்தல், கற்பித்தல், அதன் உடனடிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, அதன் இறுதி இலட்சியமான கம்யூனிசத்தை அடைவதற்கு அதன் போராட்டத்துக்குத் தலைமை தாங்குதல் என்று அர்த்தம். கட்சியின் நோக்கம் தொழிலாளர் இயக்கத்துக்கு உத்வேகம் கொடுத்து அதை அமைப்பு ரீதியாக்குவதே.

மார்க்சியக் கட்சி விஞ்ஞான சோஷலிசம் மற்றும் தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமையை மெய் வடிவமாகக் கொண்டிருக்க வேண்டும் என்னும் லெனினுடைய பிரபலமான கருதுகோளின் சாராம்சம் இதுவே. ஒவ்வொரு கட்சியும் இந்த ஒற்று

மையை அடைவதற்குத் தன்னுடைய நாட்டின் நிலைமைகளுக்கும் காலத்தின் போக்கிற்கும் தகுந்த முறையில் தன்னுடைய சொந்தப் பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தைப் போலவே இன்றும் தொழிலாளர் இயக்கத்துக்குள் சோஷலிசத்தைப் புகுத்துவதற்கு சித்தாந்தப் போராட்டம், தொழிலாளி வர்க்கம் மற்றும் குட்டி முதலாளி வர்க்கக் கட்சிகளின் பலவிதமான அரசியல் நலன்கள் பின்னிப் பிணைந்திருத்தல், தொழிலாளர் இயக்கத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற பல்வேறு காரணிகள் ஆகியவை தடையாக இருக்கின்றன. இந்த நிகழ்வுப் போக்கு பெரும்பாலும் மென்மையாக இருக்காது; அது ஒருபோதும் நேரான பாதையில் செல்வதில்லை. தொழிலாளர் இயக்கத்துக்குள் விஞ்ஞான சோஷலிசத்தைப் புகுத்துவதன் அவசியத்தை எந்த ஒரு மார்க்சியக் கட்சியினாலும் நிறைவேற்றப் பட வேண்டிய ஒரு பொதுவான நோக்கம் என்ற முறையில் அங்கீகரிப்பது முக்கியம் என்பதுடன் உரிய காலத்தில் இந்த அவசியத்தை உணர்வதும் புரட்சிகர நடைமுறையின் எவ்விதமான தேவைகளையும் நிறைவேற்றுகின்ற தகுதியோடிருப்பதும் முக்கியமானதே. இது ஒரு புரட்சிகரமான கட்சியின்—மார்க்சிய-லெனினிஸ்டுகளின் இறுக்கமான அமைப்பின்—மாபெரும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. தொழிலாளர் இயக்

கம் எந்த அளவுக்குப் புரட்சிகரமான தத்துவத்தைத் தழுவியிருக்கிறது, பெருந்திரளான உழைக்கும் மக்களின் போராட்டத்துக்கு இத்தத்துவம் எந்த அளவுக்கு வழிகாட்டுகிறது என்பதை அக்கட்சி நிர்ணயிக்கின்றது.

ருஷ்யப் பொருளாதாரவாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான கட்சியை அமைப்பதை எதிர்த்தார்கள். தொழிலாளர் இயக்கத்துக்கு மார்க்சியம் அல்ல, சீர்திருத்தவாதமும் சந்தர்ப்பவாதமும் வழிகாட்ட வேண்டும் என்று விரும்பினார்கள். அது தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்க சித்தாந்தத்துக்கு அடிமைப்படுவதற்கு மட்டுமே இட்டுச் சென்றிருக்கும்.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தின் எதிரிகள் அதை அரித்தழிப்பதற்கு, பலவீனப்படுத்துவதற்கு எப்பொழுதும் முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். தொழிலாளர் இயக்கத்தை சித்தாந்த ரீதியில் நிராயுதபாணியாக்குதல் மூலம், அதாவது மார்க்சிய-லெனினியத்துக்கு அவப்பெயர் சூட்டுவது மூலம் இதைச் செய்ய முயன்றிருக்கிறார்கள். அவர்கள் இன்றும் அதையே செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மார்க்சிய-லெனினியத்தை விஞ்ஞான சோஷலிசத்துக்கு எதிராக நிறுத்துகிறார்கள்; மார்க்சிய-லெனினியத்துக்குப் பதிலாக ''யூரோ-கம்யூனிசம்,'' தேசியவாத மார்க்சியம் போன்ற பல்வேறு பிரதேச

சோஷலிசத் தத்துவங்களைப் ''புதிதாக'' சிபாரிசு செய்கிறார்கள்.

இக்கருத்துகளை எதிர்த்துப் போராடுவதற்கு லெனினுடைய என்ன செய்ய வேண்டும்? என்னும் நூல் வலிமை மிக்க ஆயுதமாகப் பயன்படுகிறது.

## 3. புரட்சிகர மற்றும் சீர்திருத்தவாதக் கொள்கைகள்

பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கு சவக் குழி தோண்டுவோன் என்னும் வரலாற்றுக் கடமையிலிருந்தும் பிற்போக்கான எதேச்சாதிகார ஆட்சியை ஒழிக்கின்ற தயாரிப்புகளில் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தை எதிர்நோக்கிய விசேஷமான கடமைகளிலிருந்தும் முன்னேறிச் சென்ற லெனின் கட்சியின் அரசியல் கடமைகளையும் அதன் அரசியல் திசைவழியையும் எடுத்துக் கூறினார். இவை என்ன செய்ய வேண்டும்? என்ற புத்தகத்தின் மூன்றாவது அத்தியாயத்தில் (''தொழிற்சங்கவாத அரசியலும் சமூக-ஜனநாயக அரசியலும்'') விவாதிக்கப்படுகின்றன.

இந்த அத்தியாயத்தில் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க அரசியல் உணர்வை உருவாக்குவதில் புரட்சிகரமான கட்சியின் பாத்திரம் எடுத்துக் கூறப்படுகிறது. பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டத்தைப் பற்றிப் பொருளாதாரவாதிகளின் தவறான, ஆபத்தான கருத்துகள் அம்பலப்படுத்தப் படுகின்றன, புரட்சிகர மற்றும் சீர்திருத்தவாதக் கொள்கைகளுக்கு இடையிலுள்ள அடிப்படையான வேறுபாடு விளக்கப்படுகிறது.

லெனின் பாட்டாளி வர்க்கத்தின் கொள்கையை அதன் வரலாற்றுக் கடமை மற்றும் அதன் மாபெரும் வரலாற்று இலட்சியம் என்னும் நோக்கிலிருந்து விளக்குகிறார்.

ருஷ்யாவைச் சேர்ந்த திருத்தல்வாதிகளான பொருளாதாரவாதிகள் தன்னியல்பான அம்சத்தை வழிபட்டது மார்க்சியத் தத்துவத்தை மட்டுமின்றி, தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் அரசியல் கடமைகளைக் குறைத்துப் பேசுவதற்குத் தவிர்க்க இயலாதபடி இட்டுச் சென்றது.

ஜாரிசத்துக்கு எதிரான அரசியல் போராட்டத்தை ருஷ்ய சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களும்—முதன்மையாக முதலாளி வர்க்கம்—நடத்த வேண்டும்; எனவே தொழிலாளி வர்க்கம் முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும், தொழிற்சாலைச் சட்டங்களில், வேலை நிலைமைகளில் சீர்திருத்தங்களையும் கூலி உயர்வையும் கோர வேண்டும் என்று பொருளாதாரவாதிகள் நம்பினார்கள்.

பொருளாதாரவாதிகள் அரசியல் போராட்டத்தின் அவசியத்தை வெளிப்படையாக மறுக்கவில்லை; ஆனால் அதை சீர்திருத்தங்களுக்கான போராட்டமாக மட்டுமே பார்த்தார்கள். மேலும் அத்தகைய போராட்டத்துக்கு ருஷ்யாவில் இருக்கின்ற

சட்ட பூர்வமான வாய்ப்புகளுடன் மட்டும் அது நின்று விட வேண்டும் என்றும் நம்பினார்கள். அவர்கள் ''அரசியல் போராட்டம்'' என்ற கருத்துக்கு சீர்திருத்தவாத உள்ளடக்கத்தைக் கொடுத்தார்கள். வேலை நிறுத்தம் செய்வதற்கு உரிமை, சங்கம் அமைப்பதற்கு, கூட்டம் கூடுவதற்கு உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, தொழிற்சாலைச் சட்டங்களில் சீர்திருத்தங்கள், இதரவை அவர்களுடைய அரசியல் கோரிக்கைகளாகும். அதே சமயத்தில் சீர்திருத்தங்களுக்கான போராட்டத்துக்கு உதவுவதற்கும் ஐரோப்பாவின் பாணியில் அதை சட்ட பூர்வமாக்குவதற்கும் அரசியல் உரிமைகள் அவசியம் என்று அவர்கள் நம்பினார்கள். அத்தகைய போராட்டம் முதலாளித்துவத்துக்கு அல்லது எதேச்சாதிகாரத்துக்கு பீதியேற்படுத்தவில்லை. பொருளாதாரவாதிகள் எதேச்சாதிகாரத்தைத் தூக்கியெறிய வேண்டும் என்று கோரிக்கை வைக்கவில்லை என்பதும் இயற்கையானதே. ''வர்க்கப் போராட்டம் ஒவ்வொன்றும் ஓர் அரசியல் போராட்டமாகும்''* என்னும் மார்க்சியக் கோட்பாட்டை அவர்கள் மேற்கோள் காட்டிப் பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான வர்க்க மோதல் ஒவ்வொன்றையும்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கம் 207.

அரசியல் போராட்டமாகக் கருதினார்கள். சமூக-ஜனநாயகவாதிகளின் கடமை ''பொருளாதாரப் போராட்டத்துக்கே ஓர் அரசியல் தன்மை கொடுக்கப்படுவது'' என்று அவர்கள் கருதினார்கள். இது போலியான கோஷம். இதுவும் கூட பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையின் தாக்கத்தால் முன்வைக்கப்படுவதே. லெனின் **என்ன செய்ய வேண்டும்?** என்ற புத்தகத்தில் இந்த கோஷத்தின் உண்மையான நோக்கத்தை அம்பலப்படுத்துகிறார்; சமூக-ஜனநாயகத்தை சீர்திருத்தவாதக் கட்சியாக மாற்றி தன்னியல்பான தொழிலாளர் இயக்கத்தின் ஒட்டுப் பகுதியாக மாற்றுவதற்கு அவர்கள் விரும்புகிறார்கள் என்று எடுத்துக்காட்டுகிறார். '' 'பொருளாதாரப் போராட்டத்துக்கே ஓர் அரசியல் தன்மை கொடுக்கப்பட வேண்டும்' என்னும் கோரிக்கை அரசியல் நடவடிக்கைத் துறையில் **தன்னியல்புக்கு அடிபணியும் தன்மையை** மிக எடுப்பாக வெளியிடுகிறது. மிக அடிக்கடி பொருளாதாரப் போராட்டம் **தன்னியல் பாகவே**—அதாவது 'படிப்பாளிப் பகுதியினர் என்னும் புரட்சிக் கிருமிகளின்' தலையீடின்றியே, வர்க்க உணர்வுள்ள சமூக-ஜனநாயகவாதிகளின் தலையீடின்றியே—அரசியல் தன்மை மேற்கொள்கிறது. எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயத் தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டமும் சோஷலிஸ்டுகளின் எந்தத் தலையீடுமின்றி அரசியல் தன்மை மேற்கொண்டது. ஆனால், பொரு

ளாதார அடிப்படையில் அரசியல் கிளர்ச்சி நடத்துவதோடு சமூக-ஜனநாயகவாதிகளின் பணி முடிந்து விடுவதில்லை. அவர்களின் பணி தொழிற்சங்க வழிப்பட்ட அரசியலைச் சமூக-ஜனநாயக அரசியல் போராட்டமாக மாற்றுவதும், சமூக-ஜனநாயக அரசியல் உணர்வின் தரத்துக்குத் தொழிலாளர்களை உயர்த்தும் நோக்குடன் தொழிலாளர்களிடையே பொருளாதாரப் போராட்டம் உண்டாக்கி விடும் அரசியல் உணர்வின் தீப் பொறிகளைப் பயன்படுத்துவதும்தான்.'' *

''பொருளாதாரப் போராட்டத்துக்கே ஓர் அரசியல் தன்மை கொடுக்கப்பட வேண்டும்'' என்னும் பொருளாதாரவாதிகளின் கோஷம் குறியடையாளமான சந்தர்ப்பவாதக் கொள்கையை மூடி மறைக்கிறது, அது சாராம்சத்தில் முதலாளி வர்க்கக் கொள்கையே என்பதை லெனின் நிரூபிக்கிறார். சந்தர்ப்பவாதிகள் முக்கியமான அரசியல் மாற்றங்களுக்கான (இவை சமூகப் புரட்சியின் மூலமாகவே நடைபெற முடியும்) தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்துக்குப் பதிலாக முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டத்தை ஏற்படுத்த முயன்றார்கள். இது முதலாளித்துவ அமைப்பையும்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 306.

சுரண்டலையும் தொடாமல் அப்படியே விட்டு வைக்கும். ''உழைப்புச் சக்தியை மேலான விலைக்கு விற்பதற்காக மட்டுமின்றி, சொத்துடைமையற்றவர்கள் தங்களைப் பணக்காரர்களுக்கு விற்றுக் கொள்ளும் படி கட்டாயப்படுத்துகிற சமுதாய அமைப்பு முறையை ஒழிப்பதற்காகவும் சமூக-ஜன நாயகம் தொழிலாளி வர்க்கப் போராட் டத்துக்குத் தலைமை தாங்கி நடத்து கிறது. குறிப்பிட்ட முதலாளிகளின் ஒரு குழுவோடு தொழிலாளி வர்க்கத்துக்குள்ள உறவு விஷயத்தில் மட்டுமின்றி, தற்கால சமுதாயத்திலுள்ள எல்லா வர்க்கங்களோ டும் ஸ்தாபனக் கட்டுள்ள அரசியல் சக்தி யான அரசோடும் அதற்குள்ள உறவு விஷ யத்திலும் சமூக-ஜனநாயகவாதிகள் தொழி லாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்'' என்று லெனின் எழுது கிறார்.*

பொருளாதாரவாதிகள் பின்பற்றுகின்ற கொள்கையின் சீர்திருத்தவாத சாராம் சத்தை அம்பலப்படுத்துகின்ற பொழுது லெனின் புரட்சிகர சமூக-ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் தொழி லாளர்களின் அன்றாடத் தேவைகள், பொருளாதாரப் போராட்டம், சீர்திருத் தங்கள், பயங்கரவாதம் ஆகியவை பற்றிய அணுகுமுறையையும் வகுத்தளிக்கிறார்.

---

* அதே நூல், பக்கம் 280.

புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார அவசியங்களையும் அவர்களுடைய அன்றாடத் தேவைகளையும் அலட்சியப்படுத்துவதாகப் பொருளாதாரவாதிகள் குற்றம் சாட்டினார்கள். இன்றைய முதலாளித்துவ சமூகவியலாளர்கள் தங்களுடைய நூல்களில் இக்குற்றச் சாட்டுக்களைத் திருப்பி எழுதுகிறார்கள். எனினும் லெனின் தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டங்களுக்கும் அவற்றுக்குத் தலைமை தாங்குவதற்கும் எப்பொழுதும் அதிகமான முக்கியத்துவம் அளித்தார். தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் தன்னியல்பான வெளிப்பாடுகள் அனைத்திலும் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் நடைபெறுகின்ற அனைத்து மோதல்களிலும் சமூக-ஜனநாயகவாதிகள்—தங்கள் அரசியல் கடமைகளை மறக்காமல் அல்லது அவற்றுக்காக அரசியல் கடமைகளைக் குறுக்கிவிடாமல் — தொழிலாளர்களின் அரசியல் அறிவையும் அனுபவத்தையும் வளப்படுத்துகின்ற முறையில் பங்கெடுப்பது அவசியம் என்று அவர் கருதினார்.

புரட்சிகர சமூக-ஜனநாயகம் தொழிலாளர்களுடைய அன்றாடத் தேவைகளுக்காகப் போராடி அவர்களுடைய கோரிக்கைகளை ஆதரிப்பதன் மூலம் ஒரு பக்கத்தில் தொழிலாளி வர்க்கத்தை வாட்டுகின்ற வேலையில்லாத் திண்டாட்டம், பட்டினி

மற்றும் இதர துன்பங்களுக்கும், மறு பக்கத்தில் மொத்த முதலாளித்துவ அமைப்புக்கும் இடையிலுள்ள தவிர்க்கவியலாத இணைப்பை விளக்குவதற்கும் முயற்சி செய்தது.

புரட்சிகர சமூக-ஜனநாயகம் தொழிலாளர்களுடைய பொருளாதாரக் கோரிக்கைகளை ஆதரிக்கின்ற பொழுது சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை ஒருபோதும் மறுக்கவில்லை. மார்க்சிஸ்டுகள் ஒவ்வொரு வகையான சீர்திருத்தத்தையும் ஒருபோதும் எதிர்த்ததில்லை. ''புரட்சிகர சமூக-ஜனநாயகம் எப்பொழுதுமே சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தைத் தனது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகக் கொண்டிருக்கிறது'' என்று லெனின் எழுதினார்.* ஆனால் பொருளாதாரவாதிகள் சீர்திருத்தங்களைத் தம்முடைய கொள்கையின் முக்கிய நோக்கமாகவும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற தமது நடவடிக்கையை அடிப்படையானதாகவும் கருதினார்கள். புரட்சிகர சமூக-ஜனநாயகம் ''...பகுதியை முழுமைக்குக் கீழ்ப்படுத்துவது போல், ...சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை விடுதலைக்காகவும் சோஷலிசத்துக்காகவும் நடக்கும் புரட்சிகரமான போராட்டத்துக்குக் கீழ்ப்படுத்துகிறது''**.

---

* அதே நூல், பக்கம் 289.

** அதே நூல், பக்கம் 289.

சீர்திருத்தங்கள் வர்க்க சமாதானத்தை ஏற்படுத்த முடியாது; ஏனென்றால் அவை உழைப்பை மூலதனம் சுரண்டுவதற்கு முடிவு கட்ட முடியாது என்று லெனின் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் வலியுறுத்தினார். உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையில், சுரண்டப்படுபவர்களுக்கும் சுரண்டுபவர் களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை சமூகப் புரட்சி மட்டுமே தீர்க்க முடியும். பாட்டாளி வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தினால் முதலாளி வர்க்கம் செய்கின்ற சீர்திருத்தங் கள் அந்த வர்க்கத்திடமிருந்து பறிக்கப் படுகின்ற சலுகைகளே தவிர வேறு அல்ல. வர்க்கப் போராட்டத்தைப் பலவீனப்படுத்து வதற்கு முதலாளி வர்க்கம் அந்த சலுகை களை உபயோகிக்கிறது. அப்படித் தருகின்ற ஒவ்வொரு சலுகைக்கும் ஈடு செய்கின்ற முறையில் மேன்மேலும் நயமான சுரண்டல் வடிவங்களை உபயோகிக்கிறது. எனவே தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார நிலை—சீர்திருத்தங்களினால் அல்ல — சமூகப் புரட்சியின் மூலமாகவே தீவிரமான முன்னேற்றத்தை அடைய முடியும். "...பொதுவாகத் தீவிரமான அரசியல் மாற் றங்கள் மட்டுமே வர்க்கங்களின் மிகவும் அவ சியமான 'நிர்ணயமான' நலன்களை நிறைவு படுத்த முடியும். குறிப்பாக, முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தை அகற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மாற்றாக வைத் திடும் அரசியல் புரட்சி ஒன்றுதான் பாட்

டாளி வர்க்கத்தின் அடிப்படையான பொரு ளாதார நலன்களை நிறைவுபடுத்த முடியும்'' என்று லெனின் எழுதினார்.* சீர்திருத்தங் களைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கண் ணோட்டம் இதுவே. ஆகவே மார்க்சிஸ்டு கள் முதலாளித்துவ சமுதாயத்தில் சீர் திருத்தங்களை வர்க்கப் போராட்டத்தின் துணைப் பொருளாக, பெருந்திரளான மக் களைப் புரட்சிக்குத் தயாரிக்கின்ற காரணி களில் ஒன்றாகக் கருதுகிறார்கள்.

லெனின் தன்னுடைய புத்தகத்தில் பயங் கரவாதத்தின் பால் புரட்சிகர சமூக-ஜன நாயகத்தின் அணுகுமுறையை வகுத்துத் தருகிறார். ஒரு பக்கத்தில் ருஷ்யாவின் குட்டி முதலாளி வர்க்கக் கட்சியான சோஷ லிஸ்ட்-புரட்சிக்காரர்கள் என்று சொல்லப் படுபவர்கள் பயங்கரவாத முறையை ஆத ரிக்கின்ற தவற்றைச் செய்து கொண்டிருந் தார்கள்; மறு பக்கத்தில் பொருளாதார வாதிகள் இச்செயல்முறையை ஆதரித்தார் கள். இது லெனினை இப்பிரச்சினையை விவாதிக்கத் தூண்டியது.

சோஷலிஸ்ட் - புரட்சிக்காரர்கள் தங் களைப் புரட்சிகர நரோத்னிக்குகளின் வாரிசு கள் என்று கூறிக் கொண்டார்கள்; ஆனால் அவர்களுடைய தத்துவக் கருதுகோள்களும் அரசியல் கோரிக்கைகளும் புறவய நிலைமை களுக்கும் முதலாளித்துவ ஜனநாயகப்

---

* அதே நூல், பக்கம் 264.

புரட்சியின் நோக்கங்களுக்கும் எதிராக இருந்தன. அவர்கள் ருஷ்யாவின் புரட்சி இயக்கத்துக்குத் தாங்களே தலைவர்கள் என்று உரிமை கொண்டாடினார்கள்; ஆனால் உண்மையில் பெருந்திரளான மக்களிடம் அவர்களுக்கு ஆதரவில்லை.

பயங்கரவாதம் மக்களைக் கிளர்ந்தெழச் செய்து அவர்கள் நடவடிக்கையில் இறங்கத் தூண்டும் என்று அவர்கள் நம்பினார்கள். சோஷலிஸ்ட்-புரட்சிக்காரர்களின் செயல் தந்திரம் போலியான புரட்சித் தன்மையைக் கொண்டிருக்கிறது, பெருந்திரளான தொழிலாளி வர்க்க மற்றும் ஜனநாயக இயக்கங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்ட, பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்துடன் தம்முடைய நடவடிக்கைகளை இணைத்துக் கொள்ள முடியாத அறிவுஜீவிகளின் தன்னியல்பான கலகம் இது என்று லெனின் சுட்டிக் காட்டினார்.

லெனின் பயங்கரவாதத்துக்கும் பொருளாதாரவாதத்துக்கும் இடையிலுள்ள உள்ளுறையான இணைப்பை அம்பலப்படுத்தினார். அந்த இணைப்பின் பொதுவான சித்தாந்தத் தோற்றுவாயை எடுத்துக்காட்டினார். ''தன்னியல்பை வழிபடுவது'' அந்தப் பொதுவான தோற்றுவாயாகும். ''பொருளாதாரவாதிகளும் பயங்கரவாதிகளும் தன்னியல்பின் வெவ்வேறு கோடிகளை வழிபடுகின்றனர். பொருளாதாரவாதிகள் 'சுத்தமான தொழிலாளர் இயக்கத்

தின்' தன்னியல்பை வழிபடுகிறார்கள்; புரட்சி இயக்கத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் ஒன்றிணைந்த முழுமை யாகத் தொடர்புபடுத்துவதற்கு ஆற்றலோ, வாய்ப்போ இல்லாத அறிவுஜீவிகளின் ஆவேசமான வெஞ்சினத்தின் தன்னியல்பைப் பயங்கரவாதிகள் வழிபடுகின்றனர்'' என்று லெனின் வலியுறுத்தினார்.*

எனவே பொருளாதாரவாதிகள் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வை வளர்ப்பதற்கு தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளைப் பயன்படுத்த முடியும் என்று கருதியதும்—அதை சிபாரிசு செய்ததும் கூட—தற்செயலானதல்ல. அவர்கள் பயங்கரவாதத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்று தங்கள் ஸ்தாபனங்களை எச்சரித்தார்கள்; பயங்கரவாத உணர்ச்சிகளை அவர்கள் சிறிதும் எதிர்க்கவில்லை.

பொருளாதாரவாதம் இயற்கையாகவே பயங்கரவாதத்துக்கு இட்டுச் செல்கிறது, ஏனென்றால் பயங்கரவாதம் பொருளாதாரவாதத்தின் செயல்திட்டத்தையே நிறைவேற்றுகிறது என்பதை லெனின் வலியுறுத்தினார். ''...தொழிலாளிகள் 'முதலாளிகளுக்கும், அரசாங்கத்துக்கும் எதிரான தமது பொருளாதாரப் போராட்டத்தை' நடத்தி வரட்டும்... அறிவுஜீவிகள் தமது சொந்த முயற்சிகளைக் கொண்டு—பயங்

* அதே நூல், பக்கங்கள் 310—311.

கரவாதத்தின் உதவியுடன்தான்—அரசியல் போராட்டம் நடத்தி வரட்டும்...''*

''தொழிலாளி வர்க்கத்தைக் கிளர்ந்தெழச் செய்வதற்கு'' பயங்கரவாதம் ஒரு சாதனம் என்பதைப் பொறுத்தமட்டில், எதார்த்தத்தில் ஏராளமான அட்டூழியங்கள் நடைபெறுகின்றன, ஆவேசத்தை எழுப்புவதற்கு இவையே போதும், அதற்கென்று விசேஷமான சாதனத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லை என்றார் லெனின். பெருந்திரளான மக்களின் புரட்சிகரமான நடவடிக்கையில் நம்பிக்கை இல்லாத பொழுதுதான் செயற்கையான தூண்டுவிப்பிகள் தேவைப்படுகின்றன.

வரலாற்றில் பெருந்திரளான மக்களின் உண்மையான பாத்திரத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாதிருத்தல், தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான சக்தியைக் குறைத்து மதிப்பிடுதல் ஆகியவற்றில் பொருளாதாரவாதத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் இடையிலான உள் தொடர்பு வேரூன்றியிருந்தது.

இன்று சில இடதுசாரி ஸ்தாபனங்கள் பயங்கரவாத முறைகளை ஏதாவதொரு அளவில் மறுபடியும் ஏற்படுத்துவதுடன் அவற்றை வலியுறுத்தி வருகின்றன என்பது எல்லாரும் அறிந்ததே. இச்செயல்முறையைப் பற்றி லெனினுடைய மதிப்பீடு எவ்

---

* அதே நூல், பக்கம் 311.

வளவு சரியானது என்பதைப் புரட்சிகர நடைமுறை நிரூபித்திருக்கிறது. உழைக்கும் மக்களின் ஜீவாதாரமான நலன்களைப் பாதுகாக்கின்ற போராட்டத்தில் பெருந் திரளான மக்களை ஈடுபடுத்தாமல், அவர் களுடைய உணர்வையும் ஸ்தாபனத்தையும் வளர்க்காமல், உறுதியான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட வர்க்கக் கொள் கையைக் கடைப்பிடிக்காமல் அந்தப் போராட்டத்தில் எவ்விதமான வெற்றிகளை யும் அடைய முடியாது.

### ஜனநாயகத்தின் முன்னணிப் போராளியான தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கல்வி

ஜனநாயக இயக்கத்திலும் ருஷ்யாவில் வரப் போகின்ற முதலாளித்துவ ஜன நாயகப் புரட்சியிலும் தொழிலாளி வர்க்கத் தின் தலைமையான பாத்திரத்தை லெனின் விளக்கினார்; ஜனநாயகத்தின் முன்னணிப் போராளி என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்தைப் பயிற்றுவிப்பதற்குப் புரட்சி கர சமூக-ஜனநாயகத்தின் கடமைகளை எடுத்துக் கூறினார்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித் துவ ஜனநாயகப் புரட்சிக்கும் சோஷலிசப் புரட்சிக்கும் இடையில், ஜனநாயகப் பிரச் சினைகளுக்கும் சோஷலிசப் பிரச்சினை களுக்கும் இடையில் ஒரு புதிய உறவு—இப்

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தொழிலாளி வர்க்கத்துக்கு மட்டுமின்றி நாட்டின் மக்கள் தொகையின் பெரும்பகுதியினருக்கும் அக் கறை ஏற்பட்டிருந்தது—ஜனநாயக இயக்கத் தில் பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரத்தை நிர்ணயித்தது. ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சிக்கு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி இன்றியமையாத முன்நிபந்தனை யாக இருந்தது. ருஷ்யாவில் எதிர்காலத் தில் நடைபெறப் போகின்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வெற்றியும் சோஷ லிசப் புரட்சியின் வாய்ப்புகளும் ஜாராட் சியை ஒழிப்பதற்கும் ஜனநாயகக் குடியரசை நிறுவுவதற்கும் நடைபெறுகின்ற பொது வான ஜனநாயக இயக்கம் தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிசப் போராட்டத்துடன் ஒருங்கிணைந்த மொத்தமாக ஒற்றுமைப் படுத்தப்பட்டு விட்டதா என்பதைப் பொறுத் திருந்தன. இப்படி ஒற்றுமைப்படுத்துதலைப் பாட்டாளி வர்க்கத்தினால் மட்டுமே நிறை வேற்ற முடியும். மற்ற வர்க்கங்களை விட அதற்கு இதில் அக்கறை உண்டு. இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உயிரூட்டு கின்ற மாபெரும் சக்தி அதற்கு உண்டு. மிகவும் அதிகமாகச் சுரண்டப்பட்டு ஒடுக்கப் பட்ட வர்க்கம் என்ற முறையில் ஜன நாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் —ஆக முழுமையான அளவில்—அடைவதில் மிதவாத முதலாளி வர்க்கத்தைக் காட்டி லும் அதற்கு அதிகமான அக்கறை உண்டு.

அது இந்தச் சுதந்திரங்களை மக்கள் தொகையின் பெரும்பான்மையினருடைய நலன்களுக்காக, விவசாயிகளின் நலன்களுக்காக, தன்னுடைய சொந்த வர்க்கத்தின் நலன்களுக்காக, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக மேலும் வளர்ச்சியடைகின்ற நலன்களுக்காகப் பேரளவில் உபயோகிக்க முடியும். பாட்டாளி வர்க்கம் இந்த நோக்கத்துடன் ஜனநாயகத்தின் முன்னணிப் போராளி என்ற முறையில் எல்லா ஜனநாயக சக்திகளுக்கும் தலைமையேற்க வேண்டும். பாட்டாளி வர்க்கம் ஜனநாயகத்துக்கும் சோஷலிசத்துக்கும் முன்னணிப் போராளி என்ற பாத்திரத்தை வகிப்பதற்கு சமூக-ஜனநாயகம் அரசியல் பிரச்சாரம் மற்றும் அரசியல் கல்வி மூலம் மட்டுமே அதற்குப் பயிற்சி கொடுக்க முடியும். லெனின் தன்னுடைய புத்தகத்தில் அரசியல் பிரச்சாரத்துக்கு விசேஷமான கவனம் செலுத்துகிறார்.

பாட்டாளி வர்க்கத்தை அரசியல் ரீதியில் பயிற்றுவித்தல் என்பது எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் உணர்வை வளர்ப்பதைக் குறிக்கிறது. லெனின் அரசியல் உணர்வு என்பதை மெய்யான வர்க்க உணர்வு என்று, ஸ்தூலமான அரசியல் நிகழ்ச்சிகளில் மற்ற வர்க்கங்கள், பிரிவுகள், மக்கள் தொகைக் குழுக்களின் நடவடிக்கைகளையும் நலன்களையும், அவற்றின் இடையுறவுகளையும், வர்க்க சக்திகளின் அணிச் சேர்க்

கையையும் பார்ப்பதற்குத் தொழிலாளியின் திறமை என்று கருதுகிறார். ''சமூக-ஜன நாயகவாதியாக ஆவதற்கு, நிலப்பிரபு, புரோகிதன், உயர்நிலை அரசாங்க அலுவலர், விவசாயி, மாணவன், நாடோடி ஆகியோரின் பொருளாதார இயல்பு பற்றியும் சமுதாய, அரசியல் பண்புக் கூறுகள் பற்றியும் தொழிலாளி தன் மனத்தில் ஒரு தெளிவான சித்திரம் பெற்றிருக்க வேண்டும்; அவர்களின் பலத்துக்குரிய அம்சங்களையும் பலவீனத்துக்குரிய அம்சங்களையும் அவன் அறிந்திருக்க வேண்டும்; ஒவ்வொரு வர்க்கமும் ஒவ்வொரு மக்கள் அடுக்கும் தன்னுடைய சுயநலஞ்சார்ந்த முயற்சிகளையும் தன்னுடைய உண்மையான 'உள்வினைபாடுகளையும்' மறைக்கப் பயன்படுத்தும் எல்லாக் கவர்ச்சிச் சொற்களின், போலி வாதங்களின் பொருளை அவன் கிரகித்துக் கொண்டிருக்க வேண்டும்; சில அமைப்புகளும் சில சட்டங்களும் என்னென்ன நலன்களைப் பிரதிபலிக்கின்றன, எப்படிப் பிரதிபலிக்கின்றன என்றும் அவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும்'' என்று லெனின் எழுதினார்.*

பெருந்திரளான மக்களை அரசியல் இயக்கத்தில் ஈடுபடுத்துவதற்கு மிகச் சிறந்த வழி பொருளாதாரப் போராட்டமே என்னும் பொருளாதாரவாதிகளின் நம்பிக்கை தவறானது, சாராம்சத்தில் பிற்போக்குத்

---

* அதே நூல், பக்கங்கள் 301—302.

தனமானது என்று லெனின் அம்பலப்படுத்து கிறார்.

பொருளாதாரவாதிகள் பொருளாதாரப் போராட்டத்தை முன்னணிக்குக் கொண்டு வந்தார்கள்; அரசியல் பிரச்சாரம் பொரு ளாதாரப் பிரச்சாரத்தைப் பின் தொடர வேண்டும் என்று கூறினார்கள். இக்கருத்து ''கட்டங்களின் தத்துவம்'' என்று சொல்லப் படுவதிலிருந்து தோன்றியது. அதன்படி முதல் கட்டத்தில் தொழிலாளி வர்க்கம் பொருளாதாரப் போராட்டத்தை நடத்து கிறது; பொருளாதாரப் பிரச்சாரத்தை— ''பொருளாதார அம்பலப்படுத்தல்கள்'' என்ற முறையை—சமூக-ஜனநாயகம் மிக விரிவாகப் பயன்படுத்த வேண்டும். பொரு ளாதாரப் போராட்டத்தின் மூலம் தொழி லாளர்கள் அரசியல் போராட்ட நிலைக்கு உயர்ந்து விடுவார்கள், அதன் பிறகு சமூக-ஜனநாயகம் ''அரசியல் அம்பலப்படுத்தல் கள்'' மூலம் அரசியல் பிரச்சாரத்தைச் செய்ய முடியும் என்று பொருளாதாரவாதி கள் கூறினார்கள்.

சமூக-ஜனநாயகம் பொருளாதாரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டும், தொழிற்சாலைகளில் நடைபெறு கின்ற பல்வேறு ஒழுங்கீனங்களை அம்பலப் படுத்தி பொருளாதாரப் பிரச்சாரத்தை நடத்த வேண்டும் என்று பொருளாதார வாதிகள் நம்பியதற்காக லெனின் அவர் களைக் குறை கூறவில்லை; ஆனால் புரட்சி

நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் அரசியல் போராட்டத்தை, பாட்டாளி வர்க்கத்தை அந்தப் போராட்டத்துக்கு அரசியல் ரீதியாகத் தயாரிப்பதை அலட்சியம் செய்ததை விமர்சித்தார். உதாரணமாக, தொழிலாளர்கள் கூலியில் எந்த விதமான உயர்வும்—அற்பமான உயர்வு கூட—''எந்த சோஷலிசத்தையோ அரசியலையோ விட மேல்''* என்று ரபோச்சயா மீஸ்ல் எழுதியது. இத்தகைய கருத்துகள் அரசியல் போராட்டத்தைப் பற்றி தொழிலாளர்களிடம் எதிர்மறையான அணுகுமுறையை வளர்ப்பதாக லெனின் எடுத்துக்காட்டினார். தொழிற்சாலைகளில் நடைபெறுகின்ற ஒழுங்கீனங்களை அம்பலப்படுத்துவதன் மூலம் பாட்டாளி வர்க்கம் சமுதாயத்தின் தலைமையான புரட்சிகர வர்க்கம் என்ற முறையில் தன்னுடைய பாத்திரத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவாது. தொழிற்சாலையின் செயல்முறைகளை அம்பலப்படுத்துவது உண்மையில் குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் அவர்களது முதலாளிகளுக்கும் இடையிலுள்ள உறவுகளைப் பற்றியதாக மட்டுமே இருக்கும்; உழைப்புச் சக்தியை விற்பனை செய்பவர்கள் அதை இன்னும் அதிகமான லாபத்துக்கு விற்பனை செய்யக் கற்றுக் கொள்வதும் வாங்குபவர்களான முதலாளி

* அதே நூல், பக்கம் 248.

களை எதிர்த்து முற்றிலும் வர்த்தக பேரத்தின் சுற்றுவட்டத்திற்குள் மட்டுமாகப் போராடுவதும் அதன் ஒரே விளைவாக இருக்கும். பொருளாதாரவாதிகள் இம்முறையில் தொழிலாளி வர்க்கத்தைக் குறுகிய தொழில் நலன்களின் எல்லைக்குள் கட்டுப் படுத்துவதற்கு முயற்சி செய்தார்கள். சமூக-ஜனநாயகம் தன்னியல்புக்கு அடிபணிகின்ற பொழுது இத்தகைய அம்பலப்படுத்தல் மனிதனை மனிதன் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பை எதிர்த்துக் தொழிலாளி வர்க்கம் புரட்சிகரமான முறையில் போராடுவதற்குப் பதிலாக, தொழிற்சங்கப் போராட்டத்துக்கு மட்டுமே வழிவகுக்கும். சமூக-ஜனநாயகம் தொழிலாளி வர்க்கம் ஒரு குறிப்பிட்ட முதலாளியுடன் அல்லது முதலாளிகள் குழுவுடன் வைத்திருக்கின்ற உறவுகளில் அதைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை, நவீன சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களுடனும்அமைப்பு ரீதியான அரசியல் சக்தி என்ற முறையில் அரசுடனும் அதன் உறவுகளில் பிரதிநிதித்துவம் செய்கிறது என்பது ஏற்கெனவே சொல்லப் பட்டதே. இக்காரணத்தினால் சமூக-ஜனநாயகவாதிகள் பொருளாதாரப் போராட்டத்துடன் நின்று விட முடியாது அல்லது பொருளாதார அம்பலப்படுத்தல்கள் தங்களுடைய நடவடிக்கைகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்க முடியாது.

முன்னணிப் போராளி என்ற முறையில்

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கல்வியை எதேச்சாதிகாரம், முதலாளி வர்க்கம் மற்றும் இருக்கின்ற பிற்போக்கான அமைப்பின் எல்லா அம்சங்களையும் முற்றாக அரசியல் ரீதியில் அம்பலப்படுத்துகின்ற அடிப்படையில் அமைக்க வேண்டும் என்று லெனின் கருதினார். தொழிலாளி வர்க்கம் எல்லா வர்க்கங்களுக்கும் இடையிலான உறவுகளில், அதாவது அரசியல் நடவடிக்கைகளில் மட்டுமே அரசியல் அறிவைப் பெற முடியும்.

ஆகவே சமூக-ஜனநாயகப் பிரச்சாரம் தனிப்பட்ட முதலாளியின் அட்டூழியங்களைப் பற்றி உதிரியான விவரங்களைத் தொழிலாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வருவது மட்டுமின்றி தொழில்துறை, நகர வாழ்க்கை, விஞ்ஞானம், இதரவை உட்பட வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் போலீஸ் ஒடுக்குமுறை மற்றும் எதேச்சாதிகார அட்டூழியத்தின் ஒவ்வொரு மற்றும் எல்லா வெளிப்பாடுகளையும் தொழிலாளர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும். உணர்வுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் நிலக்கிழார்களின் கொடுங்கோன்மையை, விவசாயிகள் சவுக்கால் அடிக்கப்படுவதை, அதிகாரிகளின் லஞ்ச ஊழலை, போலீஸ் வன்முறையை, ராணுவ அதிகாரிகள் படைவீரர்களைத் துன்புறுத்துவதை, மாணவர்கள் மீது அடக்குமுறையை எதிர்த்துப் போராட வேண்டும்.

அரசியல் கிளர்ச்சிகளை நடத்துவதற்கு

சமூக-ஜனநாயகவாதிகள் உண்மையான அரசியல் போராளிகளாக இருக்க வேண்டும். சிறந்த சமூக-ஜனநாயகவாதி "மக்களின் உரிமைக்காவலர் என்றிருக்க வேண்டும்... இவர் இந்தக் கொடுங்கோன்மையின், ஒடுக்குமுறையின் ஒவ்வொரு வெளிப்பாட்டுக்கும்—அது எங்கு தலைகாட்டினாலும் சரி, மக்களின் எந்தப் பிரிவையோ, வர்க்கத்தையோ பாதித்தாலும் சரி—பதில் நடவடிக்கை எடுக்கத் திறமுள்ளவராக இருக்க வேண்டும்; இந்த வெளிப்பாடுகளை எல்லாம் பொது வரையறை செய்து போலீஸ் வன்முறை, முதலாளித்துவச் சுரண்டல் பற்றிய ஒரேயொரு சித்திரத்தைத் தீட்டித்தரும் திறமுள்ளவராக இருக்க வேண்டும்; தனது சோஷலிஸ்ட் துணிபுகளையும் ஜனநாயகக் கோரிக்கைகளையும் எல்லோருடைய முன்னிலையில் வகுத்து முன்வைக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்க விடுதலைப் போராட்டத்தின் உலக வரலாற்றுச் சிறப்புள்ள முக்கியத்துவத்தை எல்லோருக்கும் தெளிவுபடுத்தும் பொருட்டு ஒவ்வொரு நிகழ்ச்சியையும்—அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் சரி—பயன்படுத்திக் கொள்ளும் திறமுள்ளவராக இருக்க வேண்டும்" என்று லெனின் எழுதினார்.*

பன்முக அரசியல் அம்பலப்படுத்தல்கள் தொழிலாளர்களை மட்டுமில்லாமல் பெருந்

---

* அதே நூல், பக்கங்கள் 319—320.

திரளான மக்களையும் பயிற்றுவித்தன. சுரண்டல் அமைப்பை ஒழிப்பதற்கு நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள உழைக்கும் மக்களுக்குத் தலைமை தாங்குகின்ற திறமுடைய வலிமையான சமூக சக்திதொழிலாளி வர்க்கமே என்று அவர்கள் கண்டார்கள்.

ஜனநாயகத்துக்கான முன்னணிப் போராளி என்ற முறையில் பாட்டாளி வர்க்கம் எல்லா ஜனநாயக சக்திகளின் ஈட்டி முனையாக இருந்து முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமை தாங்குவதற்கு சமூக-ஜனநாயகம் தொழிலாளி வர்க்கத்துக்கு அரசியல் ரீதியாகப் பயிற்சி கொடுப்பது மட்டும் போதுமானதல்ல. எதேச்சாதிகாரத்தின் மீது அதிருப்தியுற்று அதை ஒழிப்பதில் அக்கறையுள்ள அனைவரையும் தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி ஒன்று திரட்டுவதற்கு அது பாடுபட வேண்டும். சமூக-ஜனநாயகவாதிகள் இந்த நோக்கத்தை மனத்தில் கொண்டு எல்லா சமூக வர்க்கங்கள் மத்தியிலும் தத்துவாசிரியர்களாக, பிரச்சாரகர்களாக, கிளர்ச்சியாளர்களாக, அமைப்பாளர்களாக வேலை செய்ய வேண்டும், ''மக்களின் எல்லா வர்க்கங்களிடையேயும்''* பிரச்சாரம் செய்ய வேண்டும். அவர்கள் தங்களுடைய சோஷலிசத் துணிபுகளை மறைக்காமல் பொது ஜனநாயகக் கடமை

---

* அதே நூல், பக்கம் 322.

களை வகுத்து வலியுறுத்த வேண்டும்; இக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முன் னணியில் நிற்க வேண்டும். மிக ஏழையான விவசாயிகளும் சிறிய அளவுக் கைவினை ஞர்களும் சோஷலிசப் பிரச்சாரம் செய் வதற்கு சாதகமான களமாக இருக்கும்.

பாட்டாளி வர்க்கத்தைச் சுற்றிலும் பெருந்திரளான மக்களை ஒன்றுசேர்த்தல், ஜனநாயக இயக்கத்தைப் புரட்சிகர அரசி யல் போராட்டப் பாதையில் வளர்த்தல் ஆகியவை மார்க்சியக் கட்சியின் தலைமை யான பாத்திரத்தினால் உறுதி செய்யப்படு கின்றன. இக்கட்சி ''மொத்தமாக மக்களின் பெயரால் அரசாங்கத்தின் மீது தாக்குதல் நடத்துவது, பாட்டாளி வர்க்கத்துக்குப் புரட்சிகரமான பயிற்சி அளிப்பது, அவ் வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தைக் காப் பது, தொழிலாளி வர்க்கத்தின் பொருளா தாரப் போராட்டத்துக்கு வழிகாட்டுவது, மேன்மேலும் அதிகமான தொழிலாளிகளைத் தட்டியெழுப்பி நம் முகாமுக்குக் கொண்டு வருகிறதாயிருக்கும் அதன் சுரண்டுவோரை எதிர்க்கும் எல்லாத் தன்னியல்பான மோதல் களையும் பயன்படுத்துவது— ஆகியவற்றை ஒரே பிரிக்கவொண்ணா முழுமையாக''* ஒன்றுபடுத்த வேண்டும்.

---

* அதே நூல், பக்கம் 334.

## 4. புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சி. ஸ்தாபனக் கோட்பாடுகள்

ருஷ்யாவில் அப்பொழுது நெருங்கிக் கொண்டிருந்த புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதற்கும் சமூக-ஜனநாயகத்தின் அரசியல் நோக்கங்கள் வெற்றியடைவதற்கும் ஒற்றுமையான, போர்க்குணமிக்க புரட்சிகரக் கட்சி அவசியமாக இருந்தது. லெனின் தன்னுடைய பிரபலமான வாசகத்தில் இந்த அவசியத்தை எடுத்துக் கூறினார்: ''புரட்சிக்காரர்களைக் கொண்ட அமைப்பைத் தாருங்கள், ருஷ்யாவைக் குப்புறக் கவிழ்ப்போம்.''*

லெனின் அத்தகைய கட்சியின் தன்மையையும் அதன் ஸ்தாபனம் மற்றும் நடவடிக்கைகளின் கோட்பாடுகளையும் மிகவும் நுணுக்கமாக விவரித்தார். அவர் தன்னுடைய புத்தகத்தின் நான்காவது அத்தியாயத்திலும் (''பொருளாதாரவாதிகளின் பக்குவமின்மையும் புரட்சியாளர்களின் அமைப்பும்'') ஐந்தாவது அத்தியாயத்திலும் (''ஓர் அனைத்து ருஷ்ய அரசியல் பத்திரிகைக்கான 'திட்டம்' '') ஸ்தாபன விஷயங்களில், கட்சி

* அதே நூல், பக்கம் 392.

ஸ்தாபனத்தின் தன்மை மற்றும் கோட்பாடுகளில் பொருளாதாரவாதிகளின் சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்துகிறார். எதேச்சாதிகாரத்தை ஒழித்து சோஷலிசப் புரட்சியை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்ட புரட்சிகரமான பாட்டாளி வர்க்கக் கட்சியின் ஸ்தாபனக் கோட்பாடுகளை அவர் எடுத்துக்கூறி நிறுவுகிறார். கடும் அடக்குமுறை நிலவிய ருஷ்யாவில் ஒரு புரட்சிகர மார்க்சியக் கட்சியை நிறுவுகின்ற திட்டத்தை லெனின் இந்த அத்தியாயங்களில் விளக்குகிறார்.

அக்காலத்தில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத ரகத்தைச் சேர்ந்த கட்சியை, சந்தர்ப்பவாதம், வறட்டுச் சூத்திரவாதம், குறுங்குழுவாதம் ஆகியவை இல்லாத, பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான முன்னணிப் படையான கட்சியை ஏற்படுத்துவது அவசியமாக இருந்தது. தொழிலாளர் இயக்கத்தின் பரிமாணம் தேசிய அளவில் நல்ல, மத்தியப்படுத்தப்பட்ட தலைமையைக் கோரியது; ஆனால் அமைப்பு ரீதியான வடிவங்கள் அதற்கு ஏற்றவையாக இருக்கவில்லை.

### ஸ்தாபனத்தின் திறனை உயர்த்துதல்

ருஷ்யாவில் சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பாலும் குழுக்களில் அல்லது கமிட்டி

களில் அமைக்கப்பட்டிருந்தார்கள். அதே நபர்கள் தொழிலாளர்களுடன் தொடர்பு களை வைத்துக் கொண்டார்கள், பிரசுரங் களைக் கொடுத்தார்கள், ஸ்தல பத்திரி கைகளை வெளியிட்டார்கள், ஆர்ப்பாட்டங் களை நடத்தினார்கள். இவை அனைத்தும் பழங்காலத்திய முறைகளாக இருந்தன.

அதன் விளைவு என்னவென்றால் நட வடிக்கைகள் சரியாக ஒருங்கிணைக்கப்பட வில்லை, கடும் அடக்குமுறைக்கு முன்னால் இரகசிய அமைப்பு பலவீனமடைந்தது; ஸ்தலக் கட்சி உறுப்பினர்களால் ஜாரிஸ்ட் போலீசை எதிர்த்துப் போராடுவதற்கு முடியவில்லை. சமூக-ஜனநாயகக் கட்சியின் ஸ்தல அமைப்புகளின் வேலையில் உண்மை யான தொடர்ச்சி என்பது எதுவுமில்லை. அத்தகைய ஸ்தாபனங்களுக்குள் போலீஸ் உளவாளிகள் ஊடுருவுவது சுலபமாக இருந் தது; அவர்கள் நடவடிக்கைகள் எல்லா வற்றையும் இரகசியப் போலீஸ் அறிந்து கொள்ள முடிந்தபடியால் பிரம்மாண்ட மான நாசத்தை ஏற்படுத்த முடிந்தது. இத் தகைய நிலைமையில் தோல்விகள் இயற் கையாகவே ஏற்பட்டன; இத்தகைய முறை களைப் பின்பற்றி ஓர் அரசை எதிர்த்துப் போராடுவது நவீனமான ராணுவத்துக்கு எதிராகக் கம்புகளை உபயோகிப்பது போன் றதே என்று லெனின் சுட்டிக் காட்டினார். ஸ்தாபனப் பிரச்சினையைப் பொறுத்தமட் டில் பொருளாதாரவாதிகள் சம்பவங்களைப்

பின் தொடர்ந்து சென்றபடியால் இப்பழங் கால முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதி ராக பொருளாதாரப் போராட்டத்தை'' நடத்துவதற்கு நாடு தழுவிய ஸ்தா பனம் அவசியம் என்று அவர்கள் நினைக்க வில்லை. எனவே பொருளாதாரவாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியப்படுத்தப் பட்ட மார்க்சியக் கட்சியை அமைப்பதை அடிப்படையான முறையில் எதிர்த்தார் கள்.

அவர்கள் தன்னியல்பான ஸ்தாபன வடி வங்களை ஆதரித்தார்கள். பெருந்திரளான மக்கள் இயக்கம் தன்னியல்பாக ஏற்படு கின்ற பொழுது கட்சி அவசியமில்லை என்று அவர்கள் கருதியபடியால் சமூக-ஜனநாயகக் குழுக்களில் அதே பழங்கால முறைகளை யும் ஸ்தாபன வடிவங்களையும் வைத்திருப் பதற்கு அவர்கள் தங்களாலியன்ற எல்லா வற்றையும் செய்தார்கள்.

இத்தகைய பக்குவமில்லாத ஸ்தாபன வடிவங்கள் சமூக-ஜனநாயகவாதிகளின் பயிற்சியின்மையினால் மட்டும் ஏற்பட வில்லை. '''பக்குவமின்மை' எனும் சொல் நடைமுறை வழிப்பட்ட பயிற்சியின்மைக் கும் மேலாக ஒன்றைத் தழுவி நிற்கிறது; அது பொதுவாகப் புரட்சிப் பணியின் குறுகிய பரப்பெல்லையைக் குறிக்கிறது; இப்படிப்பட்ட குறுகிய நடவடிக்கையின் அடிப்படையில் புரட்சியாளர்களின் ஒரு

நல்ல அமைப்பைக் கட்ட முடியாது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுவதை அது குறிக்கிறது; கடைசியாக (முக்கியமான விஷயமும் இதுதான்), இந்தக் குறுகிய தன்மையை நியாயப்படுத்தி அதை ஒரு தனித் 'தத்துவமாக'—அதாவது, இந்தப் பிரச்சினையிலும் தன்னியல்புக்கு அடிபணிவது—உயர்த்தி வைக்கிற முயற்சிகளையும் அது குறிக்கிறது'' என்று லெனின் எழுதினார்.*

''தொழிலாளி வர்க்கத்தின் தன்னியல்பான போராட்டத்தைப் புரட்சியாளர்களின் பலமான அமைப்பு தலைமை வகித்து நடத்திச் செல்லாத வரை...''** இப்போராட்டம் உண்மையான வர்க்கப் போராட்டமாக மாறாது என்று லெனின் விளக்கினார்.

ஒரு சமூக-ஜனநாயகக் கட்சிக்கும் தொழிற்சங்கங்களுக்கும், பரஸ்பர உதவி நிதிகளுக்கும், தொழிலாளர்களுடைய இதர வெகுஜன ஸ்தாபனங்களுக்கும் இடையிலுள்ள முக்கியமான வேறுபாட்டைப் பார்க்கத் தவறியதற்காக லெனின் பொருளாதாரவாதிகளை விமர்சித்தார். அரசியல் போராட்டம் பொருளாதாரப் போராட்டத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமான அளவுக்கு விரிவானது, சிக்கலானது என்று அவர் விளக்கினார். ஆகவே ஒரு புரட்சிகர

* அதே நூல், பக்கம் 355.

** அதே நூல், பக்கம் 406.

சமூக-ஜனநாயகக் கட்சி பொருளாதார நலன்களுக்குப் போராடுகின்ற தொழிலாளர் களுடைய ஸ்தாபனத்திலிருந்து வேறு விதத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று லெனின் விளக்கினார். தொழிலாளர்களின் ஸ்தாபனம் முதலாவதாக, தொழிலாளி வேலை செய்கின்ற இடத்தை மட்டுமல்லா மல் தொழிலை அடிப்படையாகக் கொண் டிருக்க வேண்டும்; இரண்டாவதாக, அது இயன்ற அளவுக்கு விரிவாக இருக்க வேண் டும்; மூன்றாவதாக, இயன்ற அளவுக்குக் குறைவான இரகசிய நடவடிக்கையில் ஈடு பட வேண்டும். இதற்கு மாறாக, புரட்சிகர சமூக-ஜனநாயகக் கட்சி பிரதானமாக, புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நபர்களைக் கொண்டிருக்க வேண்டும்; இந்த நபர்கள் தொழிலாளர்களோ அறிவுஜீவி களோ என்பதைப் பற்றிக் கவலையின்றி எல்லாத் தொழில்களிலும் உள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அத்தகைய ஸ்தாபனம் மிகவும் விரிவானதாக இருக்க முடியாது; ருஷ்யாவில் உள்ள நிலைமை களில் அது இயன்ற அளவுக்கு இரகசியமாக இருக்க வேண்டும்.

ருஷ்யாவில் தொழிலாளி வர்க்க மார்க் சியக் கட்சியின் வளர்ச்சி பிரத்யேகமான வரலாற்று, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளில் நடைபெற்றது. கட்சியை அமைத்தல் சட்ட விரோதம் என் பதால் கட்சி இரகசியமாக இயங்கியது. இது

அதன் நடவடிக்கைகளின் எல்லா அம்சங்களிலும் அதன் ஸ்தாபனக் கட்டமைப்பிலும் தன்னுடைய முத்திரையைப் பதித்தது. ஆனால் லெனின் முன்மொழிந்த, ஆதரித்த கட்சியின் ரகம், அது எத்தகைய நிலைமைகளில் செயல்பட்டது என்றாலும், ஒரே விதமாகத்தான் இருந்தது. ஏனென்றால் அதன் ரகம் கட்சி நடவடிக்கை பற்றிய தத்துவக் கோட்பாடுகளினால், தொழிலாளர் இயக்கத்தில் அதன் பாத்திரத்தினால், அதன் கொள்கை மற்றும் ஸ்தாபனக் கோட்பாடுகளினால் நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே பிந்திய காலகட்டங்களில் நிலைமைகள் மாறிய பொழுது, கட்சி பகிரங்கமாக இயங்கிய பொழுது, ஸ்தாபன வடிவங்களும் அன்றாட நடவடிக்கைகளின் வடிவங்களும் முறைகளும் மாறின; எனினும் ஒரு புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சி என்ற முறையில் அதன் தத்துவ, அரசியல் மற்றும் ஸ்தாபனக் கோட்பாடுகள் ஒரே மாதிரியாகவே இருந்தன.

லெனின் கட்சியின் தன்மை மற்றும் ஸ்தாபனக் கோட்பாடுகளை வரையறுத்துக் கூறினார்; அது இயக்கவியல் அணுகுமுறை மற்றும் சமூக வளர்ச்சியின் விதிகளை — அவற்றின் ஸ்தூலமான வெளிப்பாடுகளில் —புரிந்து கொள்வதற்கு மிகச் சிறந்த உதாரணமாக இருந்தது.

ஒரு புரட்சிகரமான கட்சி பெருந்திரளான மக்களுடன் நெருங்கிய தொடர்பு

களைக் கொண்ட புரட்சிக்காரர்களின் ஸ்தாபனமாக இருக்க வேண்டும் என்று லெனின் கருதினார். அவர் புரட்சிக்காரர்களின் திறமை மிகுந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்தார்; ஏனென்றால் அத்தகைய ஸ்தாபனத்தினால் மட்டுமே சிதறியிருந்த சமூக-ஜனநாயகக் குழுக்களையும் கமிட்டிகளையும் ஒன்று சேர்க்க முடியும், அதன் நடவடிக்கைகளில் நிலையான தன்மையையும் தொடர்ச்சியையும் உறுதிப்படுத்த முடியும். தன்னியல்பான இயக்கம் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்தபடியால் உண்மையிலே அனுபவம் நிறைந்த தலைவர்கள் இயக்கத்துக்கு மிகவும் அவசியமாக இருந்தார்கள்.

புரட்சிக்கு, உழைக்கும் மக்களின் நலனுக்கான போராட்டத்துக்குத் தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் கட்சியின் மூலக்கருவாக இருக்க வேண்டும். அத்தகைய தன்னலமற்ற நபர்கள் விரிவான அரசியல் கண்ணோட்டத்தையும் தத்துவ அறிவையும் கொண்டிருக்க வேண்டும்; போலீசுக்காரர்களை எதிர்த்துப் போராடக் கூடியவர்களாக, சட்ட விரோதமான கட்சியின் இரகசிய வேலைகளைச் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் எப்பொழுதும் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலேயே இருக்க வேண்டும், பெருந்திரளான மக்களின் தேவைகளையும் உணர்ச்சிகளை

யும் அறிந்து, அவர்களுக்குக் கற்பிக்க, அவர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்ட வேண்டும். அவர்கள் ஆளும் வர்க்கத்தினர் மற்றும் அவர்களுடைய அரசாங்கத்தின் உத்தேசங்களையும் திட்டங்களையும் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு எல்லா இடங்களிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்ற திறமை வேண்டும்; உழைக்கும் மக்கள் ஒருபோதும் இவற்றைத் தெரிந்து கொள்ளக் கூடாது என்று ஆளும் வர்க்கங்கள் நினைக்கின்ற நடவடிக்கைகளையும் கண்டுபிடிக்க வேண்டும்.

புரட்சிகரமான கட்சிக்கு வலிமையான, நம்பகமான தலைமை அவசியம் என்று லெனின் வற்புறுத்தினார்: ''தொழில் முறையிலே பயிற்சி பெற்றும், நீண்ட அனுபவத்தால் போதனை பெற்றும், நிறைவான இசைவிணக்கத்துடன் வேலை செய்துவருகிறவர்களாயுள்ள, புடம்போட்டெடுத்த ஆற்றலுள்ள 'டஜன்' தலைவர்கள் (ஆற்றலுள்ள மனிதர்கள் நூற்றுக் கணக்கில் பிறப்பதில்லை) இல்லாமல் தற்கால சமுதாயத்தில் எந்த வர்க்கமும் உறுதியான போராட்டம் நடத்த முடியாது...''* அத்தகைய தலைவர்களைப் பயிற்றுவிப்பது நீண்ட, சிக்கலான நிகழ்வுப் போக்கு ஆகும். உண்மையான தலைவர்கள் போராட்டத்தில் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்; அவர்கள்

---

* அதே நூல், பக்கம் 384.

போராட்டத்தின் போது அனுபவத்தைப் பெறுகிறார்கள்; உறுதி, விசுவாசம் மட்டுமின்றி இயக்கத்திலிருந்து கற்றுக் கொள்கின்ற திறமையும் புதிய போராட்ட முறைகளை அதற்குக் கற்றுக் கொடுக்கின்ற திறமையும் அவர்களிடம் உண்டா என்றும் அவர்கள் சோதனை செய்யப்படுகிறார்கள். உண்மையான தலைவர் புரட்சிகரமான தத்துவத்தைப் பற்றி ஆழமான அறிவைப் பெற்றிருப்பதுடன் புரட்சிகர நடவடிக்கைகளுக்கு அதைக் கடைப்பிடிக்கின்ற திறமையையும் பெற்றிருக்க வேண்டும். முறையான தலைமையும் தொடர்ச்சியான இயக்கமும் தலைவர்களையே பெருமளவில் சார்ந்திருக்கின்றன.

தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிக்காரர்களைப் பயிற்றுவிப்பதன் அவசியத்தை லெனின் விசேஷமாக வலியுறுத்தினார். திறமையான சங்க ஊழியரான தொழிலாளி தொழிற்சாலையில் நாளொன்றுக்குப் பதினொரு மணி நேரம் வேலை செய்ய முடியாது. அத்தகைய நபருடைய தேவைகளைப் பூர்த்தி செய்து அவர் உரிய காலத்தில் இரகசிய நடவடிக்கைகளுக்கு மாற்றிக் கொள்வதற்கு, தேவைப்படுமானால் மற்றொரு பிரதேசத்துக்குப் போவதற்கு அவசியமான நிதி கட்சியிடம் இருக்க வேண்டும். ''விரிவான தயாரிப்புக்கு ஆளாகி உருப் பெற்ற, தனிச்சிறப்பான பயிற்சி பெற்ற தொழிலாளி-புரட்சியாளர்களின்... சக்தி

கள் நமக்குக் கிடைக்கின்றபொழுது உலகத்தில் எந்த அரசியல் போலீசாரும் அச்சக்திகளை எதிர்த்துச் சமாளிக்க முடியாமற் போகும்; ஏனெனில் புரட்சிக்கு முழுக்க முழுக்க அர்ப்பணித்துக் கொண்டுள்ள இச்சக்திகள் மிக விரிவான தொழிலாளர் மக்கள் திரளின் எல்லையிலா நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருப்பார்கள்'' என்று லெனின் எழுதினார்.*

எந்த ரகத்தையும் சேர்ந்த வாய்வீச்சு வீரர்கள், கட்சி உறுப்பினர்கள் தலைவர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையைக் குறைப்பதற்குப் புரட்சிகரமான கட்சி அனுமதிக்கக் கூடாது. புரட்சிகர இயக்கம் நெருக்கடியான கட்டங்களில் இருக்கும் பொழுது அரசியல் ரீதியில் அனுபவமில்லாத தொழிலாளர்களையும் ஸ்திரமில்லாத கட்சி உறுப்பினர்களையும் தவறான நடவடிக்கையில் ஈடுபடச் செய்வது மிகவும் சுலபம். அத்தகைய நடவடிக்கை எவ்வளவு தீங்கானது என்பதை வேதனையான, கசப்பான அனுபவம் மட்டுமே நிரூபிக்கும். வாய்வீச்சு வீரர்கள் தலைவர்களின் கௌரவத்தைக் குறைக்கின்ற பொழுது அவர்கள் கட்சியிலும் புரட்சிகர இயக்கத்திலும் தலைமையின் தொடர்ச்சியை அழிப்பது மட்டுமின்றி இயக்கத்தையே அழிக்கிறார்கள். லெனின் வாய்வீச்சு வீரர்கள் தொழிலாளி வர்க்

* அதே நூல், பக்கம் 403.

கத்தின் மிகவும் மோசமான எதிரிகள், அவர்களை அம்பலப்படுத்த வேண்டும், தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியதற்கு இதுவே காரணம்.

பொருளாதாரவாதிகளைப் பின்பற்றி நவீன முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள் லெனின் கட்சியை முழுநேரப் புரட்சிக்காரர்களைக் கொண்ட குறுகிய ஸ்தாபனமாகக் கருதினார், புரட்சிகர நடவடிக்கைகளுக்கு முதன்மை அளிக்காதவர்களைச் சேர்க்க மறுத்தார் என்று கூறுகிறார்கள். இது கட்சியின் அடித்தளத்தைக் குறுக்கியது, பெருந்திரளான மக்கள் மத்தியில் கட்சியின் செல்வாக்கைக் குறைத்தது, அது இயக்கத்தை பலவீனப்படுத்தியிருக்கவும் கூடும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

உதாரணமாக, மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த இரிங் பெட்ஷெர் என்ற வரலாற்றாசிரியர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: ''கண்டிப்பான மத்தியத் தலைமை, கடுமையான கட்டுப்பாடு, முழுநேரப் புரட்சிக்காரர்களை மட்டுமே உறுப்பினர்களாக்குவதன் மூலம் அதை வரையறை செய்தல், சொந்த வாழ்க்கையை விட்டுக் கொடுக்கின்ற அளவுக்கு கட்சியின் இலட்சியங்களுக்கு முழுமையான விசுவாசம் ஆகியவை உள்நாட்டு யுத்தத்தில் ராணுவத்துக்குத் தலைமை தாங்குகின்ற அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் பயன்படுத்த வேண்

டிய கோட்பாடுகள்.''* லெனின் ஒரு சதி வேலை அமைப்பை ஏற்படுத்த விரும்பினார் என்று பெட்ஷெர் வலியுறுத்துகிறார். இது உண்மையல்ல. ஒரு புரட்சிகரமான கட்சியின் பலம் பெருந்திரளான மக்களுடன், தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜன இயக்கத்துடன் அதன் பிணைப்புகளைப் பொறுத்திருக்கிறது என்று லெனின் பன்முறை வலியுறுத்தியுள்ளார். இதுதான் லெனினியக் கட்சியின் மிகவும் முக்கியமான ஸ்தாபனக் கோட்பாடு.

கட்சியின் தன்மை பற்றிய தன்னுடைய கருத்துகளை ருஷ்யாவிலிருந்த நிலைமைகளுக்குக் கையாள்கின்ற பொழுது தலைமறைவான புரட்சிகரக் கட்சியில் அனுபவமிக்க புரட்சிக்காரர்களைக் கொண்ட சிறு குழு—உயர் மட்டத் தலைமை—மற்றும் ஸ்தல கட்சி ஸ்தாபனங்கள், தொழிற்சாலைக் கட்சிக் கமிட்டிகளின் விரிவான அமைப்பைக் கொண்டிருக்க வேண்டும், இந்த ஸ்தாபனங்களும் கமிட்டிகளும் பெருந்திரளான தொழிலாளி வர்க்கத்துடன் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொண்டு அதன் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும் என்று லெனின் கருதினார். **என்ன செய்ய வேண்டும்?** என்ற புத்தகத்தில் லெனின் பின்வருமாறு எழுதினார்: ''நான் அறைந்து கூறுகிறேன்:

---

* I. Fetscher, *Von Marx zur Sowjetideologie*, Bonn, 1964, S. 92.

1) தலைவர்களைக் கொண்டதாய் தொடர்ச்சியை நிலைநிறுத்திவரும் ஒரு திடமான அமைப்பு இல்லாமல் எந்தப் புரட்சி இயக்கமும் நிலைத்து நிற்க முடியாது; 2) போராட்டத்தில் தன்னியல்பாக இழுக்கப்பட்டு வரும் மக்கள்தாம் இயக்கத்துக்கு அடிப்படையாக இருந்து கலந்து கொள்கிறார்கள், அப்படிப்பட்ட மக்கள் திரள் எவ்வளவுக்கெவ்வளவு விரிந்து பரந்து இருக்கிறதோ அவ்வளவுக்கு இப்படிப்பட்ட அமைப்பு அவசரத் தேவையாகும், அவ்வளவுக்கு இந்த அமைப்பு மேலும் கெட்டியானதாக இருந்து தீர வேண்டும் (காரணம், மக்களில் கூடுதலாகப் பிற்பட்ட நிலையில் உள்ள பகுதிகளை பலரகமான வாய்வீச்சு வீரர்கள் திசை திருப்புவது மேலும் சுளுவானது), என்று; 3) புரட்சி நடவடிக்கையில் முழு நேரமாக ஈடுபட்டுள்ள நபர்கள்தாம் முதன்மையாக இப்படிப்பட்ட அமைப்பில் இருக்க வேண்டும், என்று; 4) ஒரு எதேச்சாதிகார அரசில், முழு நேரமாகப் புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறவர்களாயும் அரசியல் போலீசை எதிர்த்துப் போராடும் கலையில் தொழில்முறையில் பயிற்சி பெற்றவர்களாயும் உள்ளவர்களை மட்டும் கொண்டதாய் இப்படிப்பட்ட அமைப்புகளில் உறுப்பினர் தொகையை எவ்வளவுக்கெவ்வளவு கட்டுப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு இந்த அமைப்பைக் 'கெல்லியெறிவது' கஷ்டமாகும், என்று, மற்றும் 5) அவ்வளவுக்கு இயக்

கத்தில் சேர்ந்து அதில் தீவிரமாகப் பணி புரியக் கூடிய தொழிலாளி வர்க்க நபர்களும் ஏனைய சமுதாய வர்க்கங்களின் நபர்களும் அதிகமாக இருப்பார்கள், என்று.''*

பெருந்திரளான தொழிலாளர்களுடன் கட்சியின் பிணைப்புகளைத் தக்க வைத்துக் கொள்கின்ற சாதனம் என்ற முறையில் பிரதானமாக தொழிலாளர்களைக் கொண்ட குழுக்கள், பல்வேறு ஸ்தாபனங்களின் பரந்த அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று லெனின் முன்மொழிந்தார். இவை தொழிற்சங்கங்களாக, கல்விக் குழுக்களாக, சட்ட விரோதமான பிரசுரங்களைப் படிக்கின்ற குழுக்களாக இருக்கும். இக்குழுக்களில் சில கட்சியில் சேரும், மற்றவை கட்சிக்கு நெருக்கமாக மட்டுமே இருக்கும். இந்த ஸ்தாபனங்கள், குழுக்கள் மூலமாக கட்சி பெருந்திரளான தொழிலாளர்களுடன் நெருக்கமான இணைப்பைக் கொண்டிருக்கும். ஒன்று அல்லது சில கட்சி உறுப்பினர்கள் கட்சியில் இல்லாத குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்று கருதப்படுகிறது. குழுவை இயக்குவதும் குழு நடவடிக்கைகள் அனைத்துக்கும் பொறுப்பு ஏற்றுக் கொள்வதும் அவர்களுடைய வேலை.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர மார்க்சியக் கட்சி பிரதேசம் மற்றும் வேலை

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 388.

செய்கின்ற இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று லெனின் கருதினார்.

முழுநேரப் புரட்சிக்காரர்கள் ஸ்திரமான தலைமையையும் ஸ்தாபன நடவடிக்கைகளில் தொடர்ச்சியையும் தருகிறார்கள். ஸ்தல அமைப்புகள், குழுக்கள், கமிட்டிகள் ஆகியவை கட்சியைப் பெருந்திரளான மக்களுடன் இணைத்தன.

## மத்தியத்துவமும் ஜனநாயகவாதமும்

ஏகாதிபத்திய சகாப்தத்தில் தொழிலாளர் இயக்கம், குறிப்பாக ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தை எதிரிட்ட புதிய கடமைகள் குறிவழிப்பட்ட, உறுதியான, ஒருங்கிணைக்கப்பட்ட போராட்டத்தையும்அதன் எல்லா முயற்சிகளின் ஒருமையையும், அதாவது இப்போராட்டத்துக்கு மத்தியப்படுத்தப்பட்ட தலைமையையும் கோரின. ஒரு புரட்சிகரமான, மத்தியப்படுத்தப்பட்ட அரசியல் ஸ்தாபனம் மட்டுமே இதை உறுதிப்படுத்த முடியும். ஆகவே மத்தியத்துவம்தான் கேந்திரமான ஸ்தாபனக் கோட்பாடு என்று லெனின் கருதினார்.

கட்சியின் ஜனநாயகக் கோட்பாடுகளை லெனின் புறக்கணிக்கிறார் என்று பொருளாதாரவாதிகள் குற்றம் சாட்டினார்கள். பொருளாதாரவாதிகளையும் மென்ஷிவிக்கு

களையும் போல சந்தர்ப்பவாதத்தின் நவீன ஆதரவாளர்கள், லெனினியக் கட்சி ஆரம்பத்திலிருந்தே தன்னுடைய நடவடிக்கைகளில் ஜனநாயகத்தைக் குறைவாக மதிப்பிட்டது, கட்டுப்படுத்தியது, இன்றும் கூட இதுதான் அந்தக் கட்சியின் முக்கிய அம்சமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

மத்தியத்துவத்தைப் பற்றி லெனினுடைய கருத்து அதைப் பற்றிய பொருளாதாரவாதிகளின் கருத்துக்கு முற்றிலும் மாறானது.

கட்சிக்கு ஒற்றை இலட்சியம் இருக்க வேண்டும், உறுப்பினர்கள் கண்டிப்பான கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும், கீழ்நிலைக் கட்சி அமைப்புகள் மேல்நிலைக் கட்சி அமைப்புகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும், ஸ்தல அமைப்புகள் மத்திய அமைப்புக்குக் கீழ்ப்படிய வேண்டும், மத்தியத் தலைமையின் முடிவுகளைக் கட்சியின் எல்லா அமைப்புகளும் நிறைவேற்ற வேண்டும் ஆகியவற்றையே லெனின் மத்தியத்துவம் என்ற சொல்லினால் குறிப்பிட்டார்.

சமூக-ஜனநாயகவாதிகள் போலீசின் அடக்குமுறைக்கு ஆளாகின்ற பொழுது, மத்தியத் தலைமை ஸ்தலத் தலைவர்களை நியமிக்கும், கமிட்டி உறுப்பினர்களை நியமிக்கும், எல்லா விஷயங்களிலும் கண்டிப்பான இரகசியச் செயல்முறை பின்பற்றப்படும் என்பதை மத்தியத்துவம் குறித்தது.

அதே சமயத்தில் கட்சி உறுப்பினர்களுக்கு—முடிவுகள் எடுக்கப்படுகின்ற வரை—எல்லாப் பிரச்சினைகளையும் விவாதிப்பதற்கும் தம்முடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கும் சுதந்திரம் உண்டு. கட்சியும் அதன் ஸ்தாபனங்களும்—சந்தர்ப்பங்கள் அனுமதிக்கின்ற அளவுக்கு—ஜனநாயக முறையில் இயங்கின; தேர்தல்களை நடத்தின.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் 1903ஆம் வருடக் காங்கிரசில் போல்ஷிவிக் கட்சி நிறுவப்பட்ட பிறகு அது ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் இயங்கியது. ரு.ச.ஜ.தொ. கட்சியின் நான்காவது காங்கிரசில் (1906) நிறைவேற்றப்பட்ட விதிமுறைகள் அதை உறுதிப்படுத்தின.

கட்சியில் கட்டுப்பாடு தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதாக லெனின் கருதினார். கட்டுப்பாடின்மையினாலும் தத்துவார்த்த விவாதங்களில் எல்லை கடந்து ஈடுபட்டமையினாலும் ருஷ்ய சமூக-ஜனநாயகத்தில் நெருக்கடி ஏற்பட்ட பிறகு இது மிகவும் அவசியமாக இருந்தது. கட்டுப்பாடு இல்லாமல் உண்மையிலேயே போர்க்குணமிக்க, புரட்சிகர மார்க்சியக் கட்சி என்பது கிடையாது.

கட்சியை அமைக்கின்ற திட்டம்.
அரசியல் பத்திரிகையின் பாத்திரம்

லெனின் ருஷ்யாவில் புரட்சிகரக் கட்சியை அமைக்கின்ற திட்டத்தில் ஸ்தூலமான வரலாற்று அணுகுமுறையைப் பின்பற்றினார்.

மார்க்சியக் கட்சியை அமைப்பதற்கு லெனினுடைய திட்டம் புதுமையாகவும் எளிமையாகவும் இருந்தது: முதலில் கட்சியின் சித்தாந்தத்தை நிர்ணயிக்க வேண்டும், அத்தகைய சித்தாந்தத்துடன் உடன்படுகின்ற அனைவரையும் திரட்டி அமைக்க வேண்டும், கட்சியைக் கட்டுகின்ற ஸ்தாபனக் கோட்பாடுகளை வகுத்தளிக்க வேண்டும், பின்னர் ஆதரவாளர்களின் பேரவையைக் கூட்டி கட்சியின் அடிப்படையான செயல்திட்டம், செயல்முறை மற்றும் அதனுடைய நடவடிக்கையின் வடிவங்களையும் முறைகளையும் தயாரிக்க வேண்டும்.

ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடம் நிலவிய சித்தாந்த மற்றும் ஸ்தாபன வேற்றுமைகளைப் போக்குவதைஇத்திட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது.

அகில ருஷ்ய அளவில் இரகசிய அரசியல் பத்திரிகையை வெளியிடுவது இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவி புரிய முடியும், உதவி செய்யும் என்று கருதப்பட்டது.

இத்திட்டம் எதார்த்தமாக இருந்தது. ஏனென்றால் அது ருஷ்யாவில் நிலவிய நிலை

மைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டது: அங்கே முதலாளித்துவ ஜனநாயக சுதந்திரங்கள் இல்லை; அங்கே எதேச்சாதிகாரத்தின் கொடுங்கோன்மையும் மூர்க்கத்தனமான பிற்போக்கும் நிலவின. புரட்சிகரமான பத்திரிகை சட்ட பூர்வமான பிரச்சார வழிகளுக்குப் பதிலாக இருக்கும், சமூக-ஜனநாயகவாதிகளை சித்தாந்த ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் ஒற்றுமைப்படுத்தும் என்று கருதப்பட்டது. லெனின் பத்திரிகையின் நோக்கங்களைப் பின்வருமாறு வர்ணித்தார்: ''பத்திரிகை என்பது ஒரு கூட்டுப் பிரச்சாரகனும், கூட்டுக் கிளர்ச்சியாளனும் மட்டுமல்ல, அது ஒரு கூட்டான அமைப்பாளனுமாகும்.''*

முறையாக வெளியிடப்பட்டு முறையாக வினியோகிக்கப்படுகின்ற தேசியப் பத்திரிகை இல்லாமல் அரசியல் பிரச்சாரம் வெற்றி அடைய முடியாது. கட்சி நாடு தழுவிய அளவில் இல்லாத பொழுது, ஒரு தேசியப் பத்திரிகை மட்டுமே வாடிக்கையான வேலையின் அடிப்படையில் நகரங்களுக்கும் கமிட்டிகளுக்கும் தொடர்பை ஏற்படுத்தும். அப்பத்திரிகை ருஷ்ய நாடு முழுவதிலும் நடைபெறுகின்ற பல்வேறு நடவடிக்கைகளை வெளியிடும்; அதன் மூலம் புரட்சிக்காரர்களைத் தொடர்ந்து முன்னே செல்லும்படி தூண்டும். பத்திரிகையை வினி

* V. I. Lenin, *Collected Works*, vol. 5, p. 22.

யோகிக்கின்ற வேலையே சமூக-ஜனநாயகக் குழுக்களுக்கு இடையில் தொடர்பை ஏற் படுத்தும். பத்திரிகை நிருபர்களும் வினி யோகஸ்தர்களும் எதிர்காலக் கட்சியின் மூலக்கருவாக இருப்பார்கள். லெனின் அத்தகைய பத்திரிகையை ஒரு மாபெரும் ஊதுலைக்கு ஒப்பிட்டார். அது வர்க்கப் போராட்டத்தின், பொது மக்கள் அதிருப்தி யின் ஒவ்வொரு தீப்பொறியையும் மாபெ ரும் நெருப்பாக விசிறிவிடும். கட்சியை அமைப்பதற்கு, ஜாரிசத்தை ஒழிப்பதில் மக்களுக்குத் தலைமை தாங்குவதற்குத் தகுதியுள்ள அனுபவசாலிகளைத் தேர்ந் தெடுத்துப் பயிற்சியளிப்பதற்கு இந்த வேலை உதவி செய்யும் என்று லெனின் கரு தினார். ''இந்தப் பத்திரிகையைச் சுற்றிச் சூழ்ந்து உருவாகக் கூடிய அமைப்பு, அதன் கூட்டாளிகளின்(அதாவது, அந்தப் பத்திரிகைக் காக வேலை செய்யும் எல்லோரையும் குறிக் கும் பரந்த அர்த்தத்தில் இச்சொல்லைப் பயன்படுத்துகிறோம்) அமைப்பு எல்லா வற்றிற்கும் தயாராக இருக்கும்; கடுமையான புரட்சித் 'தளர்ச்சி' நிலவும் காலங்களில் கட்சியின் கௌரவத்தையும் கண்ணியத்தை யும் தொடர்ச்சியையும் காப்பாற்றுவதி லிருந்து நாடு தழுவிய ஆயுதமேந்திய எழுச் சிக்குத் தயாரிப்பது, நேரம் குறிப்பது, நடத்தி முடிப்பது வரை எல்லாவற்றிற்கும்

தயாராக இருக்கும்'' என்று லெனின் எழுதினார்.*

லெனினிய இஸ்க்ரா அத்தகைய கூட்டுப் பிரச்சாரகனாக, கிளர்ச்சியாளனாக, அமைப்பாளனாக இருந்தது. 1920இல் லெனின் நிறுவிய இப்பத்திரிகை மிகவும் கஷ்டமான நிலைமைகளில் கட்சி சக்திகளை ஒன்றுபடுத்துவதற்கு அதிகமான சித்தாந்த, அரசியல் மற்றும் அமைப்பு ரீதியான வேலையைச் செய்தது; ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குத் தயாரிப்புகளைச் செய்தது. அக்காங்கிரஸ் புதிய கட்சியின்—போல்ஷிவிக் கட்சியின்—முதல் காங்கிரசாக இருந்தது. கட்சியின் முழுநேரப் புரட்சிக்காரர்களுக்கு அப்பத்திரிகை சித்தாந்த மற்றும் அரசியல் பள்ளியாக இருந்தது. பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்குத் தம்மை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்ட புரட்சிக்காரர்களின் ஒன்றிணைந்த ஸ்தாபனத்தை அது உருவாக்க முடிந்தது.

இஸ்க்ரா தொழிலாளி வர்க்கத்துக்கு அரசியல் அறிவைக் கொடுத்தது; முரணில்லாத புரட்சிகர கோஷங்களை முன்வைத்தது; சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியது. என்ன செய்ய வேண்டும்? என்ற புத்தகத்தில் லெனின் விளக்கிய திட்டம் அமுலாக்கப்பட்டது.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 474.

## 5. லெனின் எழுதிய "என்ன செய்ய வேண்டும்?" என்ற புத்தகத்தின் வரலாற்று முக்கியத்துவம்

தலைசிறந்த மார்க்சிய-லெனினியப் புத்தகத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை அதில் வெளியிடப்பட்டுள்ள கருத்துகள்—அன்றும் பிறகும் —புரட்சிக்காரர்கள் மீது எந்த அளவுக்குத் தாக்கம் செலுத்தும் என்பதைக் கொண்டு அளவிட முடியும். கடைசிப் பகுப்பாய்வில், அதன் முக்கியத்துவம் இக்கருத்துகளினால் வழிகாட்டப்படுகின்ற சமூக, அரசியல் சக்திகளின் நடவடிக்கைகளின் விளைவுகளைக் கொண்டு மதிப்பிடப் படுகின்றது.

ருஷ்யாவின் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளுக்கு முன்பாக "என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியைத் துணிவுடன் எழுப்பிய லெனின் அதற்கு விரிவான, தேர்ந்தாராயப்பட்ட பதிலைக் கொடுத்தார். அக்காலத்திய சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் சாரத்தைப் பற்றி அவருடைய கருத்தேற்பையும் தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கின்ற பெருந்திரளினருடைய புரட்சிகர வாய்ப்பு வளங்களில் அவருடைய நம்பிக்கையையும் அந்த பதில் எடுத்துக் காட்டியது. லெனினுடைய பதில் தெட்டத்

தெளிவாக, மறுக்க முடியாததாக இருந்தது: மார்க்சியத்தைத் திருத்துவதற்கு அல்லது சிதைப்பதற்குச் செய்யப்படுகின்ற எந்த முயற்சிக்கும் எதிராக அதைப் பாதுகாக்க வேண்டும், உழைக்கும் மக்களின் அடிப்படையான நலன்களைப் பாதுகாக்கின்ற போராட்டத்தில்அதை வளர்க்க வேண்டும், நடவடிக்கைக்கு வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும், தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணமிக்க, ஒன்றுபட்ட மார்க்சியக் கட்சியைக் கட்டுவதற்கு இடைவிடாது பாடுபட வேண்டும். அத்தகைய கட்சி இப்போராட்டத்தில் பெருந்திரளான மக்களின் அரசியல் தலைவனாகவும் அமைப்பாளனாகவும் இருக்கும். அன்றைய ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளை இக்கடினமான, முக்கியமான கடமை எதிர்நோக்கியது. தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரையும் சுரண்டல், ஒடுக்குமுறையிலிருந்து விடுவிப்பதற்கு வேறு எந்த வழியும் இல்லை.

புதிய ரகத்தைச் சேர்ந்த புரட்சிகர மார்க்சியக் கட்சியைப் பற்றியும் அதன் தத்துவ, அரசியல் மற்றும் ஸ்தாபனக் கோட்பாடுகளைப் பற்றியும் லெனினுடைய கருத்துகள் அத்தகைய கட்சியைப் பற்றிய தத்துவத்துக்கு அடித்தளம் அமைத்தன. இது மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையான கருத்தமைப்புகளில் ஒன்று. லெனினுடைய கருத்துகள் ருஷ்யாவின் புரட்சிகர

சமூக-ஜனநாயகவாதிகள் மீது, தங்களுடைய கட்சியையும் அதன் வேலைமுறைகளையும் பற்றி அவர்களுடைய] கருத்துகள் மீது மாபெரும் தாக்கத்தைக் கொண்டிருந்தன. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதிகள் மீது என்ன செய்ய வேண்டும்? என்னும் புத்தகம் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது, அதன் விளைவாக ஏராளமானவர்கள் இஸ்க்ராவின் ஆதரவாளர்களாக (அவர்களுடைய ஒப்புதலின்படி) மாறியிருக்கிறார்கள் என்று ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் தெரிவிக்கப்பட்டது. ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளை சித்தாந்த ரீதியில் ஒற்றுமைப்படுத்துவதிலும் தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சியக் கட்சியை அமைப்பதற்கு தளத்தை நிர்மாணிப்பதிலும் என்ன செய்ய வேண்டும்? என்னும் புத்தகம் தலைசிறந்த பாத்திரத்தை வகித்தது.

இஸ்க்ரா பத்திரிகையை விநியோகம் செய்தவர்களில் ஒருவரான இ. இ. ராத்சென்கோ பின்வருமாறு எழுதினார்: ''நான் எப்பொழுதும் லெனின் ஏரையே உபயோகிக்கிறேன்; ஏனென்றால் அதுதான் நிலத்தை உழுவதற்கு மிகச் சிறந்த ஏர். அது தேக்கம் என்ற கட்டிகளை உடைத்து மண்ணைக் கிளறிவிடுகிறது, எனவே அறுவடை சிறப்பாகஇருக்கிறது.ரபோச்சியே தேலோ விதைத்த களைகளைக் கண்டதும், அது அவற்றை

வேருடன் பிடுங்குகிறது. அது பிரமாதம்!''*

லெனின் எழுதிய என்ன செய்ய வேண்டும்? என்னும் புத்தகம் ஒரு புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியின் உருவாக்கத்துக்கு சித்தாந்த, தத்துவ அடிப்படையாக இருந்தது.

ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் லெனினுடைய தத்துவத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட புதிய கட்சி புரட்சிகர செயல்முறைக் கட்சியாக இருந்தது. தத்துவம் மற்றும் புரட்சிகர நடவடிக்கையின் ஒற்றுமையைக் கொண்டிருந்த அத்தகையதொரு கட்சியை உருவாக்கிய வரலாற்றுப் புகழ் லெனினுக்கும் அவருடைய ஆதரவாளர்களுக்கும் உரியது.

போல்ஷிவிக் கட்சி சர்வதேச சமூக-ஜனநாயக மற்றும் தொழிலாளர் இயக்கத்திலிருந்து தனித்த முறையில் உருவாக்கப்படவில்லை; அவற்றின் பிரிக்க முடியாத பகுதியாகவே அது உருவாக்கப்பட்டது. அச்சமயத்தில் இயக்கத்தில் இரண்டு திட்டவட்டமான போக்குகள், புரட்சிகர மற்றும் சந்தர்ப்பவாதப் போக்குகள் இருந்தன. இப்புரட்சிகரப் போக்கு ருஷ்யாவில் ஒரு லெனினியக் கட்சியின் உருவாக்கத்தில் வெளிப்பட்டது. இது சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் மற்றும் உலகப் புரட்சிகர நிகழ்வுப்

---

* ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸ். பதிவுக் குறிப்புகள், மாஸ்கோ, 1959, பக்கம் 579 (ருஷ்ய மொழியில்).

போக்கின் எதிர்காலத்துக்குத் தீர்மானகரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. உலகப் புரட்சிகர இயக்கத்தின் மையம் ருஷ்யாவுக்கு மாறிவிட்டது.

புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியின் சாரம் மற்றும் அதன் சிறப்பான அம்சங்கள் ருஷ்ய நிலைமைகளுடன் பொருந்தியிருந்தது மட்டுமின்றி ஏகாதிபத்திய சகாப்தத்தில் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தின் தேவைகளையும் பிரதிபலித்தன.

போராட்ட நிலைமைகளிலும் கம்யூனிஸ்டுகள் வேலை செய்த வரலாற்று நிலைமைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்ட பொழுது மார்க்சிய-லெனினியக் கட்சியும் வளர்ச்சியடைந்து மாற்றமடைந்தது இயற்கையானதே. புதிய இலட்சியங்களின் காரணமாக, அது தன்னுடைய சித்தாந்த, அரசியல் கொள்கை மற்றும் அமைப்பை மாற்றிக் கொண்டது, ஆனால் புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சி என்ற முறையில் அதன் அடிப்படையான அம்சங்கள் அப்படியே நீடித்தன. முதல் பத்து ஆண்டுகளில் கட்சியின் அனுபவத்தை லெனின் பின்வருமாறு தொகுத்துரைத்தார்: ‘‘இந்த ஸ்தாபனம் தன்னுடைய அடிப்படையான ரகத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்ற பொழுது, மாறியிருக்கின்ற நிலைமைகளுக்குத் தக்க முறையில் தன்னுடைய வடிவத்தைத் தகவமைத்துக் கொண்டிருந்தது....’’*

* V. I. Lenin, *Collected Works*, vol. 19, p. 401.

உலகத்தின் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் அமைக்கப்பட்ட பொழுது புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியைப் பற்றிய லெனினியத் தத்துவத்தின் சர்வதேசியத் தன்மை மேன்மேலும் அதிகமாகப் புலப்பட்டது.

இன்று தனிப்பட்ட புரட்சிக்காரர்கள் (இவர்களில் சில கம்யூனிஸ்டுகளும் உண்டு) பெருந்திரளான தொழிலாளி வர்க்கக் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கும் வளர்ச்சிக்கும் **என்ன செய்ய வேண்டும்?** என்னும் புத்தகத்தில் லெனின் தெரிவித்த கருத்துகளைக் கடைப்பிடிக்க முடியாது என்று கூறுகிறார்கள். வளர்முக நாடுகளிலும் முதிர்ச்சியடைந்த நாடாளுமன்ற அமைப்புகளைக் கொண்ட நாடுகளிலும் லெனினுடைய போல்ஷிவிக் கட்சியிலிருந்து அதிக அளவில் வேறுபட்டிருக்கின்ற கட்சி அவசியம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

எனினும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கத் தன்மை மாறுவதில்லை, அது மாற முடியாது. அதே போல் அதனுடைய வரலாற்று இலட்சியமும் முதலாளித்துவ சமுதாயத்தின் வளர்ச்சியின் பொதுவான வரலாற்றுப் போக்கும் மாறுவதில்லை. இப்போக்கு சோஷலிசத்துக்கு மாறுவதற்குரிய புறவய மற்றும் அகவய முன்நிபந்தனைகளைத் தவிர்க்க முடியாதபடி ஏற்படுத்துகிறது. சோஷலிசத்துக்கு மாறுவதற்குரிய புறவய முன்நிபந்தனைகள் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து கொண்டிருப்பதால் அக

வயக் காரணியின் பாத்திரம்—அதாவது தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா உழைக்கும் மக்களையும் ஸ்தாபன ரீதியாகத் திரட்டுதலும் தம்முடைய நோக்கங்கள் மீது அவர்களது பற்றுறுதியும்—தொடர்ச்சியாக வளர்ச்சியடைகிறது. ஆகவே ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் அடிப்படையான கோட்பாடுகள் இன்னும் அதே போன்றுதான் இருக்கின்றன. கம்யூனிஸ்ட் இயக்கம் வளர்ச்சியடைந்து மேலும் அதிகமான அனுபவத்தைப் பெறுகின்ற பொழுது கட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவமும் வளர்ச்சியடைவதுஇயற்கையே.

இத்தத்துவம் பின்வரும் அடிப்படையான பகுதிகளைக் கொண்டிருக்கிறது:

—கட்சி என்பது தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா உழைக்கும் மக்களின் மெய்யான, புரட்சிகர முன்னணிப் படை என்ற முறையில் வரலாற்று ரீதியான அதன் இடத்தையும் பாத்திரத்தையும் வரையறுத்தல், தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டம் மற்றும் ஆக்கபூர்வமான, மாற்றுகின்ற நடவடிக்கைகளின் வெவ்வேறு கட்டங்களில் கட்சிக்கும் பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினர், எல்லா உழைக்கும் மக்கள் ஆகியோருக்கும் இயக்கவியல் ரீதியான பரஸ்பரச் செயல்முறையை நிறுவுதல்;

—கட்சியின் சித்தாந்த மற்றும் தத்துவ

அடிப்படையை விளக்குதல் மற்றும் தொழிலாளர் இயக்கத்துக்குள் மார்க்சியத்தைக் கொண்டு செல்லுதல்;

—கட்சியின் உள் விவகாரங்கள் சம்பந்தமான ஸ்தாபனக் கோட்பாடுகள்.

லெனின் **என்ன செய்ய வேண்டும்?** என்ற புத்தகத்தில் நம் காலத்தின் மாபெரும் இயக்கங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுப் பாத்திரம், அதன் ஸ்தாபனம் மற்றும் நடவடிக்கையின் சமூக, அரசியல் கோட்பாடுகள், எல்லா தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களின் அமைப்பிலும் அதன் இடம் ஆகியவற்றை விரிவாக விளக்கினார். இதில் தான் இந்தப் புத்தகத்தின் முக்கியத்துவம் அடங்கி உள்ளது.

கட்சியைப் பற்றிய லெனினுடைய தத்துவத்தை அனுபவம் வளப்படுத்தி, அதுவே சரியானது என்று நிரூபித்திருக்கிறது; இத்தத்துவம் புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியின் சிறப்பான அம்சங்களை நிர்ணயிக்கிறது.

இந்தக் கட்சி:

—பெருந்திரளான தொழிலாளர் இயக்கம் மார்க்சியத்தை ஏற்றுக் கொள்வதன் சின்னமாக இருக்கிறது; அதன் நடவடிக்கைகள் மார்க்சிய-லெனினியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; புரட்சிகரமான தத்துவம் மற்றும் புரட்சிகர நடைமுறையின் ஒன்றிணைந்த ஒற்றுமையை உறுதிப் படுத்திக் கொண்டு இந்த போதனையை

வளர்க்கிறது. இது நீண்ட கால முன்னறிவிப்புகளைச் செய்கின்ற திறமையை இயக்கத்துக்குக் கொடுத்து, உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் படைப்பு நடவடிக்கைகளின் செயல்திறனை உயர்த்துகிறது;

—தொழிலாளி வர்க்கத்தின் கூட்டு அரசியல் தலைவன், அதன் ஸ்தாபனத்தின் ஆக உயர்ந்த வடிவம், உழைக்கின்ற மக்கள் அனைவரது முன்னணிப்படை, எல்லாக் காலகட்டங்களிலும் அவர்களுடைய புரட்சிகர நடவடிக்கைகளை அமைத்து அவற்றுக்குத் தலைமை தாங்குகிறது;

—தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சியடைந்த, அமைப்பு ரீதியான படைப்பிரிவு; பெருந்திரளான தொழிலாளர்கள் மற்றும் எல்லா உழைக்கும் மக்களுடனும் அதன் பிணைப்புகளின் மெய்வடிவம்;

—ஏதாவதொரு வடிவத்தில் தொழிலாளி வர்க்க ஆட்சியதிகாரம் நிறுவப்படுதலை உறுதியாக்குவதும் முதலாளித்துவ சமுதாயத்தைப் புரட்சிகரமான முறையில் சோஷலிச சமுதாயமாக மாற்றுவதும் அதன் வரலாற்றுக் கடமையாகும்;

—அதன் உறுப்பினர்களுடைய சித்தாந்த மற்றும் அரசியல் ஒருமை, ஜனநாயக மத்தியத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அதன் ஸ்தாபன ஒன்றிணைப்பு, அதன் ஒவ்வொரு உறுப்பினரிடமும் உள்ள உணர்வு பூர்வமான கட்டுப்பாடு மற்றும் அவரது தீவிர நடவடிக்கை ஆகியவற்றைக்

கொண்டு தன்னுடைய நோக்கத்தை நிறை வேற்றிக் கொள்ள முடிகிறது;

—தன்னுடைய புரட்சிகர நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகளின் விளைவுகளை விமர்சன ரீதியில் பகுப்பாய்வு செய்கிறது, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அனுபவத்தைத் தொடர்ச்சியாக ஆராய்கிறது, மதிப்பிடுகிறது, பயன்படுத்திக் கொள்கிறது, திருத்தல்வாதம், சந்தர்ப்பவாதம்,வறட்டுச் சூத்திரவாதம் மற்றும் குறுங்குழுவாதத்தின் எந்த ரகத்தையும் சமரசப்படுத்த இயலாத முறையில் எதிர்க்கிறது;

—பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட்பாடுகளை முரணில்லாமல் பின்பற்றுகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பத்திலிருந்தே பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட்பாடுகளைத் தனக்கு வழிகாட்டியாகக் கொண்டிருக்கிறது. அதன் மொத்த வரலாறும் தேசிய மற்றும் சர்வதேசியத் தன்மையின் பிரிக்க முடியாத இணைப்புக்குச் சீரிய உதாரணமாக இருக்கிறது. இன்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இரட்டை சர்வதேசக் குறிக்கோளை முரணில்லாமல் பின்பற்றுகிறது: தன்னுடைய நாட்டில் ஒரு புதிய சமுதாயத்தை வெற்றிகரமாக நிர்மாணித்தல், அதன் மூலம் உலகத்தின் விடுதலை இயக்கத்தின் மீது தாக்கம் செலுத்துதல் மற்றும்

புரட்சிகர, முற்போக்கு இயக்கங்களுக்கு உதவியும் ஆதரவும் அளித்தல்.

உலக சோஷலிச அமைப்பு சமூக முன்னேற்றத்தின் தீர்மானகரமான காரணியாக வளர்ச்சியடைந்திருக்கிறது. சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகள் தம்முடைய கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் தலைமையின் கீழ் சோஷலிச நிர்மாணத்தில் அதிகமான சாதனைகளை நிறைவேற்றியிருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சிகள், கட்சியைப் பற்றிய லெனினுடைய தத்துவத்தை ஆக முழுமையாகவும் நெகிழ்ச்சியாகவும் பயன்படுத்துகின்ற பொழுது பெருந்திரளான மக்களுக்குத் தலைமை தாங்கி புரட்சியை நடத்துவதிலும் சோஷலிசத்தை நிர்மாணிப்பதிலும் மிகவும் அதிகமான வெற்றிகளை அடைகின்றன என்பதை தேசிய விடுதலை மற்றும் சோஷலிசப் புரட்சிகள், சோஷலிச சமூக நிர்மாணம் ஆகியவற்றின் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. மாறாக, கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்தத் தத்துவத்தை வறட்டுத்தனமாக அணுகிய போதோ, இத்தத்துவத்தின் ஏதாவதொரு அம்சத்தை மறந்த போதோ, புறக்கணித்த போதோ அவை தம் செல்வாக்கையும் முன்னணிப் பாத்திரத்தையும் இழந்தன, புரட்சி இயக்கம் பின்னடைந்தது, சோஷலிசத்தின் வெற்றிகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டது.

பெருந்திரளான மக்கள் மத்தியில்

வேலை செய்வதுதான் கட்சி நடவடிக்கை யின் முக்கியமான துறை என்பதைக் கட்சி யைப் பற்றிய லெனினுடைய தத்துவத்தி லிருந்து அறிகிறோம். ''புரட்சி ஏற்படுமா, எப்பொழுது, எந்த சந்தர்ப்பங்களில் ஏற் படும் என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்கத் தின் சித்தத்தைப் பொறுத்திருக்கவில்லை; ஆனால் பெருந்திரளான மக்கள் மத்தியில் செய்யப்படுகின்ற புரட்சிகர வேலை ஒரு போதும் வீணாவதில்லை. பெருந்திரளான மக்களை சோஷலிசத்தின் வெற்றிக்குத் தயாரிக்கின்ற ஒரே நடவடிக்கை இதுவே'' என்று லெனின் எழுதினார்.*

பெருந்திரளான மக்கள் மத்தியில் புரட்சி கரமான நடவடிக்கை என்பது முதலா வதாக, அவர்களுடைய தீவிர நடவடிக்கை களையும் தம்முடைய நோக்கங்களைப் பற்றி அவர்களுடைய உணர்வையும் ஊக்கு வித்தலாகும்; அதற்கு எந்த மக்கள் இயக் கத்திலும் வளர்ச்சியடைகின்ற பல்வேறு போராட்ட வடிவங்களைப் பயன்படுத்துத லாகும். இயக்கங்களும் முன்முயற்சிகளும் வலிமையான புரட்சி வெள்ளத்தை ஏற் படுத்துகின்றன; அரசு-ஏகபோக முதலாளித் துவத்தின் ஆக வலிமையான சக்திகளால் கூட அதைத் தடுத்து நிறுத்த முடியாது.

லெனின் பெருந்திரளான மக்கள் மத்தி யில் கட்சியின் வேலையின் மீது, தொழி

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 17, p. 239.

லாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப் பற்றிய பிறகு கட்சி பெருந்திரளான மக் களுடன் தன்னுடைய பிணைப்புகளை வலுப் படுத்திக் கொள்வதன் மீது குறிப்பாக கவ னம் செலுத்தினார். சமுதாயத்தின் புரட்சி கர மாற்றத்தின் அளவும் சிக்கலான தன் மையும் அதில் மக்கள் அதிக எண்ணிக்கை யில் பங்கெடுப்பதும் மேன்மேலும் அதிகரிக் கின்ற பொழுது கட்சியின் அரசியல், ஸ்தா பன மற்றும் சித்தாந்தப் பாத்திரம் மேன் மேலும் அதிகமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது என்று லெனின் கருதினார். ''வரலாற்று நிகழ்ச்சிகளின் வீச்சும் விரிவும் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அவற்றில் பங்கேற்கும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக் கும். இதற்கு நேர்மாறாக நாம் கொண்டு வர விரும்பும் மாறுதல் எந்த அளவுக்கு அதிக ஆழமாக இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நாம் அதன் பாலான அக்கறை யையும் அறிவார்ந்த போக்கையும் அதிக மாக ஊக்குவித்து அது அவசியம் என்பதை மேலும் லட்சக்கணக்கான, கோடிக்கணக் கான மக்கள் திடமாக நம்பும்படி செய்ய வேண்டும்'' என்று லெனின் வலியுறுத்தி னார்.*

லெனினுடைய புத்தகம் மேற்கு ஐரோப்

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 11, பக்கம் 151.

பாவின் சமூக-ஜனநாயகக் கட்சிகளிலும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் மத்தியி லும் ஏற்பட்டிருந்த திருத்தல்வாதத்தை அம்பலப்படுத்தியது; மார்க்சியத்தை ''மறுத்துக் கூறுவதற்கு'' முயற்சி செய்த அனைவருடைய சந்தர்ப்பவாதத்தையும் அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் நலன் களுக்கு துரோகமிழைப்பதையும் தோலு ரித்துக் காட்டியது. தொழிலாளி வர்க்கத் தின் மீது முதலாளி வர்க்க சித்தாந்தத்தின் தாக்கம், தொழிலாளர் இயக்கத்தில் தன் னியல்பான தன்மையை வழிபடுதல், தொழி லாளர் இயக்கத்தில் சோஷலிச உணர்வின் பாத்திரத்தைக் குறைவாக மதிப்பிடுதல் ஆகியவை சந்தர்ப்பவாதத்தின் சித்தாந்தத் தோற்றுவாய்கள் என்று லெனின் சுட்டிக் காட்டினார்.

லெனின் ருஷ்யப் பொருளாதாரவாதி களின் திருத்தல்வாதத் தத்துவத்தையும் சந்தர்ப்பவாதக் கொள்கையையும் அம் பலப்படுத்தி பொருளாதாரவாதம் மேற்கு ஐரோப்பிய சந்தர்ப்பவாதத்தின் ஒரு ரகம் என்று விளக்கினார். சர்வதேச சந்தர்ப்ப வாதத்தை எதிர்த்துப் போராடிய லெனி னும் அவருடைய ஆதரவாளர்களும் பொரு ளாதாரவாதிகளிடமிருந்து சித்தாந்த ரீதியி லும் ஸ்தாபன ரீதியிலும் முறித்துக் கொண் டார்கள். ஒரு புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியை, புரட்சிகர நடவடிக்கைக் கட்சி யைத் தோற்றுவிப்பதற்கான செய்முறை

நடவடிக்கைகளுடன் இந்தப் போராட்டம் பிரிக்க முடியாதபடி இணைந்திருந்தது.

முதலாளித்துவ நாடுகளில் சந்தர்ப்பவாதத்துக்கான சமூக அடிப்படை நீடிப்பதால்—சந்தர்ப்பவாதம் அரசு-ஏகபோக முதலாளித்துவத்துக்குச் சேவை செய்கிறது—திருத்தல்வாதத்தின் வேர்களும் நீடிக்கின்றன. ஆகவே மார்க்சியத்தின் புரட்சிகரமான கோட்பாடுகளைத் திருத்தி மார்க்சிய-லெனினியத்துக்குப் பதிலாகப் பல்வேறு பிரதேசத் தத்துவங்களை நிறுவுதல் அல்லது தேசியவாத அல்லது வல்லரசுத் தலைமைவாதத் தத்துவங்களைக் கொண்டு ''வலுப்படுத்துகின்ற'' முயற்சிகள் நீடிக்கின்றன. தொழிலாளர் இயக்கத்தில் சீர்திருத்தவாதத்தை அல்லது முதலாளித்துவ தேசியவாதத்தை நுழைப்பதற்குச் செய்யப்படுகின்ற முயற்சிகளுக்கும் இது பொருந்தும்.

லெனின் எழுதிய **என்ன செய்ய வேண்டும்?** என்னும் புத்தகம் நவீன திருத்தல்வாதத்திற்கு எதிரான போராட்டத்தில் மகத்தான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை சந்தர்ப்பவாதத் திருத்தல்களுக்கு எதிராகப் பாதுகாக்கின்ற பொழுது முரணில்லாத, உறுதியான அணுகுமுறையின் அவசியத்தை அது எடுத்துக்காட்டுவதுடன் இன்றும் கூட இந்தப் போராட்டத்தில் ஒரு வலிமையான ஆயுதமாக அது பயன்படு

கிறது. இன்று மார்க்சிய-லெனினியத்தை விமர்சித்து அதை ''மறுப்பதற்கு'' முயற்சி செய்பவர்கள் அனைவரும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர்களுடைய முன்னோடிகள் பின்பற்றிய அதே சித்தாந்த, வர்க்க நிலைகளைத்தான் பின்பற்றுகிறார்கள். மார்க்சிய-லெனினியம் காலாவதியாகி விட்டது, சோஷலிசப் புரட்சி, தொழிலாளி வர்க்கம்அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல், போர்க்குணமிக்க, புரட்சிகர மார்க்சிய-லெனினியக் கட்சி ஆகியவை அவசியமில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய திருத்தல்வாதத்தில் உள்ள ஒரே ''புதிய'' அம்சம் எதார்த்த சோஷலிசத்தின் மீது அவர்களுடைய தாக்குதல்களே.

கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றிகரமான வேலைக்கும் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் அவசியமான நிபந்தனை வலதுசாரி மற்றும் ''இடதுசாரித்'' திருத்தல்வாதத்தை எதிர்த்து இரண்டு முனைகளில் போராடுதலே என்று லெனின் கருதினார்.

மார்க்சிய-லெனினியத்தை ஒரே விஞ்ஞானப் புரட்சிகரத் தத்துவம், தொழிலாளி வர்க்கம் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களின் தத்துவம் என்ற முறையில் பாதுகாக்கின்ற அதன் ஆதரவாளர்கள் இன்று இரண்டு முனைகளில்—வறட்டுச் சூத்திரவா

தம் மற்றும் திருத்தல்வாதம்—தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிய-லெனினியத்தின் சித்தாந்த எதிரிகளையும் எதார்த்த சோஷலிசம் மீது அவர்களுடைய தாக்குதல்களையும் உறுதியாக எதிர்க்கிறது. மற்ற மார்க்சிய-லெனினியக் கட்சிகளுடன் சேர்ந்து சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களிலும் சோஷலிச நிர்மாணத்திலும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையான பாத்திரத்தைக் குறைக்கின்ற, அவற்றின் ஒற்றுமையை அரித்தழிப்பதற்கு முயல்கின்ற திருத்தல்வாதத்தையும் சந்தர்ப்பவாதத்தையும் தீவிரமாக எதிர்க்கிறது. கட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைப் பாதுகாப்பது கம்யூனிஸ்டுகள் அனைவருக்கும் சர்வதேசியவாதக் கடமை என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

புரட்சிக்காரர்களும் பொதுவாக முற்போக்காளர்களும் **என்ன செய்ய வேண்டும்?** என்ற புத்தகத்தை மிகவும் விரும்புவது அதன் முக்கியத்துவத்தைத் தெளிவாக விளக்குகிறது. இப்புத்தகம் உலகில் பரவலாகப் படிக்கப்பட்டிருக்கிறது. சோவியத் யூனியனிலும் மற்ற நாடுகளிலும் இப்புத்தகம் 60 மொழிகளில் 244 பதிப்புகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. பிரதிகளின் மொத்த எண்ணிக்கை 1,35,58,000 ஆகும்.

சோவியத் யூனியனுக்கு வெளியில் 37 நாடுகளில் 41 மொழிகளில் 199 பதிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

மாமேதை லெனின் எழுதிய என்ன செய்ய வேண்டும்? என்ற புத்தகம் சர்வதேச கம்யூனிஸ்ட், தொழிலாளர் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களுக்குப் புரட்சிகரமான சிந்தனை மற்றும் புரட்சிகர நடவடிக்கையின் பிறப்பிடமாகத் தொடர்ந்து இருக்கிறது.

# சொற்றொடர் விளக்கம்

அமைச்சரவைவாதம் (மில்லிரானிசம்)—பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கங்களில் சோஷலிஸ்டுகளின் பங்கேற்பு பற்றிய சந்தர்ப்பவாத செயல்தந்திரம். 1899இல் பிரெஞ்சு சோஷலிஸ்டு மில்லிரான், வால்டேக்-ரூஸ்ஸோவின் முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்ததையடுத்து இந்த வார்த்தை வந்தது. அமைச்சரவைவாதத்தை திருத்தல்வாதம், ஒடுகாலித்தனம் என்று வருணித்த லெனின், சமூக-சீர்திருத்தவாதிகள் முதலாளித்துவ அரசாங்கத்தில் இடம் பெறுவதன் மூலம் தவிர்க்க இயலாதபடி பொம்மைகளாயினர், முதலாளிகளின் முகத்திரைகளாக, மக்கள் திரளினரை ஏமாற்றும் கருவியாக மாறினர் என்று சுட்டிக் காட்டினார்.

இரண்டாவது அகிலம்—சோஷலிஸ்டு கட்சிகளின் சர்வதேச கூட்டு, 1889இல் தோற்றுவிக்கப்பட்டது. ஏகாதிபத்திய சகாப்தத்தின் ஆரம்பத்திலிருந்து சந்தர்ப்பவாதப் போக்குகள் இதில் மேலோங்கலாயின. 1914—1918ஆம் ஆண்டுகளின் முதலாவது உலக யுத்தம் ஆரம்பமான போது,

இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள், தத்தம் நாடுகளிலிருந்த முதலாளித்துவ அரசாங்கங்களின் ஏகாதிபத்தியக் கொள்கையை வெளிப்படையாக ஆதரிக்கத் தலைப்பட்டனர்; இரண்டாவது அகிலம் கலைந்தது.

**எதேச்சாதிகார ஆட்சி**—ருஷ்யாவிலிருந்த முடியாட்சி வடிவம். 16—17ஆம் நூற்றாண்டுகளில் ஜார் போயர் டூமாவுடன் சேர்ந்து ஆட்சி செய்தான், 18ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டு ஆரம்பம் வரை முழுக்க முழுக்க முடியாட்சியாக இருந்தது.

**ஃபேபியன்வாதிகள்**—1884இல் தோற்றுவிக்கப்பட்ட ஆங்கிலேய சீர்திருத்தவாத ஸ்தாபனமாகிய ஃபேபியன் சங்கத்தின் உறுப்பினர்கள். முதலாளி வர்க்க அறிவுஜீவிகளாகிய விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், அரசியல் பிரமுகர்கள்தான் பெரும்பாலும் இச்சங்க உறுப்பினர்களாயிருந்தனர். பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் அவசியத்தையும் சோஷலிசப் புரட்சியையும் மறுத்த இவர்கள், சிறு சீர்திருத்தங்கள், படிப்படியான சமுதாய மாற்றங்கள் மூலமாக மட்டுமே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுவது சாத்தியம் என்றனர்.

“கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை”—விஞ்ஞான கம்யூனிசத்தில் முதல் வேலைத்திட்ட ஆவணம் (1848). மார்க்சியத்தின் எல்லா அடிப்படைக் கருத்துகளும் இதில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. “கம்யூனிஸ்டுச் சங்கத்தின்” கட்டளைக்கிணங்க, அதன் வேலைத்திட்டமாக இது கா. மார்க்ஸ், பி. எங்கெல்சால் எழுதப்பட்டது. “உலகத் தொழிலாளிகளே, ஒன்றுசேருங்கள்!” என்ற கோஷத்துடன் “அறிக்கை” முடிவடைகிறது.

“கம்யூனிஸ்டுச் சங்கம்” (1847—1852)—புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முதல் சர்வதேச ஸ்தாபனம். கா. மார்க்ஸ், பி. எங்கெல்சால் லண்டனில் தோற்றுவிக்கப்பட்டது. முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிவது, வர்க்கப் பகைமைகளின் அடிப்படையிலான பழைய முதலாளித்துவ சமுதாயத்தை ஒழித்துக் கட்டி, வர்க்கங்களும் தனிச் சொத்துடைமையும் இல்லாத புதிய சமுதாயத்தைத் தோற்றுவிப்பது என்பதுதான் இச்சங்கத்தின் லட்சியமாக இருந்தது. “கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை” (1848) இச்சங்கத்தின் வேலைத்திட்டமாக இருந்தது. பாட்டாளி வர்க்கக் கட்சியின் கருவாக, சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் (முதலாவது அகிலத்தின்) முன்னறிவிப்பாளனாக இச்சங்கம் பெரும் வரலாற்றுப் பங்காற்றியது.

காடேட்டுகள்—*1905—1917* இல் ருஷ்யாவி லிருந்த முக்கிய மிதவாத முடியரசு முதலாளி வர்க்கத்தின் கட்சியாகிய அரசியலமைப்புச் சட்ட ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள். அரசியலமைப்புச் சட்ட ரீதியான முடியரசும் நாடாளுமன்ற ரீதியான முடியரசும், பூர்ஷ்வா சுதந்திரங்கள், நிலக்கிழார்களின் நிலவுடைமையை தக்கவைத்தல் என்பது தான் இக்கட்சியின் வேலைத்திட்டமாகும். புரட்சிகர இயக்கத்திற்கு எதிரான போராட்டம்தான் தம் பிரதான லட்சியமென்று கருதிய காடேட்டுகள், ஆட்சியை ஜார் மன்னனுடனும் நிலக்கிழார்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்பினர்.

சோஷலிஸ்டு-புரட்சிக்காரர்கள் (எஸ்ஸேர்கள்) — ருஷ்யாவிலிருந்த குட்டி முதலாளி வர்க்கக் கட்சி; *1901* இறுதி—*1902* துவக்கத்தில் பல்வேறு நரோத்னிக் குழுக்கள் இணைந்ததால் தோன்றியது. இவர்கள், பாட்டாளிக்கும் சிறு சொத்துடைமையாளனுக்கும் இடையிலான வர்க்க வேறுபாடுகளைக் காணவில்லை, விவசாயிகளிடையேயான வர்க்கப் பிரிவுகளையும் முரண்பாடுகளையும் மறைத்தனர், புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை மறுத்தனர். எஸ்ஸெர்களின் கண்ணோட்டங்கள் நரோத்னிக் இயக்கம், திருத்தல்வாதம் ஆகியவற்றின் கருத்துகளின் கதம்பம் எனலாம்.

திரோத்ஸ்கிவாதம்—தொழிலாளர் இயக்கத்தில் ஒரு சித்தாந்த, அரசியல் குட்டி முதலாளி வர்க்கப் போக்கு; இது தன் சந்தர்ப்பவாத சாரத்தை இடதுசாரி தீவிர வாதக் கோஷங்களால் மூடி மறைத்தது. இது அதிதீவிர புரட்சித் தன்மையிலிருந்து சரணாகதி வரை ஊசலாடியது. சித்தாந்தி லி. தே. திரோத்ஸ்கியின் (1879—1940) பெயரைக் கொண்டிருக்கிறது. தொழிலாளர் இயக்கத்தின் செயல்திட்டம், உடனடி செயல்தந்திரங்கள் சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளிலும் திரோத்ஸ்கிவாதக் கண்ணோட்டங்கள் லெனினியத்திற்கு எதிரானவையாக உள்ளன. இன்று ஒரு சில மேற்கத்திய நாடுகளில் உள்ள நவீன திரோத்ஸ்கிவாதிகள் தமது அதிதீவிர புரட்சிக் கோஷங்களால் மக்கள் திரளினரை அதிசாகசப் போராட்டங்களுக்குத் தூண்டிவிடப் பார்க்கின்றனர்.

பாரிஸ் கம்யூன்—வரலாற்றிலேயே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் அனுபவம், பாட்டாளி வர்க்கப் புரட்சியையடுத்து பாரிசில் தோற்றுவிக்கப்பட்ட முதல் தொழிலாளி வர்க்க அரசாங்கம். 1871 மார்ச் 18 முதல் மே 28 வரை 72 நாட்கள் நிலவியது.

பிளாங்கிவாதம்—பிரெஞ்சு சோஷலிஸ்ட் இயக்கத்தின் பிரபல புரட்சிவீரரும்

பிரெஞ்சு கற்பனாவாத கம்யூனிஸ்டுமான லுயீ ஒகுஸ்ட் பிளாங்கி (1805—1881) தலைமை தாங்கிய ஒரு போக்கு. பிளாங்கிஸ்டுகள் வர்க்கப் போராட்டத்தை மறுத்தனர், ''பாட்டாளி வர்க்கப் போர்ராட்டத்தின் மூலமின்றி, சிறு அறிவுஜீவிக் குழுவின் சதிகளால் மனிதகுலத்தை கூலியடிமையிலிருந்து விடுவிக்க முடியுமென'' (வி. இ. லெனின்) எதிர்பார்த்தார்கள்.

புரூதோன்வாதம் — விஞ்ஞானத்திற்கு புறம்பான, மார்க்சியத்திற்கு விரோதமான குட்டி முதலாளி வர்க்க சோஷலிசப் போக்கு; பிரெஞ்சு அராஜகவாத சித்தாந்தி புரூதோனின் பெயரைத் தாங்கி நிற்கிறது. புரூதோன் சிறு தனிச் சொத்துடைமையை என்றென்றும் நிலையானதாக மாற்றக் கனவு கண்டார், பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் இவர் புரிந்து கொள்ளவில்லை, வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றை எதிர்த்தார், அராஜகவாத நிலைகளிலிருந்து அரசின் அவசியத்தை மறுத்தார்.

முதலாவது அகிலம் (சர்வதேசத் தொழிலாளர் சங்கம்)—1864இல் கா. மார்க்சால் தோற்றுவிக்கப்பட்ட முதல் வெகுஜன சர்வதேசப்

பாட்டாளி வர்க்க ஸ்தாபனம். மார்க்சியத்தைப் பரப்புவதிலும் சோஷலிசத்தைத் தொழிலாளர் இயக்கத்துக்குள் கொண்டு வருவதிலும், உலகெங்குமுள்ள தொழிலாளர்களின் சர்வதேச ஒருமைப்பாட்டை பலப்படுத்துவதிலும் இது பெரும் பங்காற்றியது.

**முதல் ருஷ்யப் புரட்சி (1905—1907)**— தன் சாரத்தில் இது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாக இருந்தது. ஜாரிச எதேச்சாதிகாரத்தை முறியடிப்பது, ஜனநாயகக் குடியரசை நிலைநாட்டுவது, 8 மணி நேர வேலை முறையைக் கொண்டு வருவது, பெரும் நிலவுடைமையாளர்களின் நிலங்களைக் கைப்பற்றுவது என்பவைதான் இப்புரட்சியின் உடனடி லட்சியங்களாக இருந்தன. பாட்டாளி வர்க்கமும் (புரட்சிகர முன்னணிப்படை), விவசாயிகளும், பின் தங்கிய தேசிய பிரதேசங்களின் ஒடுக்கப் பட்ட மக்களினத்தவரும் இதன் இயக்குச் சக்திகளாக இருந்தனர். 1905 ஜனவரி 9இல் பீட்டர்ஸ்பர்கில் தொழிலாளர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டிலிருந்து இது ஆரம்பமானது. மாஸ்கோவில் நடந்த டிசம்பர் ஆயுத எழுச்சி இதன் உச்சக் கட்டமாகும். இப்புரட்சி ஜாரிச எதேச்சாதிகார அமைப்பை ஆட்டங்காண வைத்தது, பிந்தைய வர்க்கப் போராட்டங்களுக்குப் பாதை சமைத்தது, மாபெரும் அக்டோபர்

சோஷலிசப் புரட்சியின் பிரதான ஒத்திகை யைப் போல் திகழ்ந்தது.

**மென்ஷிவிக்குகள்** — ருஷ்ய சமூக-ஜன நாயகத்தின் சந்தர்ப்பவாதப் போக்கு, சர்வ தேச சந்தர்ப்பவாதத்தின் திசையமைவு களில் ஒன்று. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங் கிரசில் (1903) புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியை அமைப்பது சம்பந்தமான லெனி னியக் கோட்பாடுகளை எதிர்த்தவர்கள், கட்சியின் மத்திய உறுப்புகளுக்கான தேர் தல்களில் சிறுபான்மையினராய் ஆனதும் (மென்ஷின்ஸ்த்துவோ என்று ருஷ்ய சொல் லிற்கு சிறுபான்மை என்று பொருள்) இது தோன்றியது. மென்ஷிவிக்குகள் சித்தாந்த ரீதியாக பெர்ன்ஷ்டைன்வாதம், ''சட்ட பூர்வ மார்க்சியம்'', பொருளாதாரவாதம் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள்.

**ருஷ்ய விவசாயக் கூட்டுச் சமூகம்**—விவசாயி கள் ஒன்று சேர்ந்து கூட்டாக நிலத்தைப் பயன்படுத்திய ஒரு வடிவம்; இதில் கட்டாயமாக பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிட வேண்டியிருந்தது, இச்சமூகத்திடம் பிரிக்க முடியாதபடி காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் இருந்தன. இந்த விவசாயக் கூட்டுச் சமூகத்தில் செலுத்த வேண்டிய வரிகள், கட்டணங்களை முழுமையாகவும் உரிய நேரத்திலும் செலுத்தவும், அரசு,

நிலக்கிழார்களின் சகலவித கட்டளைகளையும் நிறைவேற்றவும் விவசாயிகள் மீது வலுக்கட்டாயமாக, கூட்டாகப் பொறுப்பு சுமத்தப்பட்டிருந்தது, அடிக்கடி நிலம் மறு பங்கீடு செய்யப்பட்டது, நிலத்தைப் பெறாமல் மறுக்க உரிமை இல்லாமலிருந்தது, நிலத்தை விற்பதும் வாங்குவதும் தடைசெய்யப்பட்டிருந்தது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

## விற்பனையாளர்கள்

### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

**தலைமை அலுவலகம்**

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

**ஷோ-ரூம்**

136, அண்ணாசாலை, சென்னை—600002

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு,
திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

**விற்பனை நிலையங்கள்**

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி,
தஞ்சாவூர் சேரிங் கிராஸ்,
உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில்,
திண்டுக்கல்—624001